திருஞான முத்திரைக்
கோவை 3; ஸ்ரீராமஜயம்

# ஸ்ரீ சடகோப
# திவ்ய சரித்திரம்

திருக்குருகூர் நித்தியவாசியும், தமிழாசிரியரும்
உபயகவி, வித்வானுமான
ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் ஸ்வாமிகளென்ற
தேவராஜ (தேவேச) பாரதிகளால்
இயற்றப்பட்டது.

சுவடியாயிருந்ததை,

ஷெயார்மாளுக்கரும், ஆழ்வார்திருநகரி ஸ்வாமி ஆதிநாதராழ்வார் ஸந்நிதி ஸ்தானீகரும், ஸ்வாமி தெற்குத் திருவேங்கிடமுடையான், ஸ்வாமி ஸ்ரீராமன் அழகர் சந்நிதிகளின் சொந்தக்கார பாத்தியஸ்தர்களிலொருவருமான
பெரியன் தேசிகமய்யங்காரென்ற
பெரியன் வெங்கிட்ட நாராயணய்யங்கார்
குமாரர்
பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸனால்
எடுத்தெழுதப்பட்டு
ஸ்ரீ உ. வே. நல்லான் சக்ரவர்த்தி, எட்டயாபுரம் தமிழாசிரியர்
R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகளால்
தகுந்த ஆதாரங்களுக்கிணங்க பார்வையிடப்பட்டு

படங்களுடன்

பாளையங்கோட்டை அச்சாபீசில் அச்சிட்டு
1929-ளு டிசம்பர்மீ க்கு 1105-ளு கார்த்திகைமீ த்தில்
வெளியிடப்பட்டது

---



ராப்பர் | காலிகோ
விலை ரூபாய் இரண்டு] | [ரூபாய் இரண்டு அணா ஆறு

# திருஞான முத்திரைக் கோவை

---

1. உபயகவியப்பா இயற்றிய ஸ்வாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு 0—4—0

2. அநந்தாச்சாரியாரியற்றிய ஸ்ரீசடகோபன் சந்ரகலாமாலை 0—1—0

3. ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் என்ற தேவேசபாரதிகளியற்றிய ஸ்ரீசடகோப திவ்ய சரித்திரம் 15 படலங்களில் சுமார் 1200 திருவிருத்தங்களாக ஓர் புராணகாவியமாய் அமைந்தது. பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸனால் எடுத்தெழுதப்பெற்று ஸ்ரீ உ. வே. நல்லான் சக்ரவர்த்தி (எட்டயபுரம் தமிழாசிரியர்) R. ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாமியால் பிழையறப்பரிசோதிக்கப்பட்டு அழகான நான்கு படங்களுடன் வெளியிடப்பட்டது. 2—0—0

” ” பைண்டு 2—6—0

4. திவ்யப்ரபந்த பாசுரப்படி ஸ்ரீராமாயணம் இனும்.

மணவாளமாமுனிமாலை 0—1—0

ஷை நூற்றந்தாதி 0—1—0

ஸ்ரீ சடகோப திவ்விய சரித்திர 4படங்களும், 1. சின்னக்கலியன் ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி வானமாமலை மடம் 25-வது பட்டம். 2. எம்பெருமானர் (உடையவர்). 3. ஸ்வாமி ஆதிநாதராழ்வார் சந்நதி வீதி 4. ஸ்வாமி நம்மாழ்வார் மதுரகவிகள். தனித்தனி 0—2—0

நான்கு படங்களும் 0—7—0

## *From*

S. திருமலைஸாமி அய்யங்கார்,
தமிழாசிரியர், செண்ட் சேவியர் கலாசாலை,
பாளையங்கோட்டை.

பெரியன் நா வே ஸ்ரீநிவாஸன்,
திருஞான முத்ரப்ரசுராலயம்,
ஆழ்வார்திருநகரி.

கிருஷ்ணய்யர்,
வேம்பத்தூர் மடம், தெற்கு ரதவீதி,
திருநெல்வேலி டவுன்.

திருஞான முத்திரைக்
கோவை 3;

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீ

# -கோப திவ்ய சரித்திரம்

திருக்குருகூர் நித்தியவாசியும், தமிழாசிரியரும்
உபயகவி வித்வானுமான
ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் ஸ்வாமிகளென்ற
தேவராஜ (தேவேச) பாரதிகளால்
இயற்றப்பட்டது.

சுவடியாயிருந்ததை,
'ர் மாணுக்கரும், ஆழ்வார்திருநகரி ஸ்வாமி ஆதிநாதராழ்வார்
ஸந்நிதி ஸ்தானீகரும், ஸ்வாமி தெற்குத் திருவேங்கிட
முடையான், ஸ்வாமி ஸ்ரீராமன் அழகர் சந்நிதிகளின்
சொந்தக்கார பாத்தியஸ்தர்களிலொருவருமான
பெரியன் தேசிகமய்யங்காரென்ற
பெரியன் வேங்கிட்ட நாராயணய்யங்கார்
குமாரர்
ெபரியன் வே. நா. ஸ்ரீநிவாஸனால்
எடுத்தெழுதப்பட்டு

உ. வே. நல்லான் சக்ரவர்த்தி, எட்டயாபுரம் தமிழாசிரியர்
R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகளால்
தகுந்த ஆதாரங்களுக்கிணங்க பார்வையிடப்பட்டு
படங்களுடன்
பாளையங்கோட்டை அச்சாபீசில் அச்சிட்டு
1929-ஞு டிசம்பர்மீ க்கு
1105-ஞு கார்த்திகைமீ த்தில்
வெளியிடப்பட்டது

---



ப்பர்
[ இரண்டு]

காலிகோ
[ரூபாய் இரண்டு அணு ஆறு

ஸ்ரீராமஜயம்
ஸ்வாமி தெற்குத் திருவேங்கடமுடையான் துணை
ஸ்ரீ சடகோபாய மங்களம்

# ஸ்ரீ சடகோப திவ்விய சரித்திரம்

## படல அட்டவணை



## ஸ்ரீசடகோப திவ்விய சரித்திரத்தில் அடங்கியுள்ள படங்கள் நான்கின் விபரங்கள்

1. ஸ்ரீ வானமாமலை சின்னக்கலியன் ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிகள் 25-வது பட்டம்.
2. எதிராஜர் (உடையவர்).
3. திருக்குருகாபுரி க்ஷேத்திரமென்ற ஆழ்வார் திருநகரி, ஸ்வாமி ஆதிநாதராழ்வார் சந்நிதி, வீதி.
4. ஸ்வாமி நம்மாழ்வார் யோகாஸனத்தில் எழுந்தருளியிருந்த 16-வது திருநக்ஷத்திரத்தில், மதுரகவிகள் ஸேவித்து நிற்றல்.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய உபய வேதாந்த பிரதிஷ் டாபனாசார்யராய் ஸ்ரீமத் ராமாநுஜாபராவதார ஸ்ரீமத் வரவர முனீந்த்ர அஷ்ட திக்கஜ ப்ரதம பரிகணிதராய் ஸ்ரீமத் ரம்யஜா மாத்ரு யதிவர க்ருபாலப்த ஸ்ரீவரமங்கை ஸமேத ஸ்ரீ தேவநாயக அந்தரங்க கைங்கர்யைக துரந்தரராய் அகண்ட மஹீமண்டலாலங் கார மஹீபால கோடீர கோடீகடித மணிகிரண படல பாடலித பாதபீட பர்யந்த ஆசார்யராய் பரம புருஷார்த்த லக்ஷண விலக்ஷண மோக்ஷைக ப்ரயோஜனார்த்த பஞ்சக ஜ்ஞானைக ஸாதன ஸ்ரீமத் அஷ்டாக்ஷராதி ரஹஸ்யத்ரய ஜகதுஜ்ஜீவனாசார்யராய் ஸகல முனிஜன மானஸாரவிந்த ஸந்தோஹ ஸமுல்லாஸ ஸமுல்லஸித ஸ்ரீராஜ ஹம்ஸாவதாரராய் ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த் தாரகாசார்ய ஸார்வபௌமராய் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீவானாசல யதீந்த்ரராய் சிரீவரமங்கல நகருக்கு திலகபூதராய் எழுந்தருளி யிருக்கும்

**ஸ்ரீ வானமாமலை 25–வது பட்டம்**

**சின்னக் கலியன் ராமாநுஜ ஜீயர்ஸ்வாமிகள், ஸந்நிதியில்**

**இச் “சடகோப திவ்விய சரித்திரம்”**


எடுத்தெழுதிய, ஷை ஸ்வாமிகளின் திருவடித்தாமரைகளை

ஆச்ரயித்த, சிஷ்யனான

பெரியன் வெங்கிட்டநாராயணய்யங்கார் குமாரர்

**பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸனால்,**

சமர்ப்பிக்கப்பட்டது.




ஸ்ரீ வானமாமலை சின்னக்லியன் ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்
**25-வது பட்டம்.**

ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்

ஸ்வாமி தெற்குத்
திருவேங்கடமுடையான்
துணை



ஸ்ரீ சடகோபாய
மங்களம்

# ஸ்ரீ சடகோப திவ்விய சரித்திர வரலாறு

இத் திவ்விய ஸ்தலத்தில் ஜனித்த ஸ்ரீ பூர்வசிகா ஸ்ரீ வைஷ்ணவர்களுள், எம்பெருமானார் தாசர் வம்சா வழியில் ஒருவராக நிலைத்த அம்மாளய்யன் என்பாரின் சந்ததிகள், பெரியன், சின்னய்யன் என்னும் குடும்பஸ்தர்களாவர். இவர்களுக்கு மூல புருஷனை அம்மாளய்யன் காலமுதற்கொண்டு, சொந்த குலாராதனை கோயில் கொண்டருளிய மூர்த்திகளாயும், குலதனங்களாயுமுள்ள ஸ்வாமி தெற்குத் திருவேங்கடமுடையான், ஸ்ரீ அழகர் சந்நதிகள் முறையே தெற்கு, வடக்கு, மாடவீதிகளிலுள. பெரியன் குடும்பத்தவர்களுடைய கிரக ஆராதனை மூர்த்திகளாயுள்ள, ஸ்ரீராமன் முதலான எம்பெருமான்களும் [சுமார் 83 ஆண்டுகளுக்கு முன்னர்] ஷை ஸ்ரீ அழகர் சந்நதியில், எழுந்தருளப்பண்ணுவித்து, இக் குடும்பத்தவர்களால் தனியாக ஆராதிக்கப்பட்டுவருகிறது.

இத்துடன் பெரிய ஸந்நதியான ஸ்வாமி ஆதிநாதராழ்வார் ஸந்நதி கவுரவ ஸ்தானீகர்களுள், முதன்மை ஸ்தானத்தையுடையவர் முறையே பெரியன், சின்னய்யன், குடும்பஸ்தர்களாவர். தேவஸ்தானம் தவிரவுள்ள சந்நதி சம்பந்தப்பட்ட சகல திறவுகோல்களும் இக்குடும்பஸ்தர்கள் வசம் தான் பரம்பரையாயிருந்து அவசியமான காலங்களுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இம்மாதிரியான கோவில் திறவுகோல் நிர்வாகமுள்ள ஸ்தானீகர்களாய், தொன்று தொட்டு இன்றுவரை, கவுரவ கைங்கர்யஞ்செய்து, உரிய சுதந்தரமரியாதைகள் அடைந்துவருபவர்கள் பெரும்பாலான ஸ்ரீவைஷ்ணவ [திருப்பதி] திவ்வியதேசங்களில் ஸ்ரீபூர்வசிகா ஸ்ரீவைஷ்ண

வர்களே உரியவர்களாயிருப்பதுபோல, இத்திவ்விய தேசத்திலும் இப்பெரியன் சின்னய்யன் குடும்பத்தவர்களுக்கும், தொன்று தொட்டு இன்றுவரையிருந்து ஷை குலமூர்த்திகளநுக்ரகங்களால் நடந்துவருகின்றன.

இவ்வரிய பெரிய எம்பெருமான்கள் ஸேவா கைங்கரியாநுக்ரகங்களால், பெரியன் குடும்பஸ்தர்கள் ஒருவரில் 1041-ஆம் ஆண்டு பங்குனிமீ 19உ ஜனித்த எனது திருத் தகப்பனரான ஸ்ரீமான் பெரியன் தேசிகமய்யங்காரென்ற, பெரியன் வெங்கிட்ட நாராயணய்யங்காரென்பாரும் ஒருவராவர்; பிறந்தவுடனே ஆறுவது நாளில் தாயைத்துறந்து, ஷை எம்பெருமான்களநுக்ரகங்களால் குறைவற வளர்ந்து, வைதிக, லௌகிக, படிப்பினைகளிலு முதிர்ந்து, தனது அறுவதாவது வயதான 1100-ம் ஆண்டு ஆடிமீ 1உ ஆசார்யன் திருவடிகளில் சேர்ந்தார். தமிழில் அதிகப்பிரியமுள்ளவர். பழைய தமிழ் அந்தாதிகள், மாலைகள், கம்பராமாயணம், ஆழ்வாராதிகள் பிரபந்தங்கள், இன்னுமநேகமான பழம் பெரும் நூல்களாகிய சுவடிகள் சேகரித்து, ஸ்ரீ. உ. வே. பண்டிட் P. R. கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமிகளிடம் கொடுத்துதவியுள்ளார்கள். மணவாளமாமுனி மாலை, மணவாளமாமுனி நூற்றந்தாதி இவைகளும் ஷை கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமிகளைக்கொண்டு, தன் சொந்தத்தில் வெளிப்படுத்தியுள்ளார்கள். இவர்களுக்கு பதினேராவது வயதுவரை கல்வி கற்பித்துவந்தவர், அக்காலத்தில் மிகவும் பிராபல்யமான தமிழாசிரியராயும், உபயகவி வித்வானு (ஸ்ரீ பூர்வசிகா ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணிகளிலொருவரு)மான, ஸ்ரீ. உ. வே. தேவராஜய்யங்கார் ஸ்வாமிகளென்ற, தேவராஜ [தேவேச] பாரதிகளாவர். இவருக்கு இரு கனிஷ்ட சகோதரர்கள் அனந்தாசாரியார் சேஷ பாரதிகள். மூவரிலும் முதல்வரான இவரே [தேவேச பாரதிகளே] கவித்துவத்திலும் முதல்வராவர் என்பார் பெரியர். இவர் ஸ்ரீ கூரத்தாழ்வான் சந்நதி, அண்ணன் திருமாளிகை திருவாராதன கைங்கர்யங்களும், தமிழாசிரியத் தொழிலும் நடாத்திவந்தார். இவரியற்றியுள்ள நூல்கள் எத்தனையோ? இவர் காலத்தில், நவ திருப்பதிகளிலொன்றான, "துலைவில்லி மங்கலம் தேவர் பிரான்" விஷயமாய் 'சந்திர 'கலா மாலை' ஒன்று இயற்றி, வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இது காணக் கிடைக்கவில்லை. இவரே

இச் சடகோப திவ்விய சரித்திரமுமியற்றி, அரங்கேற்றியதாக வுள்ள சுவடிப் பிரதி காணக் கிடைத்தது சுமார் 1926ல். அதற்கு முன் என் தகப்பனாரால் காகிதக் கையெழுத்துப் புத்தகத்தில் சுமார் 400. [நானூறு] திரு விருத்தங்களடங்கிய "ஸ்ரீ சடகோப திவ்விய சரித்திரமும்" துணையாய்க் கொண்டு ஷை எம்பெருமான் களநுக்ரகங்களாலும், ஆசார்யானுக்ரகத்தாலும் எடுத் தெழுதி முடிக்க நேரிட்டது. காலத்தில் ஸ்ரீ. உ. வே. நல்லான் சக்ரவர்த்தி [எட்டயாபுரம் தமிழாசிரியர்] R. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமிகள் மிகவும் கிருபைகூர்ந்து, எழுந்தருளியிருந்து பல ஆதாரப் பிரதிகளுக்கிணங்க பார்வையிட்டு, அச்சுப் புரூவ்கள்வரை நேரில் பார்த்துத் திருத்திக்கொடுத்துள்ள உதவியென்றும் மறக்கற்பாலதன்று.

இவ்வபூர்வ சடகோப திவ்விய சரித்திர ஒரு சுவடிப் பிரதியைத்தவிற, எவ்வளவோ முயன்றும், ஒத்த துணைப் பிரதி கிடைக்க மார்க்கமில்லாததால், கிடைத்ததைக்கொண்டு, இந்நிலைமையில், முற்றுப்பெற்று, வெளி வருகிறது வேறு சுவடி யிருந்து, பாடாந்தரங்கள் கிடைத்து, பெரியோர்கள் கிருபைகூர்ந்து தெரிவிக்கும் விஷயத்தில், மறு பதிப்பில் சேர்த்து, வெளிப்படுத்த ஆசையுள்ளவனாயிருக்கிறேன்.

குறிப்பிட்ட காலத்தில் சௌகர்யம்போல் திருப்திகரமாய் அச்சிட்டு புத்தக உருவாகிக்கொடுத்த பாளையங்கோட்டை அச்சாபீஸ் (புரோப்ரைட்டர்) சோரந்தக்காரர் K. D. முத்தையா அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

| | |
|---|---|
| திருஞான முத்திரைப்<br>பிரசுராலயம்<br>ஆழ்வார்திருநகரி<br>1929ஞு டிசம்பர்மீ<br>௧௧0௫-ஞு கார்த்திகைமீ | பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸன் |

ஸ்ரீராமஜெயம்

# சடகோப திவ்ய சரித்திரம்

---

## பாயிரம்

---

உலக மீரேழி னுள்ளவும் பரூர்வன வேயாதி
யலகிலா வுயிர்கட்கெல்லாமக மொடு புறமாய் நின்றங்
கிலனுளனென்னு முரைக்கு மிசைந்து சாத்விகர்கள் போற்றும்
வலமுறு திரு வைகுந்த மாயவனுகந்து முன்னாள், (க)

அரவர சணைத்து நீ யிவ்வவனி போயிரு நூறாண்டு
பரமதக் களை கடிந்து பாடிய முரைத்து வாவென்
றுரை செயப் பெரும்பூதூர் வந்துதித்து நூற்றிருபதேழிற்
பரன் றணவாற்ற கில்லாப் பரமனோடெழுந்த வேலை, (உ)

குரகதக் கயவாய் விண்ட கோவலனெதியை நோக்கித்
திரை கடலுலகில் முன்போற் சென்றவதரித்து நம்மை
மருவிய நிலைவை நீக்கி வாருமென் றுரைப்ப நாமம்
வர வர முனியென்றோத வைணவர் குலத்து மன்னோ. (௩)

தாதுகு நறை வண்டுண்டு ததைமலர்ப் பழனஞ் சூழுங்
கோதிலா மறையோர் வாழ் தென்குருகை வந்தவதரித்து
மாதுலர் க்ரகம் போய் வாழ்ந்து மற்று மீண்டனுகிமாற
னோது செந்தமிழ் வேதார்த்த முரைத்தரும் பொருட்டே
னுண்ணும். (ச)

காலையோர் புனிதன் ஞாதிக் காரணண்டிறந்த வாய்மை
சீல மாதவனுக் கோதத் தீம் பயனுகரும் கன்றைக்
கோல வானினத்தினின்று கூட்டறப் பிரித்ததே போற்
சால கொந்திறந்தோர்க் காகுஞ் சடங்கினைக் கழித்த பின்னர். (ரு)

இல்லறத் தியலிலின்ன மியைந்திடிற் பரநாடேகத்
தொல்லை மிக்குறு மென்றெண்ணித் துரியமா மனுநூலாதி
வல்லமெய்ப் புனிதனுயெண் வாரணமெனவும் போதத்
தெல்லையில் குணத்தின் மிக்க வெண்மரோடியையுங் காலை. (சு)

கனிந்துள முருகி யட்டல சங்களம் முனிதாள் சென்னி
புனைந்து காவீறன் மற்றும் புனிதர் வைபவங்கள் கேட்க
நினைந்தன முரைத்தியென்ன நிமலனவ் வடியர் தங்கள்
மனங்களி துளங்கச் சொன்னான் மணிப் பிரவாளந் தன்னில். (எ)

என்ன மாதவத்து வைகும் மணவாள வெதியுமன்பா
னன்னில்ல யுணருமட்ட கசங்களு நனியுகப்பச்
சொன்ன செஞ்சொற்களாய குருபரம் பரையைக் கேட்டங்
கன்னவ ருகந்தானந்த வார்கலி படிந்தாரன்றே. (அ)

கோதி லந்நூற்கு நாமங் குருபரம் பரையென் றோதி
மாதவ னுரைதத வாய்மை மறையொடுந் தமிழுஞ் சேர்ந்த
தாதலி னுணரவல்ல வதிகாரிககன் றி மற்றோ
ரோதவொண் ணாததானு முகமற் றிருத்தலானும். (கூ)

உயக்கருத் துடையராய்வந் துளங்கனிந் துணர்வோர்க் கெல்லா
மயக்கறவ குளமாலே வரதனு வீறன் மற்றுந்
துயக்கறு பதன்மர்தங் கடியநற் காதைமுற்று
மியற்றமிழ் தன்னிற்பேர்த்திங் கின்புற விசைப்பீரென்ன. (௰)

பத்துநூற் றெருநாற்பத் தேழாண் டிடபமதாந் திங்க
ளுத்திரட்டாதி நன்னாளந் நகருறு தேவேச
வித்தகன் சடகோபன் றிவ்ய சரித்திர மென்றோதி
அத்தனங் கூரத்தாழ்வான் றளியரங் கேற்றினானே. (௰க)

மேதகு சடகோபன் றிவ்விய சரித்திரத் தைக்கேட்போர்
மாதகவுடை யோராகி மாநிலமிருந் திகத்தி
லேதமில்குண ராய்மக்க ளிருநிதிபெற் றுமாற
னோதியதமிழ் வேதத்தாற் பரத்தினி லுய்குவாரே. (௰உ)

கேட்டவர் படித்தோர் முற்றுங் கிளத்தினர் வரைந்தோ ருள்ளங்
கோட்டமில் குணராய்ச் செல்வங் கொடுத்திதைப் படிப்பித்தோரிவ்
வேட்டினைப் பரிபாலித் தோரேனு நான்முகன் போற்றெந்தை
தாட்டுணை பரவிச் செய்யாடன்னொடும் வாழ்வரன்றே. (௰௩)

பாயிரம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ

# சடகோப திவ்ய சரித்திரம்

## ஆசாரியாள் வணக்கம்

### வழிபடு தெய்வ வணக்கம் (எதிராஜன்)

நீர்மைகொண் மெய்யடியர் பரவடியுஞ் செய்ய
நிறங்கொடு பொற்றிருவரையினிலவுந்தூசும்,
மார்பிலகு மணிவடமுந் திகழ்முநூலும்
மரைமலர்ச் செங்கரத்தினிடை வளர்முக்கோலுஞ்,
சீர்கெழுபாடிய முரைத்த பவளவாயுஞ்
சேதனர் பாலருளொழுகு திருக்கணிணைக்கும்,
ஏர்கொடிரு முகத்தொளியு மிலங்குகின்ற
வெதிராசன் விரைமலர்த்தாளிறைஞ்சியுய்வாம். (க)

### ஸ்ரீமந்நாராயணன்

மதுரவின் சுவையின் பேறாய் மறைந்தமிழுரைத்தஞான,
அதுலன்றன் சரிதைகூற அநந்தனையாதும் வாசப்,
பதுமமேலயற்கு பேணுட் பாலனந்துருவமாகிச்,
சதுமறை நவின்ற மாயோன் றாட்டுணைக் கடலப்போதே. (உ)

### ஸ்ரீதேவி (பெரியபிராட்டியார்)

மணிகொணெடுந் திரையாழிப் புடவிமாது
மதிமுகவொண்டிலத மெனவயங்குமாடத்,
தணிதிகழ் தென்குருகை யினுவீற மாற
னருண்மாரிவைபவமெம்மறிவாற் சொல்லத்,
துணிகுவமின்னமுதி லெழுதிருவே பிம்பத்
தவரிதட்செந்தாமரைமேற்றுலங்குமானே.
பணிமொழிமென்குமிழ் மறிந்து குழைபாய்வை வேற்
படை மதர்க்கட்கடையருணீ பாலிப்பாயே. (௩)

## சேனைமுதலியார்

தேனுகும் பொழிற் றென்குருகாபுரி,
ஞான தேசிகனன் புகழோத மீ
வானநாடுறை மாமகிழ் காற்றுனைச்
சேனை நாதன் றிருவடி யுன்னுவாம். (ச)

## நம்மாழ்வார்

அற்றவ னுருவமாகி யனேக நூ லுலகுக் கீந்து,
மற்றடங் திரடோள் வேந்தாய் வனம் புகுந்தரக்க ரீட்டஞ்
செற்ற பினைவர் கட்காய்ச் சிறிய தூதெழுந்து பின்னர்ச்
சிற்றிலைப் புளிக்குள் வந்த செல்வனை மனத்துட் கொள்வாம். (ரு)

## பன்னிரண்டாழ்வார்


சீராரும் பொய்கையர் பூதத்தார் ம்பயார்
திருமழிசைப்பரன் வகுளச் செல்வன் கோளூர்
வாராரும் மதுரகவி முனிவன் சேரர்க்
கிறைவனருட் பாகவத ரிருநாட்டீளி,
பாராரும் வழுதியர் முன் கிழியறுத்த
பட்டர் பிரான் கோதை யருட் பாணன் கையிற்,
கூராரும் வேற் கலியனின்னோர் செய்ய
குரைகழலெம் முடிக் கணியாய்க் கூட்டுவோமால். (சா)

## மதுரகவி, நாதமுனி, உய்யக்கொண்டார் மணக்கால்நம்பி ஆளவந்தார்

கண்ணினுண் சிறுத்தாம்போதிக் காரிசேயருள் பெற்றுய்ந்த
அண்ணன் மெய்ப் போத நாதமுனி திருவடியுஞ்ஞானம்,
நண்ணிய வுய்யக்கொண்டார் நலந்திகழ் மணக்கால்நம்பி,
தண்ணிய வாளவந்தார் தாளிணை மலருங் கொள்வாம். (எ)

## எம்பெருமானார்

நறைத்துள வலங்கன் மார்பன் நாண்மல ரடியினுன்கு
மறைத்தமி ழுதவுஞான வகுளபூ டணனை வாழ்த்தக்
கறைத்தலைப் பணிமன்னேயிக் காசினியதனின் முக்கோல்
இறைத்தவ னாகிவந்த வெதிபதி கழலுட் கொள்வாம். (அ)



எதிராஜர் (உடையவர்)

## கூரத்தாழ்வான்

எண்டிசையோரும் புகழப்பணிமன்னே யிங்
கெதிபதியாய்ப் பரசமயத் திருளே வென்று
புண்டரத்தை நிலைநிறுத்தக் கிரிமிகண்ட
பூபதியும் சிவமலதோர் பொருளிலென்று
மண்டலத்துள் ளோர்களிடத் தொப்பம் வாங்கி
மாமுனிவன் பாலனுப்ப மகிழ்ந்து நோக்கிக்
கொண்டல் வண்ணனே பரமாய்க் குறித்தனுப்பும்
கூரத்தாழ் வானடியே கூடுவாமே. (௯)

## பிள்ளைலோகாசாரியன்

வாரிதிகலையிற் சூழிம்மானில மாந்தருள்ளக்
காரிருட் பிழம்புதுஞ் சக்கதிர் பதினெட்டு நேரச்
சீர்கொளட் டாதசத்துள் சிறப்புறு ரகசிய மோதெம்
மாரியன் பிள்ளைலோகா சாரிய னருட்பெற் றுய்வாம். (௰)

## தேசிகர்

வண்டினமுரன்றிந்தள விசைபயிலு
மருமலர்த்துளவினன் மதங்கூழ்த்
தெண்டிரை கொழிக்குங் கருங்கடற் புவியாஞ்
செறுவிடைப் பரமதக் களையைக்
கண்டறக்களைந்தின்னருட்புனல் விடுத்துக்
கணந்தளர்வடைவுறுவளர்ப்பான்,
தண்டலையுடுக்குந் தூப்பில் வந்துதிவே
தாந்த தேசிகனடி தாழ்வாம். (௰௧)

## மணவாளமாமுனி

தேனினமுரன்றுபாடும் மகிழ்மலர்த்தெரியல்வேய்ந்த,
ஞானதேசிகனுரைத்த நான்மறைத் தமிழ்ச்சுடர்க்கு,
மேனியைத்தகழியாக்கி மெய்யறிவிடுநெய்யாக்கி,
மானிலம்விளங்கச்செய்த வரவரமுனிதாட்கொள்வாம் (௰௨)

ஆசார்யர்கள் துதி முற்றும்.

## அவையடக்கம்

நந்தணிமகரயாழ்க்கை நங்கையார் குழவிசேர்த்தி,
செந்தமிழதனினாயேன் செப்புவானெடுத்துக்கொண்ட
தந்தகன் ககனமீனை யய்யமற்றெனுமேவினென்ன,
வந்தவாறனையுமுன்னீர் வையக மதியின்மாதோ. (௧௩)

நூற்றிதழ்க் கமலத்தோனு நுவலுதற் கரியதான,
மாற்றருந் தகைகொண்டோங்கு மாறன்றன் சரிதை தன்னைத்,
தேற்றமின் மனத்து நாயேன் செப்புவான் றொடங்கலிங்கோர்
ஆற்றினுண் மணலையோர் சேயளப்பதற் கெழுதலொக்கும். (௧௪)

விண்ணவர்க் கரிய மாறன் மேம்படு புகழைப் பாரில்,
நுண்ணியல் புடைய நாயேனுரைப்பானெடுத்துக் கொண்ட
தெண்ணியார் கலி நீர் முற்று மேந்திளங் குழவி யொன்று
அண்ணி நுண் மூழை தன்னா லளப்பதை நிகர்க்கு மாதோ. (௧௫)

கரும்பினூறு வங்கோணி லதினுள் ளாருங்
கனிந்த சுவையினை யறிந்தோர் களைவார் கொல்லோ,
விரும்பிய கண்டுருக் கரடு முரடதென்று,
விலக்குவரோ வறிவுடையோ ரவைகள் போல,
விரும்புவி யிற்றமியே னுரைக்கும் பாக்க
ளிழிவெனினு மகிழுமறந்த வேதிலாவண்,
பெரும் புகழ் நந் சடகோபன் காதை கண்டு
பேணுவரே புலமை கொணற் பெருமையோரே. (௧௬)

அவையடக்கம் முற்றும்.

# பாண்டி நாட்டு திருப்பதிப் படலம்

## நூல்

சீர்வளரெதிராசன் பொற்றிருவடிக்கமலம் போற்றிக்
கார்வளர்மேனியெம்மான் கண்ணையுற்றுயிர்களுய்ய
ஏர்வளர்மாறனாகவெழுந்தவதாரஞ் செய்யும்
பார்வளரிசைகொள் செல்வப்பாண்டி நாட்டணி விரிப்பாம். (க)

உலகெலாந் தனிபுரக்குமுயர் மழைமுகிற் குழாங்கள்
அலைவிலாதரியதீம் பயோததியெனவானார்ந்து
பலவளம்பெருகு தெண்ணீர்ப்பரவை நீர்பருகிச் சூலாய்
நிலவியதாளமீனுநீனிறக் கடல்போன்மீண்ட. (உ)

திருமகிழலங்கன்மார்பன் றிருவடித்துணைக் காட்செய்வான்
கருமிடற்றரனார் வாழ்வெண்கையிலையென் கிரியெழுந்து
வருவபோன்முகிற் குழாங்கள்வானிடை யடர்ந்துவாரிப்
பொருதிரையருந்தி நீலப்பொருப்பென மீண்டவம்மா. (ங)

அலம்புவண்டிருந்ததார் நம்மரிந்தமனலரேயங்கைத்
தலமமர் திகிரிமானத் தடித்தியங் கவன்றனும
வலம்புரித்தொனியே யென்னவாணிடை யதிர்ந்திளங்காற்
சிலம்பிடை யவன்றன் சாபமுமிழ் கணைத்திரள்போற்பெய்த. (ச)

மந்தர கிரியை வென்று மல்லடர்த் துயர்ந்து நீண்ட,
சுந்தரத் திருத்தோளண்ணல் சுடுசரந் துரந்து மேனுட்,
கந்தர வடிவரக்கர் களைகளைக் களையக் கண்டே,
யந்தரத் திமையோர் தூற்று மலர் மழை யெனவான் பெய்த. (ரு)

விரிதரு முகட்டின் மீது விடாதுறப் பொழியுந் தாரை
அரிய விண்ணுலகத்தான வமரரிவ் விளங் கானச்சி
யுரிய தன்னகர்க்குச் சேர வுயரு மிம் மலையைக் கொள்வான்
சொரிதரு வடங்கள் போலத் துலங்கினதுதைந்து மாதோ. (சு)

துவளிலாடக முகட்டிற் றேன்று பல்லருவி யீட்டங்
கவளமும் மதப்புழைக்கைக் கரிகட மருப்பு குக்குந்
தவள வொண்டரள மீர்த்துச் சங்கையி றநக்கள் சாடிக்
குவலயத் திளஞரோகை கொள்ள வந்திழிந்த வம்மா. (எ)

மண்ணிடை யிழிந்த தோயம் வாரணத்தினமு மானு
மெண்ணிடற் கரியதாய விடபத்தின் குழுவு மீர்த்துப்
புண்ணியம் புரிவார் நெஞ்சம் போலெங்கு நிரவி வந்து
தண்ணிய திரைகண் மோதுந் தாம்பர வன்னி சேர்ந்த. (அ)

தடந்திரைக் கரத்தின் வாரித் தாளமா மணிகள் வீசி
யடர்ந்த வன்னீத்தத் தூடே யமிழ்ந் தெழு மரத்தின் றேற்றம்
மிடைந்த வைம் படைகளேந்தும் விமலன் பாற் கடலை வேண்டிக்
கடைந்திடுங் காலத்துற்ற கற்பகத் தருவைப் போன்ற. (கூ)

வேறு

கோடி ஞேடக் கிரியுங் கொண்டுமால்
ஈடி ருமரைக் கண்ணிடை யிற்பசு
மாடு மேவி மறிகடற் சேர்தலால்
ஓடுமெப் புனல் காரண னெக்கு மால். (ம)

மலை களைந்திடை மாதரைச் சேர்ந்துமீ
துலைகுருந்த மொசித்து மருதிற் போய்
விலையுயர்ந்திடு மான்பின மேவலால்
அலை கொளப்புனல் கண்ணனையன்னதே. (மக)

ஆன வெள்ள மரி புலி வேங்கை மான்
றானவாரணஞ் சம்பு எண் கேனமே
ஏனல் சந்தகி லின்வகுளஞ் செருக்
கூனமில் பல வோங்கும் வளை புனை. (மஉ)

குங்குமம் சண்பகம் பனை கோங்கில
வங்க மேலம் வசம் பொடு சாதி மா
பங்கம மற்றிடு பற்பல பாதவ
முங்கணிப்பில் விலங்குகளுங் கொடு. (மங)

ஏக்க மொடு மெயின ரெயிற்றியர்
தாக்கருந் துயர் தன்னிலழுங்கிட
வாக்கு செந்தினை யாரிடி தன்னொடுந்
தேக்கிலைக் குடில் சேரவரன்றியே. (௰௪)

செறிந்து பற்பல நல்வளஞ் சேர் தரும்
குறிஞ்சி விட்டுக் கொடுங்க ணரவமும்
நெறிந்திரிந்திட நின்றெரி வீசியுள்
வறண்ட பாலையில் வந்து கலந்ததே (௰௫)

அன்னிலத்தைக் குறிஞ்சிய தாக்கியே
மன்னு மாங்குள யாவும் வரன்றியே
துன்னு முல்லை நிலத்திடைச் சூழ்ந்ததாற்
தன்னிகர்த்திடுந் தாம்பிர வண்ணியே (௰௬)

அண்டர்வெள்ள மலமர வன்னவர்
மண்டுபாடிவயின்புகுந் தாங்குள
தண்டுளித்தயிர்த்தாழியளை நெய்பால்
கொண்டு வெண்ணதிக்கோலந்திகழ்ந்ததே. (௰௭)

மல்லலான் விடை மற்றிளங்கன்றுடன்
முல்லையங்குழலாயர் முகிழ்முலை
வல்லிமார்கள் வளையும் பணிதுகில்
மெல்லமெல்ல வுண்மேவி வரன்றியே. (௰௮)

மற்றுமுள்ள வளங்களை வாரியே
கொற்றவெண்குடைக் கோமகன் காரிதன்
நற்றவத்துதி நந்தன் புகழென
வெற்றுநீர் மருதத்திடை யேய்ந்ததே. (௰௯)

(வேறு)

மருப்பொடிக் கமழுஞ்சோலை வான்றருக் குலங்கள் சாடிச்
சுருப்பொடு மயில்களாங்குச் சூழ்தரும் பறவை பாய
விருப்பொடு காக்கு மள்ளர் வெள்ளங்கள் வெருக்கொண் டோடக்
கருப்பொடித் தயல்சூழ்வாளை கப்புளாரங் களிர்த்து. (௨௰)

மள்ளர் தம் சேரி யன்னோர் வளர்த்திடு மெகினங் கோழி
புள்ளின மிடப மேடம் பூங்கிடிக் குருளையோடு
விள்ளு முக்கனிகளீர்த்து வேரி முண்டகக் காடுற்
றுள்ளிதழ்த் தேனினோடு மொன்றிச் செந்நிறத்ததாகி (உக)

கொங்க விழி ரதத்தேனைக் கொள்ளை கொண்டளிகள் பாடும்
பங்கய வாவி தோறும் பரந்து நித்திலங்க ளீனுஞ்
சங்குலாம் பணை கடோறுந் தடையறப் படிந்து நீலத்
துங்க வெண்டிரைகண் மோதுந் தூயநீர்க் கடலுட் சேர்ந்த. (உஉ)

தேர்ந் துணர்ந்தோர்த நெஞ்சிற் றெளிவுறந் நீத்த நீடு
வார்ந்தலை யகடு கீண்டு வகிர்தர வொதுக்கல், வெம்போர்
ஆர்ந்த தோள வுணன்றன்னை யரியுருவாகி யெம்மான்
ஈர்ந்தணி பூண்ட மாலை யெழிலினைப் பொருவு மாதோ. (உங)

நாடுகடோறம் பாய்ந்த நறும்புன றடையாயுள்ள
கோடுக ளனைத்துஞ் சாடிக் குமுறிடு மொலியுஞ் செந்தேன்
ஓடு தண்டலைகள் யாவு மொண்சிறை யறுகாற் றும்பி
பாடு மத்தொனியு மாங்குப் பரந்தன வெங்கு மாதோ. (உச)

கட்கடை குழையைத் தாவுங் கடைசியர் குழுவினோடும்
உட்களி தூங்க மள்ள ருண்ணுதற் கமைத்த வூனை
மட்கலத் தெடுத்து மீது வைத்தல ரணையின் மேய
புட்குல மிரிய வந்து புகுந்தன ரனந்தர் மாதோ. (உரு)

வெட்டுவர் சுமப்பர் வாரி வீசுவர் வரம்பை நேராய்க்
கட்டுவர் மிதிப்பர் கோட்டுக் கருநிறப் பகட்டினத்தை
மட்டறப் பூட்டிச் சாறு வார்கரும் பொடித் தனேகர்
எட்டு மாதிரமுமஞ்ச வேரடித் துழுவர் மாதோ. (உசு)

முருகவிழ் கமலப்போதின் முத்தினம் வளைகளீனக்
குருகுதன் கருவாமென்றே குறித்து வெண் சிறகான் மூடி
அருகிருந் தடைகிடக்கு மகன் பணைத் தலத்து வாளெற்
பெருகவென் றகத்தினுள்ளிப் பெய்குவ ரெங்கும் வித்தே. (உஎ)

பருமருங் குடை நற் பாகற் பழங் கனிந்திழிந்த தேனும்
மரு.மலர் விரியுஞ் சூத வார்கனித் தேனு மீத
விரு மரம்பையின் பலங்கள் வீழ்ந்திழி தேனும் பாயத்
திரு மகிழலங்கன் மார்பன் சீர்த்திபோல் வளருஞ்செந்நெல். (உஅ)

இற்றொடி நுழை நுசுப்பு மிரணியத்துகளை நேர்தே
மற்றொடு தனப் பொருப்பும் வாள் பொரு விழியும் பெற்ற
பொற்றொடிக் கடைசி மார்கள் பூந்துகிற் கொடிமென் பூவி
வற்றொடு களைகள் யாவும் வரைந்து பின் சூரவை செய்வார். (உகூ)

வரி வளை யலறி யீன்ற மணிதிகழ் கழனி தோறும்
விரிகளை கடியு மாதர் விளங்கு நன் முகத்தை நோக்கி
உரியமா மதியமென்ன வுண்ணெகிழ்ந்தல நு மாம்ப
றரியல னெழுந்தானென்னத் தாமரை மலர் வாய் மூடும். (௩௰)

அந்தரத் தடர்ந்த வாச வைந்தரு நீழல் வைகுஞ்
சந்த வானினங் கறிக்கச் சலிப்புறு கோங்கித் திண்டோள்
மைந்தரைக் கண்டகற்பு மகளிர்தங் குழுக்கணெணிக்
கந்தரஞ் சாய்ப்பதே போற் கவிழ்ந்தன சாலியெங்கும் (௩க)

அகட்டிரசித மீன்றுவ வரிந்தரி யனைத்தும் வாரிச்
சகட்டினு மெருத்தின்மீதுந் தலையினுங் கொடுபோ யண்ட
முகட்டினிற் படியப் பல்போர் மூட்டியே பிணையனீலப்
பகட்டின மனந்தம் பூட்டிப் பற்பலர் தெழிப்பர் மாதோ. (௩உ)

உளங்களி தூங்கவாரு மொண்டொடித் திரளினேடுந்
தளந்தள மாக வெங்குஞ் சார்ந்தநெற்பொலியை வாரிக்
களங்களைப் புதுக்கித் தூய காற்றினிற் றூற்றிப் பின்ன
ரளந்தளந் தவர்கடங்க ளகத்தினிற் கொணர்வர் தாமே. (௩௩)

காவியும் கிடையு நேமிக் ககமுமென் கமலப்போதுந்
தாவிடுஞ் சினைவராலுஞ் சைவலத் துணருஞண்டுந்
தூவியவனமு மீனுந்தூய தெண் டிரையுங் காட்டி
வாவிக ளனைத்து மாதர் வடிவெனப் பொலியு மாதோ. (௩௪)

தாதினி னிறையு மப்பொற் றடத்தினிற் றிகழ்வெண்கஞ்சப்
போதினி லினிதமர்ந்து பொலிவுறு மனத்தின் றேற்ற
நீதியின் றயர்ந்தமாற னிகழ்த்துமத் தமிழை யோர்வான்
மேதினிதன்னில்வாணி பெய்த்தவம் புரிதலொக்கும். (௩௫)

வெடித்திடுஞ் சினைவரால் போய் வெண்மதிச் சசத்தைக் கீறி
வடித்திடு மமுதத்தோடுப் வாரணிக் தடர்ந்த கொங்கைத்
தொடிக்கைய ரிருண்ட கூந்தற் சொரிந்திடு நறவுமொன்றி
மடித்தலை யெறிந்தனேக மாநதிக்கிணையா யோடும். (௩௬)

கயமெலாம் பறவை கூடுங் காவெலா மயில்களாடும்
வயலெலாங் கரும்பு நீடும் வரம்பெலாந் தேன்களோடும்
வியன்றருக் குலங்களெல்லாம் விளரி வண்டினங்கள் பாடும்
அயலறப்பெருகி நாடு மறும்புனல் குவடுசாடும். [௩௭]

கணையினுங் கொடியதாகுங் காவியங் கருங்கட் செவ்வாய்த்
துணையிள முலைக்காமம் பொற்றொடியுழத் தியரின் வெள்ளம்
பணையிடத் தடர்ந்துசெய்யும் பணையிகழ் குரவையோடு
கிணைதட வொலிகளெங்கும் கெழுமியார் கலிபோ லார்க்கும்.[௩௮]

வாளைவின் முகடுதாவு மாமரங்கனிக நேவும்
வேளை மாங்குயில்கள் கூவும் வெள்ளனம் வயல்கடாவு
நீளரிமலர்த் தேனுண்ணு நீர்முகில் பொழின் மேனண்ணும்
பாளைகள் மிகவுமொன்றும் பனிவளர் கமுகின் கண்ணும். [௩௯]

தாமரைத் தடங்கடோறுந் தடமுலை மடவார்நீட்டம்
பூமலர்க் கழனிதோறும் பூங்கரு வண்டுப் பாட்டம்
தேமருபொழில்கடோறுந் தொழிப்புறு மயில்களாட்டம்
தோமறநோக்கும் பக்கந் தோறும்பன் மலர்சேர் தோட்டம். [௪௰]

வேறு

குடங்கையினகன்று கொலைத் தொழில் புரியுங்
கூற்றினைப் பழித்த வெவ்விழிகொண்
மடந்தையரிருண்ட குழற்றிரட் கருத்து
மணந்திகழகிற்புகை ககனத்
தடர்ந்தன விடையா தவர்கள்கண் ணெச்சின்னுட்டணி
யழித்திடா நீலப்
படந்தனை விரித்து மறைத்தன கடுப்பப்
படர்ந்தன விண்ணிடமெல்லாம். [௪௧]

வண்டலம்பிடு பூந்தண்டலை யுகுதேன்
வழிந்து பாய்வுற வளர்கன்னல்
அண்டர்தம்பதியிலடைய வாங்குலவு
மானினங் கறித்திடச் சிதறி

எண்டிசை யிடங்கண் முழுவது மறைய
வெழின்மணி யினங்கள்வீழ் தோற்றம்
விண்டலத் திரவி தனக்குடைந் துடுக்கள்
வெடித்துவீழ்ந் திடுநலைப் பொருவும். [௪௨]

போதலர்ந்திரத நறவிழிந்தொழுகு
புனிதமா முல்லைய நிலத்தில்
யாதவரியற்றுங் குழலிசை யினைக்கேட்
டைம்பொறி வழியுளஞ் செலுத்தா
மேதகு தவரு மெய்யறிவிழந்து
மேலைநாளிருந்தமை கருதி
மாதவ னெழுந்தா னெனவவன் றனையே
மருவியின் புறவமென் றெழுவார். [௪௩]

ஏழலிகண்படுக்குந் தண்டலை யரங்கி
லிவர்முருக் கலரொளி விளக்கவ்
வழிவிளங் கிடவொண் சிறையறு பதங்க
ளுறுமளிக் குலங்கள்பண் ணியற்ற
பழியிலன் புறமென்மையரென விருந்தொன்
பறவைகண் மகிழ்வுற விடையா
விழிகொளுஞ் சிகிகள் பயிலின மடவார்
விழைவொடு நடிப்பன நடிக்கும். [௪௪]

அஞ்சனமணிந்து விடத்தினிற் கருத்தை
யரிபரந் தகன்றகண் மடவார்
மஞ்சனம் புரிநீ ரருவிபாய்ந் திடநெல்
வளர்வன வகன்பணை முழுதும்
பைஞ்சிறைக் கிளியும் பூவையுமிருந்து
பாடுவ சோலைகடோறும்
கஞ்சமன் மலருங் காவியுந் திகழ்வ
கயந்தொறும் வழுதிநாட் டகத்தே. [௪௫]

காவினிற் றிகழும் பலவினற் கனியைக்
கறித்தொரு பாகமாய்க் குரங்கொன்
றுவலிற் புசித்து விட்டிட வதனை
யருகெழுந் தொருகரு முசுவும்


வாவிமுன்கறித்த விடத்தினைப் பிடித்து
வாயை வைத் தருந்துதல் கதிர்கா
றேவிருட் பகையைக் கரும்பை யிராகு
சினங்கொடு தீண்டுதல் கடுக்கும். [சசு]

அற்புதமிகுந்த விருநிதி யுறலா
லம்புயத் திருமகிழ் வுறலால்
பற்பல வண்ட ருகப்புடன் மிடைந்து
பரிந்துறை பான்மையான் மின்னார்
கற்பகமருவுந் தன்மையா லெவரும்
கணிப்பரு முயர்ச்சியினாலும்
பொற்பினின் மிகுந்த பொன்னகர்க் கிணையாய்ப்
பொலிதரும் பாண்டிநன்னாடு. [சஎ]

உந்திமே லொருநான் முகனைமுன் படைத்தன்
னோன்றனைக்கொண்டுவெண்ணீற்
னிந்திரன் முதலாந் தேவரை யுலகத்
தெண்ணருஞ் சராசரத் தொகையைத்
தந்திடப் புரிந்தங்கவைதொறு நிறைந்து
சாக்ஷியாயிருந்தருள் பெருமான்
வந்துதித்தருளும் பாண்டி நாடதனுள்
வளத்தினை யுரைந்திடற் பாற்றே. [சஅ]

---

ரு-வது பாண்டியநாட்டுத் திருப்பதிப் படல முற்றும்



திருக்குருகாபுரி க்ஷேத்திரமென்ற ஆழ்வார்திருநகரி, ஸ்வாமீ ஆதிநாதராழ்வார் சந்நிதி வீதி.

# திருநகரப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

தண்டலை சூழ்ந்தில குறுசாளக்கிராமஞ்
சார்ந்துழியோர் பதினாறு சயினர் வந்தாங்
கண்டியெம்மோ டடல்வாதம் புரிவீரென்ன
வன்னவர்க்கா யிரம்பணங்கொ ளரவாய்நின்று
புண்டரிகத்தாளவனைப் பரமதாக்கி
போதவலர் தன்னடிக்கட் பொருத்து ஞானத்
திண்டிறல் கொளெதிராஜன் கழலைவாழ்த்தித்
திருநகரப்படல மதைத் தெரிவிப்பாமால். [க]

சங்கமீனுந்தரள நிலவுல
கெங்கு மாரகழின்புடை யேய்பொலன்
றுங்க நீளெயில்சூழ் குருகாபுரி
பொங்கு வாசவன் பொன்னக ரொக்குமால். [உ]

வச்சிரத்தி னிடைக்கிடை மாடுபெய்
மச்சிவர்ந்தொழிர் மாளிகையும் பளிக்
குச்சிமேயவுயர் மணிமேடையும்
பச்சையாமறையும் மடைப்பள்ளியும் [௩]

பம்பரத்தை நிகர்த்த பயோதரக்
கொம்பனார்கந்து கம்பயில் கூடமும்
வம்புலாந்துணர் மஞ்சமு மாமணித்
தம்பநாட்டுஞ் சயனத் தலங்களும் [௪]

பீதகத்திற் சமைத்தொளிர் பித்தியுங்
கோதறும் வயிடூரிய கும்பமுற்
றூதவன் றெருட்டவிர்ந்த சிகரியும்
மேதகத்தின் விமானமுங் கோயிலும். [௫]

கள்ளலம்பு கருங்குழல் வாணுதல்
அள்ள யிற்க ணடார்ந்தெழு மாமுலை
கிள்ளையின் சொற்கிளவிநன்மாதர்க
டுள்ளியாடிடு தோரண வாயிலும். [௬]

வானிருவு கயற்கொடி வைகிய
பானிலாமணி மேடையின் பந்தியுந்
தூனிறத்தண்மதி முகத்தோகைமார்
கானிசைக்குங் கருமணிச் சாலையும். [எ]

பன்னிறக் கதிர்வீசும் பரப்பினாற்
றன்னிராவும் பகலும் துலங்கிடா
நன்னகர்த் தெருவீதி நலத்தையா
மின்னதென்றிங் கெடுத்துரைப்பாமரோ. [அ]

விந்தையிற் சிறவோர் விளையாடிடத்
தந்தவாழி சமைத்துறு தேரினிற்
பந்தனஞ்செய் பரியின் விலாழிநீர்
சிந்தவீதியிற் சேறுறு மாதரோ. [௯]

சீதவாரந் திமிர்ந்த சிமிழ்முலை
மாதர்வீணை மலர்க் கைபிடித்து நற்
கீதமோ தொலியுங் கிளர் மாதவர்
வேதகோடமு மேயதவ் வீதியே. [௰]

நூலையுற்று நுடங்கிடை மாதரை
வேலையுற்று மிளிர்ந்தகை வீரர்கண்
மாலையிட்டு மணம்புரி பல்லிய
மோலையுற்ற கடலொலி யொக்குமே. [௰௧]

கெண்டையொண் கட்கிளி மொழிமாதரின்
கொண்டை கொண்டவிர் கோதை நறவுக
வண்டலிட்டு மறுகு வழுக்கமே
வொண்டொடித் திரள்யாஞ் சொலவொண்ணுமோ. [௰௨]

நீனிறக்கற் சிகர நிறைத்தெழு
மேனிலைக்கண் மிளிர்கயற்கேதனந்
தேனினின் சொற்றெரிவையர் கட்கிணை
தானிருக்கத் தவஞ்செயன் மானுமே. [௰௩]

ஒள்ளிருஞ்சுதை மாடத்தினுற்றவிழ்
கள்ளிருட் குழனங்கை முகத்தொளி
வெள்ளி வெற்புயர் வெண்மதி மாமுகிற்
குள்ளிருந்து வெளிப்பட லொக்குமோ [௰௪]

பூவணத்தரளத்திற் பொலிந்தடர்
காவணத்தின் கவின்மிகழ் பற்பல
வாவணத்துளமைந்த சிறப்பையிப்
பாவணத்திற் பகர்ந்திடற் பாலதோ. [௰௫]

ஆரநானமலர்ந்த நறைகொள்கர்ப்
பூரநீள்விலைப் பொற்றுகி ருவுழைக்
கோரமா னிடபங் கலை கோரதம்
வாரணங்கண் மலிந்தது கூலமே. [௰௬]

சிந்தியாது பொய் செப்புதலில்லரிச்
சந்திரன் றனிற்ஞழ் குனரின் மதி
மந்தராய்த் திரிவாரிற்சுரகுரு
வந்தணன் றனிற்ஞழ் குனரற்றதே. [௰௭]

இன்னலுற் றிரப் போர்க்கிறை யீவிலாப்
பொன்னைவைத்துப் புகல் சொல்லும் புல்லரி
லன்ன முற்றுறங்கும் பணையங்கர்கோன்
கன்னனுக்குக் கடையின ரில்லையால் [௰௮]

விட்பரந்த புகழ்ப்பெரு மேன்மையர்
திட்புயச் சிறுவோர் சிலர் சேவுருள்
முட்பொரும் படைகட்டி முயலொலி
மட்கலைக் கெதிர் மாறுகொ ளோலமே [௰௯]

மின்னி னுண்ணிடை மெல்லியலார்கடம்
மன்னனோடு மகிழ்ந்து புணர்ந்திட
வன்னை யில்விட் டவரவ ரிற் புகல்
பொன்னினுள்வந்து புக்கது போன்றதே. [௨௰]

காதலன் பொற்கலையை நெகிழ்த்தமெல்
லோதிகாணி விளக்கை யொளிக்கவம்
மாதுபூணு மணியொளி வீசிடப்
போதவெட்கிக் கரங்கண் புதைக்குமால். [௨௧]

மானறுங்குழல் மங்கைய ரன்பரோ
டானவின்ப மனைத்து மிகுனையர்
பானவில்கப்பசியுறு மிற்புலி
மோனமோடுண் முழுமையும் நோக்குமே. [௨௨]

காவி நோக்கியர் காதல ரூடலின்
மேவுமாமணி மேடை யொளித்திட
வாவலோடெழுந்தாட வரன்னரென்
றேவியங்தொழ வுன்னி நகைப்பரால் [உங]

வற்றனத்து மடந்தையர் மாடமூ
டுற்றுநாளு முடுபதி தான்செலப்
பெற்றதாலவட் பெய்விளக் காவியாற்
கற்றுமெய்யைக் களங்க மென்பார்களே [உச]

கோலமாடக் குழூக்குண் மடந்தையர்
சாலவாயற் றிறந்து தனித்தனி
வேலினேர் விழிநோக்கொளி வீதிவாய்
நீலமாமலர்த் தோரண நேர்ந்தவால். [உரு]

அஞ்சிறைநும் புனுகு மணிந்துவா
சஞ்சிறந்த குழலியர்தத்தை பாற்
செஞ்சொனுமம் பயிற்றச் செலற்கது
பஞ்சரத்துட் பதுங்கு மணத்தினுல். [உசு]

தென்றமிழ் வடனூறெரி வோர்கடம்
முன்றிறன்னிற் புராண முதுபொருள்
பொன்றிலாது புகன்றிட மாந்தர்கள்
சென்றுகேட்டுத் தினமு மகிழ்வரால். [உஎ]

மானநீர்ப் பொருனைநதியின் வடக்
கானினைறரன் கோயிலமைந்ததான்
மேனிலைத் தென்விரசைக் கவாசியா
ஞானநாடெனலா மிந்நகரையே. [உஅ]

வேறு

ஏறுமிவ் வளங்கொள்குருகாபுரியி னூடே
யீறிலொளிவீசு பொனியற்றெழு நிரைத்த
வீறணியு மண்டபமுண் மேவியருள்காரி
மாறனரி யாதன மகிழ்ந்தினி திருந்தான். [உகூ]

வாமமைநிகர்த்தவிழி மங்கைய ரனேகர்
சாமரையிரட்ட வெகுதாதியர்கணின்று
தாமரையலர்க்கு நிகர்தாளிணை பெயர்ப்பத்
தூமறைநல் வேதியாக டோததிர மியமப [௩௰]

வைரமுடி சூடுதிணி மன்னவர் கடங்கள்
செயிரினை யெடுத்தினிது செபபிட மருங்கே
யுயிரனைய மந்திரிக ளூற்றவை யுரைப்ப
மயினிகர் கருங்குழல்கொண் மங்கையர்கள் பாட [நக]

வலங்கொள் தட மார்பினிடை வண்டிமிரு நிம்ப
வலங்கலொடு வெண்டரள வாரமு மிலங்க
விலங்கரிக ளொண்புய மிடைந்த வலயங்கள்
இலங்குறவெண் மண்ணுத லிருந்தொளி தயங்க [நஉ]

அளக்கரு மளக்கரி னதிர்முரசொலிப்ப
விளக்கொளி யயிற்படை விரற்பதுமமின்ன
தளத்துள வலங்கலணிதாயமுகிலே வந்
துளத்தினிதுறக் குழைகளொண் சுடரெறிப்ப. [நந]

கொந்தலரு மோதியர்கள் கும்பமொடு தீபம்
வந்தினிதெடுப்ப மதிவாணில வெறிக்கும்
சுந்தரமணிக்கவிகை சூழவதனீழல்
இந்திரனெனப் பெரிதிருந்தனன் மகிழ்ந்தே ; [நச]

வாசமலர் கொண்டடரு மங்குலினிருண்ட
கேசமடமங்கையர் கிளர்ந்தொளிருமம்பொற்
றாசுடனெய் வாசமணி சுண்ணமு மெடுத்தே
வீசவடன் மைந்தர்பலர் மெல்லடியில் வீழ. [நரு]

பட்டமறு வற்றருள் பரந்தெழு நிலாவின்
வட்டமதி யொத்தொளிசெய் வத்திர மிலங்க
மட்டுறுமலர்க்கமல மானவிரு கண்ணின்
றெட்டிசை தழைத்திட வருட்டிரை யெறிப்ப. [நசா]

இவ்வண மகிழ்ந்தினி திருந்தருள் சுரந்து
நவ்வியகத்துடைய நங்கையொடுநீலப்
பவ்வவலை சூழ்புவி பரித்து முறை செங்கோற்
செவ்விதினியற்றுபொழு துற்றதுரை செய்வாம். [நஎ]

---

ச-வது திருநகரப்படல முற்றும்.

# திருக்குறுங்குடிப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

வெண்டிரை சுறங்குங் கடனிலவரைப்பின்
மிடைந் துயிர்ப்பயிர் கொடுங் கலியாம்
அண்டுவெங் கதிரான் மிக்குடல்வெ தும்பி
யழிதரா தல்கலின்ஞான
மண்டுவிண் மாரி பெய்தருளியரா
மானுசன் ருட்டுணை வணங்கி
கொண்டல்கண்படுக்கும் தண்டலை யுடுத்த
குறுங்குடிப் படலமின் றுரைப்பாம். [க]

பொங்குநீ டிரைகொ ளுவரியந்தானைப்
பூவைமெய் வழியிலோர் குடைக்கீழ்த்
தங்கவைத் தனேக நாளர சியற்றித்
தனயனில்லாமையின் மெலிந்து
கங்குலிற் கரிய கூந்தலந் துவர்வாய்க்
கயற்கணங் கற்புறு நங்கை
பங்கய மலரின் முகமதி நோக்கிப் பார்த்திபன்
மொழிசில பகர்வான். [உ]

இழையிடை புகுதற்கிட மிலாதடர்ந்த
விளமுலை தாடியினே ரிடைநால்
புழைநெடுங் கரமென் பிடிநடைத் திருவே
பொற்கலத் தடிசிலிற் சிறுகை
தழைவுற வளைந்தங் கிளநகை புரிந்து
தவழ்நடை பயிற்றிடு மழகார்
மழவிளஞ் சேய்க டமைப்பெ றுதற்ற
வாழ்விருந் தென்பய னென்றான். [௩]

சிற்றெரும் பணியி னடப்பன கடுப்பச்
சிறுமயி ரொழுங்குமே கலைசூழ்
புற்றரவல்குற் றமனியக் கொடியே
பொன்னக ரமிழ்தினு மினிமை

யுற்றமென் குதலைச் சிறுவர்கண் மிழற்று
மொருசொலிச் செவிப்புலத் தேர்க்கப்
பெற்றில ரன்றோ மகரயாழ் குழலைப்பேசு
வரினிதெனப் பிறர்க்கே. [ச]

துப்பித டளவின் முகையணி முறுவற்
றோகைநன் னெறியிலோர் மகவைக்
கைப்பெறினேழு பிறப்பினு மியற்றுங்
கடும்பவந் தொலைத்துமா விரசைக்
கப்புற மிருத்து மெனிற்புவி துறந்தா
ரணியமுற் றைம்பொறி யடக்கித்
தப்பில தாடலங் கருகவைந் தழலுட்
டவஞ்செய றரும்பய னெவனோ. [ரு]

ஐங்கணைக் குறிசில் வசந்த மண்டபமுற்
றணிசெயு மரம்பையங் குறங்கும்
பங்கய மலரின் மிதிக்குமுன் சிவக்கும்
பதமுநின் றெளிகொள்பெண் மயிலே
செங்கர மதனை லயனருள் கொடுநஞ்
சென்னியிற் பொறித்திடும் பொழுது
சங்கநன் னிதியுந் தரணியும் பெறுவீர்
தனைய ரில்லெனவெழுதினனோ. [சு]

இந்திர தனுவை நிம்பபத் திரத்தை
யிகல்செயும் புருவநற் கமுகின்
கந்தரம் வருக்கைக் கனிமொழித் திருவிக்
காசினி யதனுணம் மரபில்
வந்ததிண் டிரடோள் மன்னரி லெவரு
மகவின்நல் வாழ்வுற நமக்குச்
சந்ததி யிதுநாள் வரையிலா ததற்கென்
றூழ்வினைப் புரிந்தன மென்றான். [எ]

வண்டினம் பெடைக ளுடனிருந் தமுதுண்
மருமலர்த் தொடையணி குழலாய்
கண்டினு மினிய மழலைமென் மொழிகொள்
கான்முளைப் பொருளிது நாளுங்

கொண்டிலா துணைவு முறக்கமும் பெரிதாய்க்
குவிமுலைப் போகமே நுகர்ந்து
தெண்டிரைக் கடல்சூழ் புவியுநன் னிதியுந்
திறமென வாழ்ந்தன னென்றான் ; [௮]

இவ்வணமெலிந்து பகையின ருகிர
மிருஞ்சிறைப் புள்ளினுக் கிரையாய்
வவ்வுமொள் ளயில்வேற் படையுறு மங்கை
மன்னவனுரைத்தசொல் வினவி
நவ்வியி னயனச் சுணங்கணிந் தடர்பொன்
னகமெனத் திமிர்முலை வனசச்
செவ்விகொள் வதனவனநடைத்தெரிவை
செப்புவள் சில மொழியன்றே ; [௯]

இன்னல ரெனுமும் மதமுகும் புழைக்கை
யிபமெனுங் குழுவினுக்கரியாம்
மன்னவெவ் வுலகு மகவிலார் தமக்கு
வலிகொள்புத் தெனுநர கென்று
நன்னெறி யுணரு மறிஞர் நின்னவையி
னவில்வதைக் கேட்டு நாமிதுநா
ளுன்னின மிலையப் பொருளிலா தெவ்வாழ்
வொன்றினும் பயனில்லை யென்றாள். [௰]

என்று மன்னவனு மங்கையுஞ் சிலநா
ளிரங்கியிந்நாள் வரை யினுநாஞ்
சென்றமுப் பொழுது மிடைவிடா திறைஞ்சுஞ்
செழுங்கரு முகிலெனப் பொலிந்து
நின்றநம் பெருமான் றனதடிபரவி
நிகழ்த்துவ மின்றவ னமக்கு
மன்றலங்குழலா யஞ்சலென் றருளி
மகவர மளித்தருள் குவனெனல். [௰௧]

வந்தரசியற்றி வாழ்குவ மாங்கம்
மகவர மளித்திடா னெனினுஞ்
சுந்தரவதனத் தெரிவை யந்நெறியே
சூழிருஞ் சடைமுடி தாங்கிச்

செந்த ழலிடைநின் றருந்தவம் புரிவோர்
செறியுமக் கான மேருவமென்
றந்தமன் னவர்கோன் மங்கைபா லுறுதி
யறைந்தவ ளுடன்றளிக் கெழுந்தான். [மஉ]

கஞ்சநன் மலரை யனைய வானனத்துக்
கன்னிய ரிருவர்முன் னெதிர
மஞ்சினு மிரட்டி யதிர்குரன் முரசும்
வலம்புரிச் சங்கமு மொலிப்ப
வெஞ்சலி னிறைநீர்த் தசும்புடன் மலரு
மினியநற் கனிகளும் வரமுன்
அஞ்சுக மொழிமின் னணங்குமன் னவனு
மறிந்தறிந் தகமகிழ்ந்தனரால். [மங]

பன்னகமிசை நின்றெழுந்து மேனிவந்த
பருமணிப் புரிசையும் பரந்த
மின்னொளி விரிக்குமாட மண்டபங்கண்
மிடைந்தபன் மறுகையுங் கடந்து
கன்னலி னமிழ்திற் கனிந்தமென் றீஞ்சொற்
கரும்புய னிகருமொண் கூந்த
லன்னமென் னடையி னணங்கு மன்னவனு
மங்பினத் தளிவலம் வந்தார். [மச]

செய்யவொண் கமல மலர்த்தவி சுகந்த
திசைமுகத் தயனுறு மிடர்தீர்த்
துய்யவின் னமரர் மஞ்சனமுதலா
வுள்ளன வெடுத்தினி தளிப்ப.
மெய்யவன் பொடுமா ராதன மியற்ற
விண்டொட ராசையங் கிரியோர்
தய்யவண் டினங்க ளிசைசெய்பைந் துளவத்
தொடையல்கொண் டடியிணை பணிய. [மரு]

ஒன்னல ரெனும்வெங் திரைக்கட லினையுண்
டொளிருமொண் டிகிரிமுன் னடையின்
இன்னொளி மழுங்கிப் பரிபவ முறுவ
மென்றருமாறிவங் தருக்கர்

பன்னிரு வருமுள் ளுவந்திறைஞ்சியடர்
பவரையோ லக்கமா யிருமின்
என்னவொ ரிருகை குவித்து வேகுபராக்
கென்றவர் கட்டியம் மியம்ப [௰௬]

புகரில் யாழெடுத்து மாடக முருக்கிப்
புரிகரம பிசைததிசை நிறுவிப்
பகரெழு வகையி னிசைகளை முறையிற்
பாணியிற் சுதையினு மினிதாய்
அகமகிழ் வொடுமக் கின்னர ரியற்ற
வவிர்ந்த செஞ் சடைமுடி தரிக்கு
நிகரிலாப் பருகுமார்க்கண்டரு மருங்கி
னெடியமா மறையினிற் புகழ. [௰௭]

முருகு கொப்பளிக்க நறவுகுள் துளவ
முடியினிற் புடைபரந் தளிக
டுருவிமுன் னடிக்கு மரம்பையர் தமக்குச்
சுருதியி னின்னிசை பயில
விருவிசும் பகட்டே ரிருளினிற் கிளர்வுற்
றெழுந்தவெண் பிறை திகழ் மறுவின்
றிருநுதற் றலத்துட் செழுமணங் கமழுந்
தென்கலைப் புண்டர மொளிர. [௰௮]

செவ்வரியோடிப் புடைபரந் தெழுந்து
செவியொடும் பொருதிக் காண்பவர் கண்
வவ்வுறு நீரதாகி நீண்டகன்று
மானிலத்துறு முயிர்ப் பயிர்கள்
வெவ்வினை யொழியத் தண்ணளி கொழித்து
விளங்கிருங் கண்ணிணை விமலன்
பவ்வவார் கலியுட் கிளர்ந் தெழுந்தகையோ
பங்கயமோ வெனத்திகழ. [௰௯]

வாட்டடம் பொருந்து மதிமுக மதனுண்
மலர்ந்தசெங் கமலமோ வதனுட்
காட்டிடும் பவளக் கடிகையோ வெனக்கண்
கவர்ந்திடு வாயித ழிலங்கக்

கோட்டிரு மலையிற் சினந்தெதிர் பொருதக்
கொழுஞ்சுட ரருக்கரோ ரிருவர்
ஈட்டு வெவ்வினையி னெழுந்தனர் கடுப்ப
இலங்கிட மகரகுண்டலமே ; [உ௰]

பொங்கலைப் புணரி நிலந்தனைக் கவர்வான்
பொதிந்தெழுங்காலையிற் கிளரும்
வெங்கனல் கடுப்பத் திகிரியு மொளிர்வெண்
விதுவெனச் சங்கமும் விளங்கக்
கங்குலிற்கரிய மலையெனப் பரந்து
கவினுறுமார்பிடைச் செழுநீன்
மங்குலிற்றிகழு மின்னெனத்துவளும்
வயங்கு முப்புரியிழை யிலங்க. [உக]

துங்கமுற்றமர்ந்த குடக்கெனுந் திசையிற்
றோன்றியம் புயலின்கீ ழுதிக்குஞ்
செங்கணிற்றுலங்குஞ் செக்கரினரையிற்
செழும்பொற் பீதாம்பர மிலங்க
விங்கருமுகிலினிவ்வணம் பொலிந்து
நின்றமெய்ப் பரன்றிரு முன்னர்
அங்கடற் றழைத்த வருள்கொண் மன்னவனு
மரிவையோ டினிதுவந் தடைந்தான். [உஉ]

அண்டமா யண்டத்துட் பொருளாகி
யரியநான் மறைக்கு மெட்டாத
புண்டரீ கங்கொ ணயனவெம் பெருமான்
பொலிந்துநின் றருள்பிரான் றிருத்தாள்
கண்டவர் தாளுந் தடக்கையுங் கூப்பிக்
கவினொளி விரித்திடும் பல்பூண்
மண்டல மாது புனைதர வீழ்ந்து
வணங்குபு நின்றன ரன்றே. [உங]

கருந்தட மலையிற் பொலிந்து நின்றருளுங்
கருணையங் கடலினை நோக்கிப்
பொருந்தல ருரத்தி னுதிரமுண் டொளிரும்
பொருவயிற் படைகொண் மன்னவனு

மருந்தினு மினிய மொழிநெடுங் கருங்கண்
　　மங்கையு மிருகணீர் பொழிய
வருந்திநின் றிரங்கி யிருகைமேற் குவித்து
　　வழுத்துவர் விழுத்தகு மொழியே. [உச]

(வேறு)

அண்டமு மீரேழுலகும் படைத்த னளி
　　லதிர்சனு யிப்பதியு ளமர்ந்தாய் பின்பு
முண்டகத்தி னுன்முகனைப் படைத்தன்னோனை
　　முன்படைத்த வுலகளிக்க முதல்வனுக்கத்
திண்டிறமில் லாதவனுன் னடியையுள்ளித்
　　திருவட்டாக் கரப்பொருளைச் சிந்தை செய்ய
வண்டிமிருந் துளவலங்கன் மார்பிலங்க
　　மாமகள்பூ நீளையுடன் வந்த கோவே. [உரு]

வெந்தறுக ணல்வாய்மும் மதப்புழைக்கை
　　வேழத்தை விற்படைக்கை வேடன் சீறி
வந்தடரக் கடமகன்று நெடுந்தூரங்கொள்
　　வழிதுரத்தி யிப்பதிக்கண்வர வன்னோனைத்
தந்தமதனு லுறுத்த வவனுங்குத்தத்
　　தந்தியுமக் குறவனுமித் தலத்தின் மாள
விந்திர னந்தகன்றா தர்க்கிலையென் றுந்த
　　னிணையடிக்காட் செய்துகந்த வெழிலிவண்ணு. [உசு]

வேதங்க ளீரிரண்டுஞ் சிச்சர்கட்கோர்
　　விப்பிரர்பன் னுள்வரையும் விளம்பிப் பின்னும்
போதமிலா னதிலொருவ னிருக்கை நோக்கிப்
　　புங்கவனும் புன்பிறப்பிற் போவாய் நீ யென்
றோதவவ னூரினம்விட் டயலூர்க்கேகி
　　யுன்றளி சூழ்புறம் பிடுங்கி யுடலம்பேணப்
பேதமிலா தெனதடிய னவனென் றுன்னிப்
　　பின்பிறப்பில் வீடளித்த பெருமையோனே. [உஎ]

வானவருந் தவளமத வாரணங்கொள்
　　வாசவனும் புயவலிபோய் வதியுநாட்டைத்
தானவர்முன் பறிகொடுத்தங் கமலயோனி
　　தனைத்தொழவங் கவனவர்க டம்மை நோக்கி

மாநிலத்திற் றிரைகொள் பொருணைக்கவாசி
வனமதில் நம்மானுகந்து வளர்கின்றானீர்
தேனின்மலர் கொடுதொழுமென் றுரைக்க வந்து
தேவர்தொழ வவர்க்கருளுஞ் செவ்வியோனே. [உஅ]

சங்கனெனு மறையோன்றே விருவரோடுன்
றனைச்சரியென் றெணியாசை தன்னைக்காக்கப்
பொங்குதவஞ் செய்திட நாரதனுமன்று
போந்தவனை வாரணமாய்ப் போவாயென்ன
வங்கவனம் முனிவனை யேத்திட மெஞ்ஞான
வறிவுணர்வாய் நீ யென்ன வவனும் பின்போய்
வங்கடலி யார்கலியுட் சங்கமாயுன்
மலரடி வந்தேத்தவருண் மனத்தினும்ன. [உகூ]

அண்டமு மவ்வண்டத்து ளுலவுந்தீயு
மலைகடலுமனிலமுமோ ரணுவின்மான
வுண்டுவந்தோ ராலடையிற் பாலனாகி
யோகசயநந்துயில வுந்திதோன்று
முண்டக மென்மலரதி னுன்முகனதோன்றன்னை
முன்படைத்தாங் கவற்குனையே மூல மென்னும்
பண்டை யிருக்காதிய நான்மறையனைத்தும்
பானிறங் கொளோதிமமாய்ப் பகர்ந்த கோவே. [௩௰]

பன்றியுருக்கொண்டு திரைக்கடல்சேர் மண்ணோர்
பருமருப்பிற்றுகளினைப்போற் பரித்து வந்தாய்
வென்றிகொளும் வழுதிவள நாடன்றுய்ய
மெய்ம்மையறந்தாங்கி சக்ர பாணியருள்
துன்றொளிர்வேலச்சுதர் தாமரைக்கண்ணர் பொற்
செங்கணர்பொற் காரிகையா ரெந்தை முன்னோர்
குன்றலிலா வழிவழி சந்ததிகளன்பிற்
கொடுத்தடிமைகொண்ட பெருங்குணக் குன்றேயே [௩௧]

பொங்கலை நீராழியினைப் புடையுடுக்கும்
புவிமகளைக் குடைநிழலிற் புரக்குங் கோவும்,
புங்கவிழித் தெரிவையு மிந்துதி மொழிந்து
புத்தெனு மக்கொடு நரகப் புவியிலெம்மைத்

தங்கவிடா தீடேற்றிக் கதியளிக்குந்
தனையரெமக் கருளென வஞ்சன வெற்பூடே
செங்கமலக் காடுடனோர் மதியுங்கூடிச்
செறிந்ததென நின்றவன்முன் செப்பினரே. [௩௨]

நன்னெறிவா யுலகமெலா மோச்சுஞ் செங்கோல்
நலமுறுவேந் தினையமொழி நவிலப்போதின்
மின்னுறையு மார்பனணி யாழிசங்கு
வில்கதை நாந்தகப் படைகொள் விமலன் கொண்மூ
வன்னவருள் சுரந்து பொலிந்தோங்கி நின்ற
வாதிமா லதிரிச வாக்காகச் செம்பொன்
மன்னுபணி மாடத்தென் குருங்கை செல்வீர்
மகவளிப்போமென வொருசொல் வழங்கினனே. [௩௩]

(வேறு)

என்னவெழு மம்மொழி கேட்டிரு புயமு மிருவரையை
மன்னநெடி தோங்கியிவண் மனமகிழ்வுற் றிறைஞ்சினனாய்
கொன்னவிலு மயிற்படையைக் கொடுமடையா ரிகலடக்கும்
மின்னவிரு மணிமுடியான் மின்னினை நேரிடையினொடு. [௩௪]

அருமறையு மளவிடுதற் கரியவொரு தனிப்பொருளாய்க்
கருமுகிற்போற் பொலிந்துநின்ற கருணையமுதினை வலமாய்
மருமலரு நிம்பமணி மதர்நெடுந்தோண் மன்னன்மனத்
தெருமர லற்றெழில் விரச சினகரமுன் றிலி லணைந்தான். [௩௫]

உலகமெலாம் பொதுநீக்கி யொருதனி நாயகம் புரக்கு
மிலகுமணிப் பூண்டிகழு மெழில்கனகத் தடவரக்கா
வலனமுறை யிற்கடிது வருதிரெனச் சாற்றிடலு
மலகிலற நெறியமைச்ச ரனைவரும் வந்தடைந்தனரால் [௩௬]

வந்தடைந்த வமைச்சரனை யருமரசர் கோனொலிக்குஞ்
சந்தமுறு மொண்கழல்க டயங்குமலர்த் தாடொழுது
சிந்தையுவந் துடையொடுக்கித் திகழ்கரத்தின் வாய்புதைத்து
முந்துநிற்ப மன்னனவர் முகநோக்கி விளம்பலுற்றான். [௩௭]

வண்டினங்க ளிசைபாட மஞ்ஞையெலாங் கண்ணுளர்போற்
றண்டலைவாய் நடனமிடுந் தண்குறுங்கை மாநகரு
ளெண்டிசையும் போற்றிசெயு மெம்பெருமா னெந்தமையாட்
கொண்டுவழி வழியருளுங் கோதிலாச் சுடர்மூர்த்தி. [௩அ]

அண்டமெலா மளித்தருளின் னருளாழி யண்ணறனைக்
கண்டுதெரி சித்திருகண் களிப்புறயாஞ் செல்வதினன்
மண்டுதிரைக் கடலனைய வரும் படைகளைக் கடிது
கொண்டு வருகுதிரென்னக் கோமானு முரைத்தனனால். [௩௯]

ஒன்னலர்தம் மணிமுடிக ளுரஞ்சுதா ளரசர்பிரான்
சொன்னவுரை கேட்டிருதாட் டுணையுமுடியிற் புனைந்து
நன்னெறியிற் றிகழமைச்சர் நவையிலாவிரைவினொடு
மின்னவிரச் சினகரத்தைவிட் டினிதுசென் றனரால். [௪0]

கூம்போடி வான்முகடு கூடுநெடுந் தேர்முதலா
யாம்பேர் படைக்கலங்கொண் டரசர்பிரான் திருமுன்னர்த்
தாம்போய் வணங்கி நன்குசாற்ற வவர்முக நோக்கித்
தேம்பாடு வண்டிணை தார்த் திருமார்பன் செப்பலுற்றான். [௪௧]

இப்பெருநம் படையொடுமுன் னேகுதிரென் றவர்க்கருளி
ஒப்பில்லாப பரிபூட்டி யுயர்மணித்தேர் கொணர்தியெனச்
செப்பிடச் சாரதி கொடியிற் சென்றிறைவர் கோனுரைத்த
வப்படியம் பொற்றேர்கொண் டரசர்பிரா னடிதொழுதான். [௪௨]

மஞ்செனவள் வார்முரசும் வால்வளையு நின்றதிரத்
தஞ்சமென வந்தடைந்தார் தமக்கருளுங் கருணைவள்ளல்
பஞ்சினைநே ரடித்துவர்வாய்ப் பணிமொழி யன்னளினொடு
விஞ்சொளிருந் தேரேறி விரைந்து பெரும்படை கலந்தான். [௪௩]

வேறு

மின்னொளி ததும்பியணி கொண்டவிர தந்தனை விரைந்துகொடுபோ
மன்னவ னரும்படையி றன்னவிருபங்கிலும் வளைந்துவருமால் (ய்
சொன்னபணி செய்யுமதி மந்திரியருந்திய துரங்க கணமு
முன்னத மிகுநதபுய மைந்தர்கடவுந் திகிரியும் பலவரோ. [௪௪]

சுந்தரரதந்தனை விரைந்தரசியங்க வயறுன்னி மயில்போற்
கந்தர கறுங்குழல் மடந்தைய ரடர்ந்தரிய கவரிவிசிற
வந்தவ னுகந்தபணி தந் தடிபணிந்து வரு மைந்தர்பலர்சூழ்ந்
தந்தர மெழுந்தணி புரந்தான் வருங்கவி னடைந்தனனரோ. [௪௫]

முத்தின நிரைத்தொளிர் மணிக்குவை யழுத்திவெளி முற்றுமொளி
சத்திர மெடுப்பவர்கள் சுற்றிலு நிழற்றவய றத்ததிமென (ரும்
மத்தள மடிக்கவின் மொழிச்சியர்நடிக்க விதழ்வைத்து வெதுபேர்
நத்தினமுழக்க வமுதத்தினி தொலிக்குமுயர் நாகசுரமே. [௪௬]

(சிறைகொளும்
வெண்டரள மண்டியணி கொண்டொளிரு தண்டிகையுண் மென்
வண்டர்நற வுண்டுகுதி கொண்டுலவு தண்டெரியல் மந்திரிகள் சூழ்ந்
தண்டைதனின் மிண்டவுயர் புண்டர மணிந்திலகு மந்தணர்குழாங்
கொண்டணிற வெந்தறுகண் தந்திமிசை யுந்திவரல் கோடியுளவே.
[௪௭]

குந்தமொடு சூலமயி றண்டுசிலை வாளிகதை கொண்டெறிதிரைச்
சிந்துவென லாகவெழு கம்பலைகொள் சேனைபல சென்றடருமா
லிந்துமுறி வானுதன் மடந்தையர் விலோசன மிருந்தொளிசெய
வந்துலவுமீனென விருங்கயல்கொள் கேதன மலிந்தனவரோ. [௪௮]

சித்திரமிழைத்த கனகப்படமுகக் கரி கதித்ததிரளி
றத்திவருமொப்பில வெணற்ற தவளத்துரகதத் தொகுதிகள்
அத்திரவிழிப்புவி மகட்குடை யெனப்பொலியு மற்புதமிகு
நத்தின மிகச்செறியு மத்தியிடை யெற்றலையிணைப்பொருவுமால். ௪௯

சந்திரவிருங்கவிகை யின்னிழலி றங்குறு மதன் றனணியார்
தந்தமடமங்கையருடன் கரியினந்தர மிசைந்து வருவோர்
சுந்தரமிகுஞ் சசிமடந்தையருடன் கரியதுன்னியெழுசூழ்
கந்தர மமர்ந்துவரு மிந்திர ரனந்தரி னிகர்ந்திடுவரால். [௫௰]

முத்தினமிகுத்திடு கடற்புவியிணைப்பொதுவின் முற்றுமளிகோன்
சுத்தமரையைப் பொருமடித்துணையிணைத்தொழுது சுற்றிவருமின்
பத்தியி னயிற்படையிணைக்கரமதிற்கொணிரு பத்திறலிணை
ரதமு ளிரத்தினமிழைத்த சிவிகைக்குழு வெணற்றவையரோ.
[௫௧]

சுத்தவமுதத்தினு மினித்தமொழிவைத்த பலசொற்கவிகளால்
வித்தகமிகுத்திடு குணத்தரசனைத் துதிசெய் விற்பனர்களைக்
கைத்துணை குவித்தவனெழுச்சியை யுரைத்துவரு கட்டியர்களை
யித்தனை யெனத்தெரித லுற்றினி துரைக்குமதெமக்கரிதரோ. ௫௨

எண்டிசையு மண்டிவருகின்ற விவரும்படை யெழுந்துகளெலாம்
விண்டல மடர்ந்திட மிருங்கதிர் மறைந்திட விரிந்தொளிசெயும்
வெண்டரள மென்னகை மடந்தையர் கலன்களு மிடைந்திருமணி
கொண்டவிரதங்களு மனந்தமரி யின்னொளிமிகுந் திடுமரோ. [௫௩]

பங்கய வரும்பினொ டெதிர்ந்தடி பரந்தணிசெய் பம்பரநிகர்
கொங்கையர் கருங்குழலிழிந்த மகரந்த மிருகும்ப மிசையார்
துங்கமுறு தந்திகள் பொழிந்திடு மதங்கவொடு துன்றிவிரவி
யெங்குமிகுபங்கமிடு மென்னிலவை யின்கண மியம்பவெளிதோ.
[௫௪]

தண்டிரைகொ ளங்கடலை யன்னவிரு பங்கில் வருதண்டுகளுநீர்க்
கொண்டலி னிருண்டுவரு தந்தமுறு தந்தியின்மி குந்தகுழுவும்
விண்டொடர் பொலன்குவடை யன்னவிரதங்களு மிசைந்துவரவி
வண்டமுழு துந்துதிகுறுங்கைநகரந்தனை யடைந்தனனரோ. [௫௫]

வேறு

நனைவிண்ட நறுங்கமலப் பிரசஞ்
சினைகொண்ட செழுங்கய லுண்டுகளுங்
கனைகொண்ட கருங்கடனேரகழைப்
புனைகின்ற பொலன்மதில் வானுறுமே. [௫௬]

புயலுற்ற பொலன்மணி மாளிகைகள்
கயலுற்ற கருங்கணுடங் கிடையார்
மயலுற்ற மதன்சமர் வென்றுமகிழ்
செயிரற்றொளிர் மேனிலை சேணுறுமே. [௫௭]

பண்ணுற்ற மொழிச்சியர் பற்பலர்க
ணண்ணித்தின நற்கழல் பந்துபயில்
விண்ணுற்று மிளிர்ந்சுடர் கூடமிகுந்
தெண்ணற்ற திருந்தணிசெய் திடுமால். [௫௮]

வாளுடுகிழிக்கு மதர்முலைமின்
ஞராடிடு நாடக சாலைகளுங்
காரான கருங்குழலார்களிசை
யாராயு மரண்மனையும் பலவே. [௫௯]

அமிழ்தத்துமினித்த வருஞ்சுவைமுத்
தமிழ்கற்றிடு சாலையுமால்புகழோ
தூமறத்தினுருக்கிளர் தூய்மறைநான்
குமுணர்த்திடு கூடமுமாயிரமே. [௬௰]

மணிவார் கொடிதூக்கிய மாமுரசைக்
குணிலாலே துவைத்திடு கோடணையு
மணியாழிசை யார்வமு மார்ந்திலகுந்
துணிவீசிய தோரணவாயிலெலாம். [௬௧]

கஞ்சப் பெணுளங் களிசெய் கணவன்
விஞ்சக் கதிர்வீசுபொ னிஞ்சியுப வெம்
நஞ்சத்தனரன் முடிகாணரிதாய்
விஞ்சித்திகழ் கோபுரமேலுறுமே. [௬௨]

மீனந்தவழ் மாடமிசைத்திமிர்பாற்
றானன்கொடியாடுத றென்னகர்வாழ்
மானின்மகவாமென வெண்கையினல்
வானென்றுவர் கூவுதல்மானுமரோ. [௬௩]

வேறு

முருகூரு நிம்பமல ரணியா னெழுந்தருளன்
முனமே யறிந்திநகர்வாழ்
இருநாக மன்னவிரு தனபார மங்கையரு
மிகலாரு மைந்தர்குழுவுந்
திருமாது றந்தவள மணிமாட மண்டியணி
செயும் வீதியெங்கு நடுவார்
மருவேரி யம்மடல் களொடுபூக முங்கழையு
மதியேற ரம்பைகளுமே. [௬௪]

கருமா முகிற்படியு மிருவானகட்டுற மகர
தோரணங்க ளிடுவார்
பருவா னிறத்தரள மணிவா யமைத்தொளிகள்
பரிகாவணங்க ளிடுவார்
அருமா டகத்தகழி யிடையா நெயிட்டு வெயி
லளிதீப மெங்கு மிடுவார்
விரிவா னகர்க்குமிடர் தருவீதி முற்றவுமி
விதமா யியற்று பொழுதில் [௬௫]

உலகேழுமுற்ற முடிவுறு நாளினிற் கிளரு
மூவாழிகட் கிணையெனப்
பலமாரு மப்படைக ளிருநா திசைக்கண்வரை
பரவா வரச்சுடர் கொளுஞ்
சலமா றையிற்படைகொள் வயவார்முதற் றலைவர்
தமை யீடழித்திடு புர
வலனீ டிரத்னமணி யதனு லிழைத்த நகர்
மதில் வாயினிற் குறுகினன். [௬௬]

இனனீதியுற்ற வறுதொழிலோ ரிருக்கொலியொ
டெதிர்காண் வரக்கரிய சூற்
கனமீதினிற் படியு மணிமாட மட்டில்பல
கவின்வீதி யிற்படவொளிர்
முனமேயுரைத்த நெடுமதி லாலயத்தினகன்
முது வாயிலிற் சிகரவொண்
டனம்மருவைப் பழிசெயணிதேர் நடத்தியட
றளம்மாடு முற்றனனரோ. [௬௭]

அடலாழியுற்றகர னடியா ரடிக்கமல
மகலா மனத்தி னிறையோன்
கடனீ டிரட்டியக லிகளுணை கட்கவணி
கவின்வாயி னிற்பவருளி
விடுதேர்நிறுத்தி நிலவுமிழ் மாமதிக்கு நிகர்
விரியான னத்தினணியார்
மடமாது பிற்செலமி ளொளிவீசுமத்தளியை
வலமாக வுற்றனனரோ. [௬௮]

மறையா தனத்திலுறை யொருநான் முகத்தவனு
    மறையோதி நிற்பவடல்கொ
ளுரையோதி மத்தினைவிலெனவே பரித்தவர
    னுறுகாதன் மக்களுடனே
விரையாரலர்த்துளவ முடியாயெமக்கருடி
    வினையே மடைக்கலமெனத்
தரைமீதினிற் றொழுது பவொய நற்றுதிக
    கடகையோ டியற்றிமகிழ. [சுகூ]

அகல்வா னகத்துறையு மிமையோர்கணத்தினொடு
    மயிராவதத்தின் மிசையூர்
இகன்மா மலைச்சிறைகடுணிதா றையிற்குலிச
    மெழிலார் கரத்தி னிகழ
மகவானடுத்தினிய நறையோடு கற்பகமென்
    மலரா லருச்சனைசெயத்
தகவாத ரத்தினொடு விரிசாம நற்சுருதி
    தனையோதிடத்தவர்களே. [எ0]

(வேறு)

மருவார் கமலங்கள் மலர்ந்தநெடுங்
கருமாமுகின்மீது கவின்றிகழ
வொருகோடி. யருக்க ருதித்தனெனன்
திருமா முடியொன்று திகழ்ந்திடவே. [எக]

வருசூரிய மண்டல மத்தியனென்
றருமாமறையான தறைந்தவெனப்
பெரியோர்க ளுரைத்திடு பெற்றியையா
முருவாக முனந்தெரி வுற்றனமால். [எ௨]

செடியாதுமிலாது செழித்த நுதற்
கடி நான முறந்நில கத்தினொடும்
விடுதண்சுடர் வெண்பிறை யொன்றுளதேல்
வடிவேறெனை மாறுமெனத் திகழ. [எ௩]

மாசற்றருண் மேனி மலர்ந்தவிருந்
தேசுற்றணிகொண்ட செழும் முகமெம்
மீசற்கிலை யுண்டெனி லென்றனைநேர்
பேசத் தகுமென்று பிறங்கிடவே [௭௪]

மரைமா மலரென்ன மலர்ந்தவிர்செவ்
வரிமீது பரந்த வருட்கணிணை
தரைவாழு முயிர்ப்பயிர் தான்வளரப்
புரைதீ ரருண்மாரி பொழிந்திடவே. [௭௫]

நருவொண்கதிரம் பொனின்மாமணியால்
வருவங்கத மிட்டுயர் மாநகருட்
டருவைந்தருவின் றிகழ்சாகை நிரை
நிகரென்னவீவ நாற்புய நின்றொளிர. [௭௬]

வாடாதமரைத்திரு மாமலரை
சாடா விலகங்கை கடம்மிலக
லாடாழியொ டொண்கதையந் தனுவா
ணீடாய வலம்புரி நின்றொளிர. [௭௭]

சிறையோகிமமேல் வருதேவனெடுங்
கறையாய களத்தரனை முதலோர்
அறியாது விளங்கு மடித்துணையா
நெறியாக நிகழ்த்துவ தெவ்வினையே. [௭௮]

அந்தப்படிகந் தமையத் தளியுள்
ளிந்தப்படி யேய்ந்திடு நம்பிமுனந்
சிந்தப்படி கண்டெனு தெவ்வரெலா
மந்தப்படி யாளிறை வந்தனனால். [௭௯]

காசத்த மனத்தரி காணமுன
மாசத்த மனத்தி சூழ் மானிலமு
ணேசத்த மனத்திறை நேரவுமெற்
றேசத்த மனத்தி றிகழ்ந்ததுவே. [௮௰]

ஓலைப்புனல் சூழ் புவியோம்பிடு செங்
கோலைத் தரிகோன் பவனிக் கெழுமக்
காலைக்குமுனே குறு கட்டியரின்
மாலைப்பொழு தெற்குமுன் வந்ததுவே. [௮௧]

கூவற்ற குயின்னட பற்றமயில்
வாவற்றிர ஞெண்ணிரை வைகுமிட
மேவச்செல்லுற்றன மென் கவிக
டாவற்ற குடம்பொழி றன்னிலரோ. [௮௨]

வீசக்கரவாக விருப்பியணை
நேசப்பெடை நீங்கின மென்குமுத
மாசைத் தனி யன்பர்வரக் களிகொள்
வாசக் குழலாரின் மலர்ந்தனவே. [௮௩]

பரிவிற் புணர்பான்மைய வன்பர்தமைப்
பிரிவுற்றவர் பேதுற வெங்குளரென்
றரிபற்று மலர்க்கணை யைந்துகொடு
திரிவுற்றனன் சித்தச னெங்குமரோ. [௮௪]

இவ்வாறு தூலங்குறு மெல்லிலடற்
றெவ்வானவர் சிந்தை கலங்க வொளிர்
வெவ்வாழி விளங்குகை நம்பியமா
ரவ்வாயி லிகழ்ந்த துறைந்திடுவாம். [௮௫]

திருக்குறுங்குடிப் படலம் முற்றும்.

# வரம் வேண்டுகோட் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

தேனுகு பூம்பொழி லிடைமாடங் களாருந்
திருநாராயணபுரத்திற் சிச்சார்கூடி
ஞானமுனி நின்னுருப் போலர்ச்சை யொன்று
நாங்களியற்றியதினடி நாளுந் தாழ்ந்தெம்
மூனமறவேண்டுமெனப் பணியச் செய்வித்
துடையவரோ வென்றதைமாற் றுரைக்கச் செய்ரா
மானுசன்றுளிணை மலர்நஞ்செ ன்னிசூடி
வரம்வேண்டுகோட் படலம் வருவிப்பாமல். [க]

(வேறு)

கொந்துற்ற குழற்கொடி நேரிடையு
வந்துற் றமரு மரைமாமலரின்
பந்திச் செழு மாமுகில் பார்த்தனரால்
வந்திக்கு மறைப்பொரு டன்னைமுனே. [உ]

வெண்ணித்தில வொண்வட மேமுதலா
மண்ணிற்பட வீழ்ந்து வணங்கியிரு
கண்ணிற் புனலோடு கனிந்துருகி
நண்ணிப் பறுதிப்பை நவின்றிடுவார். [ங]

அற்புக்கொரு வாரியினை வளாய்ப்
பற்பத் தனிமேவிய பாலின்மொழி
கற்புத் திருமங்கை கவின்றிகழ
விற்பத்தொடு மெய்மணிமார் புடையாய். [ச]

மஞ்சிற் கரிவாவென வந்தருள்வான்,
கஞ்சத் தடமேவிய வெங்கரவைத்
துஞ்சக்கன்னின் றெரி தூய்மையுறும்
அஞ்சக்கரம் வீசி யறுத்தவனே. [ரு]

அரிதாய பலாயிர வண்டபெலாம்
விரிவாக விடுத்திடு னெக்கடியேந்
தரிகான்முளை தன்னை யெமக்கருளல்
பெரிதோ விதுவென்று பிறழ்ந்தனனே [சு]

வேறு

இன்னவாறுள பின்புற் றிறையுமா
றன்னை வாழ்த்தித் தளிவலமாய்முகின்
மின்னையே யிடை மெல்லியலோடுதான்
மன்னிகேதனம் வந்தணைந் தானரோ. [எ]

மாலதிக்கிணை யாகிய வாலனம்
பால சர்க்கரை நெய்யொடு பாகமாய்
வேலைமாய னமுதுசெய் மிச்சிலை
கோலமோடுண் டருந்துயில் கொண்டனன். [அ]

அனனடைப் பொன்னணங்குறு நம்பியவ்
வினனிடங் கனவினுனக் கஞ்சவா
கனனநும் பொருடக்தவன் காதலார்
தனைய னற்பொருடந்தில னென்றனன் [கூ]

சொன்னவாய்மை துனைச்செவி யேறுமுன்
மன்ன னுள்ளடலத்தி மதிநகற்
பொன்னிமீனொடு புலரி நீராடிமால்
சந்நிதிக்குட் புகுந்தினல் சாற்றுமால் [ω]

மெச்சயன் மதமேவ மறையை நின்
னிச்சையா லசுரர் சென்றெடுத் தெழற்
கச்சமுற்ற வவன் றுயராற்றுவான்
மச்சரூப மெடுத்தருள் மாயனே. [ωக]

இமையவர் திரண்டின்புற வின்சுவை
யமுதமீயெமக் கண்ணலெனச் சொலச்
சிமையம்வெந்நுறச் சேர்த்திட வாரியுட்
கமடமாகிய கார்முகில் வண்ணனே. [ωஉ]

இரணியாக்க னுயிர்க்கிடர் செய்குவான்
தரணியைக் கொடுபாதலந்தான் செல
வரணியாவெனு மன்பர்க்கருள் செய
முரணியங்கிடியாய் வருமூர்த்தியே. [௰௩]

பாரினுட் பரநாமலதில்லை யென்
றாருயிர் முன்னறைந் துரையீரெனுங்
கூரயிற் கனகன் னுயிர்கோறவை
நாரசிங்கம தாய்வரு நம்பியே. [௰௪]

திறமிலா மையிற்றேவ ருலகையும்
மறமுறும் புயமாவலிகைக் கொளத்
தறையும்வானு நின்றாளிணையே தொழக்
குறளுருக் கொண்டருளிய கொண்டலே (௰௫)

அத்திசூழு மிலங்கை யரசனுன்
மெத்தவாற்றன் மெலிந்துள சந்துமா
கத்துளோருன் கழறொழவன் றுகா
குத்தனுய் வந்தருளிய கொண்டலே. [௰௬]

மண்ணகப்பெண் வருந்தி நினைத்தொழு
தண்ணலென் பொறையாற்றுவை யென்றலும்
முண்ணெகிழ்ந்தங் குகந்தெழிலான் மிகுங்
கண்ணனாகி யருளிய கர்த்தனே. [௰௭]

பாருளோர் வெம்பவத்தினை பூண்டுனைச்
சேர்கிலாது புன்றிய மதாந்தராய்
நீர்மைகுன்றிட நீயவர்க் கின்னருள்
கூரவே கற்கியாய்வரு கொண்டலே. [௰௮]

பழுதி லெண்டிசையோர் புகழ் பண்பரு
வழுதி மன்னர் மரபினுதித்தயான்
எழுதலை முறையாயுனையே தொழு
மழலைநன்மக வில்லெனன் மாட்சியோ [௰௯]

ஊழ்வினைப் பயனோ வலதும்பர் பாற்
றாழ்வு செய்தனனோ பற்றளிகளாம்
வாழ்வகற்றி வதிந்தனனோவல
தேழைமாந்தர்க்கிட ரிழைத்தேனரோ. [௨௰]

பொம்மலுண்ணக் கலத்துறு பூசுரர்
தம்மையேகக் கடிந்தனனோ தமிழ்ச்
செம்மலார்ந்த கொழுநனைச் சேர்தரு
மைம் முகிற்குழல் வாழ்வறுத்தேனரோ [உக]

மண்டலத் துண்மகவுறு மாந்தரைக்
கண்டு நெட்டுயிர்ப் புற்றனனோகரங்
கொண்டு பாலிறையேனுங் குழவிகட்
குண்டுகக்க வுதவின னில்லையோ. [உஉ]

வேதியர் பெரியோர்கள் வியந்ததங்
காதலாரைக் கருதினனோ வயல்
மாதரோடு மருவிக் கருவையுந்
தீதெனாது செகுத்தனனோ கொலோ. [உங]

ஊதியத்திலவாவி யுலகமொவ்
வாத பொய்மை வழங்கினனோபலி
யாதுலர் முன்னளிக்குவ னென்றலைத்
தேதுமில்லுமக்கேகுமினென்றெனோ. [உச]

கொஞ்சமேனு மிரக்கங் கொளாதுயி
ரஞ்சவீண்கொலை யாற்றினனோ வெனைத்
தஞ்சமாகுந் தமர்க்கருள் செய்வபோல்
வஞ்சமே செய்மனத்தினனே கொலோ. [உரு]

பெற்றவின்பயம் பேரிளங் கன்றுணைச்
சற்றுமின்றித் தகைந்து கறந்துவாக்
குற்றசங்க மொழித்து மதுவினைக்
கற்றிலாரிற் கருதியுண்டேன் கொலோ. [உசு]

மெய்வருந்த விழைத்திடு வேலையர்க்
கெய்து கூலி கொடுத்தன னில்லையோ
செய்யெனாமுனஞ் செய்தவர் நன்றியுண்
மையதாக மறந்தனனே கொலோ. [உஎ]

ஆறிலொன்று கொளாதுறத் தாசையால்
ஊறு செய்துல கோம்பினனோதவத்
தேறுபோல்வர்க ளெய்திடில் யான்கொடுஞ்
சேறு சேரவெழா திருந்தேன்கொலோ. [உஅ]

முன்னியற்றுந் தவமுடிவில்லையோ
பின்னிழைத்திடும் பேறுங் குறைந்ததோ
வின்னிலத்திலி யாங்கள் மலடராய்
மன்னவென்று வரங்கொணர்ந் தேமரோ. [௨௯]

அன்றுவேழ மழைக்கு முனைவலாய்ச்
சென்றுறாஉகண் செகுத்துத் துரோபதைக்
கொன்றவாடை வுதவிய நின்னரு
ளின் றெமக்கிலதாயதெ னேந்தலே. [௩௰]

(வேறு)

இப்படிக் குரிசி லுள்ளத்திருந்த வெந் துயரமெல்லாம்
மைப்புயலுரு வோனக்கன் மலமறக் குருதீ யீந்த
நப்பினையணங்குகேள்வ னம்பி காற்றுணையில் வீழ்ந்து
செப்பினனழுங்கிப்பல்காற்றிருக்கு நீர்கலுழமாதோ. [௩௰௧]

மண்ணினன் களைகணீயென் றலமரு மாண்பு நோக்கிப்
புண்ணியவெதிவேந் தன்பிற் பொறிக்கும் புண்டரமிலங்கத்
தண்ணளிக்கடலா னம்பிதனதுள மகிழ்ந்திவ் வேந்தின்
கண்ணினுக் கணியனுய்நின் னியசொற் கழறுவானல். [௩௰௨]

மானிலத் துறவிலார்தம் மண்டமர்கடந்த வொள்வேல்
மீனவன் மரபுட்டோன்றும் வேந்தனக்குரிய சேயாய்
நானடைகுவனின் சோக நவையற மகிழ்ந்தெல்லீருந்
தேனின முரலுஞ் சோலைக்குருகை சென்றிடுமினென்றே [௩௰௩]

மாயவனுரைத்த மாற்றம் வள்ளறன் செவியுறுமுன்
வேயுறழ் புயமிரண்டு மேருவினி மிரச்செய்யாள்
நேயனேவன்மீ னட்ட நேமியா யுலகமுண்ட
தூயகந்தரத்தாயென்றே துதிபல வியம்பிநின்றான். [௩௰௪]

பாடினு னாடினுன் செம்பதமலரணி முடிக்கட்
சூடினு னுழியானின் சுதனெனுங் கருணையே கொண்
டாடினனணியனு மவ்வாண்டகை வடிவு நோக்கங்
கூடினுன் றெழுதா னின்பக் குளிர்கடல் முழ்கி நின்றான் [௩௰௫]

விஞ்சையரியக்கர் விண்ணோர் விரைகொளேந் தருவின் பூவான்
மஞ்சன மாரிபெய்ய மண்ணுளோரிறைஞ்சி யேத்த
கஞ்சமின்னிலகுந் திண்டோட் காரியார்க் கருளீந்தன்று
குஞ்சரத்துறுகணீத்த கோவலன் கோயில் புக்கான். [௩௬]

மாமனங் கதர்சனக மறைந்தபின் குருகிதோய்ந்த
நாம வேலிறையுங் காதனங்கையு மிக மகிழ்ந்து
தேமலர்த் துளவினான்றன் சினகரம் வலமதாய்த்தன்
றூமமுற்றடிசி லுற்றுத் தளத்துடனிருந்த பின்னர். [௩௭]

பிழையறப் புவிபுரக்கும் பேரருட் குரிசினீதி
யுழையரை விளித்து யூகமொலி கடற்றிரளே யின்பந்
தழைவுறச்செய்து பிற்றைப் புலரியிற்றருதிர் நீவிர்
குழைபொருகயற்கணார் வாழ்குருகையா மடைதற்கென்றான் [௩௮]

ஆங்கரசியம்பா முன்னரறிவின்மிக் கமைச்சரெல்லாம்
பாங்குறு மிரதமியானை பாய்பரிபடைக்குழாங்க
ளீங்குவந்தடைந்த தெந்தாயினி யருளென்னேயென்று
வீங்கிய குவவுத்திண்டோள் வேந்தனுக் கறிக்கைசெய்தார் [௩௯]

மந்திர மறையோர் வாழ்த்த மங்கள வியங்களார்ப்ப
பந்தையொத் தெழுந்த கொங்கைப் பரத்தையர் நடிப்ப மன்னன்
பைந்துள வலங்க னம்பி பங்கயப் பதமுட்கொண்டு
வந்தனைபுரிந்து பொற்றேர் மங்கையோ டேறினானல் (சல)

வாளரி மதர்க்க ணல்லார் வயங்கு சாமரமிரட்ட
காளமும் முரசு சங்குங் கறங்க வானிலவு காலுங்
கோளகை கவிகை யேந்திப் படைகளின் குழு முன்செல்ல
வாளிமொய்ம்பினனும் பொற்றே ரணிகொள் வாம்பரிநடாத்தி. (சக)

குருகி தோய்ந்தொளிரும் வெற்றிக்கொற்றவேற் கலியனன்பர்க்
கருணிதியமருமவ்வூர்க் கண்படுகதனைத்தாண்டி
இருவிசும்பணவு செம்பொனெயிலகழியையு நீங்கித்
திருமகிழ்ந்துறையு மார்பன் செழும்பணைத்தலமடைந்தான் [சஉ]

வேறு

தூயதாமரைத் தடத்தையு மத்தடந்தோயு
மாயந்தன்னையு மணிமலர்க் காவையு மயலி
னேய தண்பணை களையுமற் றுளவளமெல்லாம்
ஏயவோகையி னணங்கினுக்கிறையவன் காட்டும் [சங]

அங்கயத் தடைக் தரிவையர் நோக்கியிர்க் தாடச்
செங்கயத்தடி முகத்தொருதனமு மேற்றெரிதல்
வெங்கயத்தடர் முலையினு யாங்கதில் விளங்கும்
பங்கயத்தடமலர் முகைபோன்றன பாராய் [௪௪]

வடுவகிர்க்கிணையாயகண் ணாங்குசின் மடவார்
இடுபுனற் குடைந்தேந்து பின்குழலில் வைத்திடுதேன்
விடுவெண் டாமரைப் போது சூற்கொண்முகின்மீதில்
படுமுடுக்கணம் போன்றினி திலங்குவ பாராய் [௪௫]

மாங்குயிற் சொலி னன்னவர் குடைந்தெழ மறைக்குந்
தேங்குழற்றிர ளொதுக்கிடத் தெரியும் வத்திரந்தான்
ஈங்கெழிற் கொடியிடையினுய் மேற்படரெழிலி
நீங்கவுட் டெரிவெண்மதி நிகர்த்தன பாராய் (௪௬)

அனிச்சப்போது மெனஞ்சத்தின் றாவியுமழுத்தி
நனிச்சிவப்புறும் மடியினுய் நாரந் தோய்வான்செல்
கனிச்செவ்வாயினர் சிலம்பொலி கேட்டனக் கணங்கள்
பனிச்சையோடுதம் மினமெனத் தொடர்வனபாராய் (௪௭)

கருமுகிற்குழலாயொருகன்னி செங்கமல
மருவையோருவானுசி வைந்திடமுகமதியென்
றுருகு கூப்புமம் மலரினைக் காணி லதன்னுர்
திருமுகத்திணுக் கடையு நாணென்னலாந் தெரிவாய் (௪௮)

கோங்குகொங்கைகள் காட்டநன்முருக் கிதழ்காட்ட
மாங்குயின் மொழிகாட்ட மாவடுவிழிகாட்டத்
தேங்குழைத்தளிர் திருவுருக் காட்டிடச் சிறந்து
பாங்கரும் பொழின் மடந்தையர் போன்றன பாராய் (௪௯)

விரியறத்தின ரரும்பொருள ளடையுமவ்வேலை
யரியதாயதம் முறவினைத் தழுவுத லனையக்
கரியவாயசக் தானுணும் மிரையினைக்கண்டே
யுரியதன்கிளைகூவுவ காண்டியொண்டொடியே (௫०)

தேகி யென்றவர்க் கிப்பியு மளித்திடாச் சிறிய
ராகி நின்றவ ரரும்பொருளாக்கிக் காப்பதுபோல்
கோகிலத்தினன் மொழிமினய்த்தேன்கணங் கொழுந்தே
னேகி யெங்கணு மீட்டிவைத் திருப்பன பாராய் (ருக)

வயற்றலங் தொறுமடர்ந்தபைங்களைகளை மாய்க்கும்
புயற்றருங்குழலுழத்தியர் கண்ணெழிற் பொலிய
வயிற்றிரிந்திடும்புட் குலமவாவொடு மடைந்து
கயற்றிரள்களென் றேங்கியங் கிருப்பன காண்டி (ருஉ)

வேறு

இன்னதன்மைய வளனெலா மெடுத்தெடுத் தொளிரும்
பொன்னின்மாமௌலி மன்னவன் புயற்கருங்குழற்பைங்
கன்னனன்மொழிக் கனியிதழ்க் குரைத்துரைத் துகந்து
செல்கென மன்னிய பணைபொழிற்பின்னிடச் சென்றான் (ருங)

பெருகு மார்கலிக்கிணையெனப் பெருத்தவப் படைகள்
வருகநாற்றிசைப் புறத்தினு நண்ணிவெண்மருப்பார்
பொருகை மாமதக்குஞ்சரம் புரைபவனுயர்ந்து
குருகைமாநகரந்தனைக் குறுகினனன்றே (ருச)

ஆதிநான்மறை யந்தண ரோதிடமடவார்
வீதியெங்கணு மயினிநீர் சுழற்றிடவினிதன்
மாதினோடு பன்மாமணிமறுகெலாங் கடந்து
கோதிலாத தன்கோயிலைக் குறுகினன் கோமான் (ருரு)

இருந்ததானைகட் கொருவிடைகொடுத்தினிதிறையோன்
பொருந்துநீண்முகிற் பொலிந்துநின்றருளிய பெருமான்
றிருந்துசேவடி யனுதினந் தொழுதுமண் சிறிதும்
வருந்துறாதுளமகிழ்ந்தரசியற்றியே வந்தான் (ருசு)

கந்தமாலுகக் கண்ணிகொள் காவலனினிதின்
இந்தவா றரசியற்றி நுண்ணிடையிற விணைந்த
சந்தவார்முலைத் தையலோடினிது வாழ்வுறுநாள்
வந்தவாறெடுத் தியம்பிடலுற்றனன்மன்னோ (ருஎ)

(வரம் வேண்டுகோட் படலம் முற்றும்)

# திருவவதாரப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

வாதினன் மிருவாதியர் தங்களை
நீதிநூல் கொடுவென்று நினைப்பருந்
சேதி நீளெந்திரத்தினி லிட்டநங்
கோதில் ராமானுசன் பதங்கொள்ளுவாம் (௧)

ஆரஞ் செய்ய வலரணமோடுச
கோரஞ் செய்மன் குருகைபுண் மாறனைய்
நீரஞ் சேயவ ணேய னடைந்தவ
தாரஞ்செய்படலந்தனைச் சாற்றுவாம் (௨)

வையமோர்குடை நீழலிற் வைத்தெழிற்
றையலோடு தருக்குற வாழுநாட்
பொய்யிலாதவப் பூவை வயிற்றிடை
துய்யசூற்குழ் தோன்றியதற்பமே (௩)

மங்கலஞ்செய மாமல ரன்னவே
பொங்கருட் பொலிவுற்ற பொலன்முக
மெங்கும் வெள்ளியவாகி யிலங்குமொண்
திங்களென்னத் திகழ்ந்தது மாதரே (௪)

மட்டுவாரு மரையின் முகையெனப்
பட்ட வார்கொ டணிந்த பயோதரங்
கட்டவிழ்ந்தவக் காளின் மலரென
வட்டமிட்டு மணிக்கண் கறுத்ததே (௫)

துங்க வேலைச் சுடுசரந் தன்னையொண்
கொங்கவிழ்ந்த குவளையம் போதைவெல்
லுங்கருங்கண் குழைந்துடல்ரோமமெய்
அங்கமெங்கு மழகிற்பொடித்ததே (௬)

ஓது மோகை யடக்க வடங்ககில்
லாதுமேற்கசிவார்ந்தது போலவே
கோதினீலக்குழற் கொடி நேரிடை
மாதின்மேனி வெளிர்ப்பு மலிந்ததே (எ)

தொன்மரத்தி னிலையிற்றுலங்குறு
நன்மைப் பண்டிநலத்திற் கனத்ததவ்
வின்மலிந்தநுதற் கொடிமின்னெனுந்
தன்மையான விடையுந்தடித்ததே (அ)

தண்ணிலாவின் தரளமணியென
வண்ணியெங்கும் சுவேத மரும்பிய
துண்ணிவந்த நரம்புடம்பெங்கினும்
மண்ணுவப்ப மலிந்து பசுத்தவே (கூ)

நலந்தருங்கொடி நைந்தவிடைச்சிதன்
புலங்கொண்மேனியிற் போர்த்த பசுநரம்
பிலங்குபொற்றிருப் பாவையிடையிடை
துலங்கிழைத்த மரகதந்தோன்றுமால் (ய)

செயிரறும் பலதேசிக நற்கலன்
பயில்வுறுந்தன பார வரைமிசை
யயர்விலேற வமைத்த படியெனும்
வயிறணிந்த மடிப்பு மறைந்தவே (யக)

அண்டமுமதனுட் பொருளியாவையும்
உண்டகட்டிலடக்கு மொருவனே
கொண்டன் மைக்குழற் கோற்றொடி மாதுதன்
பண்டிவந்து படிந்தன னென்பரால் [யஉ]

தேங்கொள் செங்கம லாதனன் றேடரும்
பூங்கழற்றனிப் போற்றிருந்தான்றனை
பாங்குபெற்ற பசுங்கொடி மாதுதான்
றாங்கிநிற்கத் தவமென்செய்தாளரோ [யங]

கன்னிபண்டியைக் கான்வடமாகவே
முன்னரே யுவமிப்பர் முறைமையால்
பொன்னுடைப்பரன் போந்தனன் வைகலா
லன்னதேதிரமாக வமைந்ததே [யச]

வேதமோதிய வேதியருந்தவப்
போதஞானப் புனிதரும் போந்து போந்
தோது மன்னவர்க்குற்ற சடங்கெல
மாதந்தோறு மடவரற் காற்றினர் [௰௫]

குமுதவாய்க் கொடிக் குற்றிடைப் பாங்கிமா
ரமுதினுமினிதாக வமைபல்வி
தமுதிருண்டிதர வெறுத்தும்முணு
துமுதகங் கணந்தோறு மருந்தியே [௰௬]

மாத மைந்தினே டைந்து மலிந்தபின்
றீதமைந்தித் திரைநெடு மண்ணெலாம்
பேதமைய்யிற் பிழைப்பரிதாமெனப்
போதமைந்த னுருக்கொடு போந்தரோ [௰௭]

பேதியாது பிறங்குமெய்ஞ் ஞானத்தைப்
போதியா நற்பதந்தனிற் போக்குவா
னேதிருக்கு மறத்தெரிந்தோர்கிலா
வாதியான பரஞ்சுடரண்ணலே [௰௮]

சந்த நீண்முடி மன்னன் றவத்தினல்
இந்தமாதி னெழில்மிகு பண்டியில்
வந்தடங்கி யிருக்கு மகிமையாம்
விந்தைதன்னை வியப்பொடு நோக்குவான் [௰௯]

கந்தரத்திற் றலங்கு களத்தனெ
டுந்திமா மலரோனை முதலவா
னந்தரத்திறை யோனெ டமரரும்
வந்துநாளும் வணங்கித் துதிப்பரால் [உ௰]

வேறு

வானக முகட்டின்மீதுவயங்குபொன் முடிகளோங்கத்
தேனகமலர்த்தாட்சேடன் செகத்துறப் பொலிந்துநின்ற
நீனக முலையிம் மாதின் நெருங்குறு வயிற்றிற்போந்த
தீனரைக் கலவாச்சோதி யெவ்வணமுரைத்தி யென்பார் [உக]

அண்டமு மதனுள்ளான வலைபுனற்ககனநேமி
மண்டெரி யனிலமற்று மனிதர்புள் விலங்கிபாவும்
உண்டகட்டிடையே வைத்தவொருவனை மடமினுடன்
பண்டியுளடங்கி நிற்கும் பரிசெவன் பகராயென்பார் [உஉ]

தொலைவறுநிலையதாகத் துலங்குறுந்தமைந்து
நிலைதிரிந்திருக்கு மூழி நெருங்கிய வேலைதன்னில்
உலைவுருவனைத்தும் பண்டியுள்ளுற வடக்கியாலி
னிலையதன்மீ வளர்ந்தார்க் கிதென வரிதோவென்பார் [உங]

திங்களின் மரபிற் றோன்றித் திரைநெடு நேமியாண்ட
பொங்குவேல் வழுதிமன்னர் புரிந்தமெய்த்தவமோ வென்பார்
இங்கணிவ்விறையோன் செய்தவெழிற்றவப்பேறே யென்பார்
மங்குனேர்குழலாள் பெற்றமகிமையே மகிமையென்பார்[உச]

எம்மை யாளுடையவீச னிங்குவந் துதித்தலாலே
விம்மூநீர்ப்பொருனை யேயவ் விரசையா மென்பாரீங்கே
இம்மியுமகலா வாழ்வுற்றிருந்திடுமவரே நித்யர்
பொம்மலிநகரேயந்தப் புனித வைகுந்தமென்பார் [உரு]

கோதகமுடையராகிக் கொடுந்தொழில் கொலைகளாதி
பாதகம் புரிந்துநாளும் பழிப்புறு நிலையரேனுந்
தீதகற்றிடு மித்தூய திருநகரடையிலன்னோர்
மாதகவுடையராகி வாழ்வர் விண்ணாட்டி லென்பார் [உசு]

மண்ணிழை தவமோ மற்றுயானிடர் தவமோமீதின்
விண்ணவர் தவமோ வேள்விவேதியர்தவமோ தென்பால்
நண்ணினர்தவமோ விந்த நகரிழை தவமோயாரும்
எண்ணரிதாய சோதி யிங்குவந் துதிப்பவென்பார் [உஎ]

இவ்வணமடைந்துநாளுமிமையவர் வணங்கியேகப்
பவ்வமைக்கடனே ரங்கட்பனிமொழிக் கரியகூந்தற்
கொவ்வைவாய்த் தெரிவையாகங்குழையெனக் குழைந்துவாடி
வவ்விநேர்விழிகொள் பாங்கிமா ரிருபுறமுந்தாங்க [உஅ]

மெலமெலநடப்பாளொல்கி மீளவுமடைந்துசோர்வாள்
அலணையொண் கூந்தல்சோர வலமரலடைவாள் யாருஞ்
சலம்வர முனிவா ளன்னாள் சார்துய ருரைக்கலாமோ
தலமிசை யிருந்திவ்வாறு தளர்வொடுவருந்துமெல்லை [உகூ]

விண்டல வெளியி னின்று விளம்பிய வமர ரெல்லாங்
கண்டரு மறைக ணின்றுங் கருதுதற் கரியசோதி
மண்டலத் துதிக்கும் வேலை வந்ததின் றெனவுள் ளோகை
கொண்டுநம் வினைக ளெல்லாங் குடியொடுந் தொலைந்ததென்று
[௩0]

அடக்கருமுவகை வெள்ளத் தாழ்ந்தன ராகிப் பாவத்
தொடக்கறுத் துய்ந்தோமென்னத் துணைக்கர முடியிற்கூப்பி
யிடக்கறத் தொழுவ ரோரா யிரமறை நவிலுநாமம்
விடக்கருந் திலர்களாகி விளம்புவர் குணங்களெல்லாம் [௩௧]

ஆடுவர் கள்ளுண்டாரின் மெய்மறந் தறிவுசோர்ந்து
பாடுவர் மறைகளுன்கும் பற்பல தரமானந்தத்
தோடுகட்புனலில் மூழ்கி யுருகுவ ரினிதி னுள்ளம்
பீடுற விமையா நாட்டம் பெற்றமை பலித்த வென்பார் [௩௨]

இருவிசும் பகட்டுள்வாளே ரிவ்வண்ண மாடிப் பாடி
மருவிரி தருமந்தார மலர்கொடு சொரியச்சோதித்
திருமுகத்தரம்பை மாதர்செருக்குடனடிப்பயாரு
முருகயா மெழுடுத்தியக்க ருகந்தன ரிசைகள்பாட [௩௩]

அடல்கெழு வாணனோ ராயிரங் கரங்களாலுந்
திடமுட னடிப்ப வார்க்கு மொலியெனத் தெருவிலூடே
குடமுழாத் தொனிமுழங்கக் கொடும்பவத் தொடரறுத்துக்
கடம்படுமுனிவோ ருள்ளக் கவலையற் றுவந்து வாழ்த்த [௩௪]

நவமணிக் காளஞ் சின்ன நவையிலா முரசத்தோடும்
தவளவொணிலவு காலுஞ் சங்கமு முகிலினார்ப்பப்
பவளவாய்க் கரிய கூந்தற் பைந்தொடி சுதையி னின்சொற்
குவளையொண்கண்ணா ருள்ளங் குளிர்ந்து மங்கலங்கள்பாட
[௩௫]

வழக்கிடப் பலநூ லாய்ந்தும் வாய்மைகொ ணிலையைத்தேறாச்
சழக்குறுபுலவோ ருள்ளந் தன்னின் மெய்யறிவுதோன்ற
இழக்கவெவ் வினைகளெல்லா மெத்திற முடையாரேனுந்
தொழக்கருத் துடையராகுந் துணிவரு டேவேயாகி [௩௬]

வேறு

நண்ணிய கலியி னூற்பத்து மூன்று நாளென
நவில்பிர மாதிப்
புண்ணிய வாண்டிற் புனிதவைகாசிப் பூரணை
வெள்ளியுங்கலந்த
வெண்ணியதிருவிசாக நன்னாளி லெழிதிரை
யறிதுயின் மாலே
விண்ணைழுமுதைய விரவிபோன் றுலகில் விளங்கிளமழ
வயிற்றினின் றுதித்தான் [௩௭]

பொங்குவெண் டிரைகொ ளிருநில வரைப்பிற் போற்றுறு
மடியவர்முகமாம்
பங்கயமலர்கள்விகசித மடையப் பரமத
விருளின மிரிய
விங்குழலுயிர்கள் பவப்புனல் சுவற வெண்ணரு
மணிமுரன் றிருந்தேன்
சங்குறும் வகுளபூடண பாஸ்கரோதய
மாயது பாரீர் [௩௮]

கணிப்பெரு நிலைய வாரண நான்குங் கருதிநின்
றளவிடற்கரிய
திணிப்பெருந்திரம்பாடிருமுத றலைவன்
செழியனன்னுதற் சிறுமகவாய்ப்
பணிப்பெருஞ் சுடிகை மிசையுறக் கிடந்த
பாரிடத் துதித்தன னென்றுன்
மணிப்பெருமுடிய மன்னர்கோ னிழைத்த
மாதவ மியம்பிட லெளிதோ [௩௯]

மதித்திட லெவரு முதித்தவக் கணமே வருசட
வாயுவைத் தடுத்துக்
கதித்தமெய்ஞ் ஞானக் கடலிடை மூழ்கிக்
கண்ணிணை யுறவிழி யாதுஞ்
சதிர்த்திருப் பவளவாய் திறவாதுந் தரையிடை
யசைவறக் கிடந்த
வெதிர்த்தசெஞ் சுடரின் றேசுறுங் குழவிக்
கிருளைய ரிணையன புரிவார் [௪௰]

இளநிலவெறிக்கும் பிறையினைப் பழித்தங்
 கிலங்குறு நுதற்றலந் திருத்தித்
தளதளப் புடனுட் டிரண்டழ கொழுகித் தயங்கிடு
 நாசியை யுறாவி
வளமைநற் கரமு மணிமுழந் தாளும் வகையுறக்
 கைகொடு முறுக்கிக்
கிளர்தரு மம்பொற் கோடிகத் தேந்திக்கெழீ இயபொற்
 சுண்ணநீ ராட்டி [சக]

நறியபொற் கலையின் மெய்யது துடைத்து நாபிநற்
 றலமுற நோக்கிச்
செறிமயிர் மணியுச்சியினையும் பொத்தித்
 திசைத்தயர் வதிகரித்திருந்த
மறிமரு ஞோக்கின் மடவர றன்பால் மைந்தனை
 மலர்க்கரத் தேந்தி
வெறிமலர்க் கூந்தற் குவளையொண் கண்ணார்
 விழைவொடு மளித்தனரன்றே [சஉ]

வாங்கியவளவிற் படுதுய ரனைத்து மாள மென்
 மேலறப் பெருகித்
தேங்கிய வுவகைக்கடலிடை யாழ்ந்து செழியதன்
 மடித்தலத்திருத்திப்
பூங்கரும் பனுக்கு மொழிச்சிறு விடைவிற் புருவமெல்
 லியலுறுமணங்கு
கோங்கரும் பனைய விளமுலை பிடித்தக் குழவிதன்
 வாயிடைவைத்தாள் [சங

வைத்தவார் தனத்துக் கலசம நருந்தா வரவாப்
 பருமிதமடைய
வித்தகைக் குழவி யிருநிலவரைப்பி லிருப்பது
 முளதுகொல் லென்னப்
புத்தகமனைய புறவடித்துவர்வாய்ப் பூவையுண்
 மழுங்கியிங் கிருப்ப
மத்தகக் களிற்ற மன்னர்கோ னுணர்ந்த வண்ணமு
 மிழைத்தது முரைப்பாம் [சச]

அடன்மிகுந்திகலு மவுணரை யடர்த்த வைம்படை
தாங்கிய பெம்மான்
மடலுறுங் கமல மலரடியகலா மனத்திறை
யவனிடம் பகர்வான்
றடமுலைவரையின் வடமணிந்திலகு தையலா
ளிகுளையர் விரைந்தே
திடமிகுந்தொளிரும் புயவலி யரசர் திரண்டுசூ
ழவையிடை யடைந்தார் [சரு]

கொண்டலுந் தருவு நாணநன் னிதி கைக் கொண்டுகந்
திரவலர்க் களிக்கும்
வண்டின நெருங்கி யின்னிசை முரல மதுவிழி
நிம்பநற் றாரான்
புண்ட ரீகங்கொள் ளடியிணை போற்றிப் பொற்புறுஞ்
சுணங்கவிர் நகில
மிண்டைகொண் டிலகுங் கருங்குழல்மடவா
ரெதிர்வியந் தினிது நின்றனரால் [சசு]

வந்துதன் கமலமலரடி வணங்கி வணக்கமோ
டெதிருறு மடவார்
இந்துநன் முகங்கண் டிங்கெழுந் தடைந்த தென்னகொல்
விளம்புதிரென்ன
விந்தையி னிலகு மணிமுடி வழுதி வேந்தர்கோன்
வினவுதன்முன்னர்
அந்த மன்னனுக் கவ்விடைக் கருங்கூந்த
லணங்கினர் விளம்பலுற்றனரால் [சஎ]

வெஞ்சமத் திகலு மடையல ராவி வேலினிற்
பறித்திடு மிறையோய்
மஞ்செனக்கரிய மலர்க்குழன் மடந்தை
மணிவயிற்றிடையி னின்றின்றே
செஞ்சுடர் விரித்து வான்முகட்டொளிருந்
தினகரர்கோடியென் றுரைப்ப
அஞ்சுடர்விரிக்கு மாண்மகவாகி யகலிடத்
தினிதுதித்த தம்மா [சஅ]

கண்ணிணை சிறிதும் விழித்திலை வாயங்
காந்தினி தரற்றவுமில்லை
யண்ண லஞ்சுடரி னணிதிருமேனி யசைத்திலை
யஞ்சனின் மகவு
முண்ணிகழ்ந் தொளிரு மாவியினோடு
முற்றுறைகின்றது வென்னு
வெண்ணிகர் குமிழ்மூக் கன்னிய ருரைத்தாங்
கேகின ரிறைவனைத் தொழுதே [சக]

கொடியென நுடங்கு மிடைக்கனித் துவர்வாய்க்
கோதைய ராண்மகவெனுமுன்
படியொடு கனகமணியிழை வலயம்பரித்தெழு
வெனத் திரள்புயங்கள்
வடிவுமிக்குயர்ந்த மேருவென்றுரைசெப்வரையென
மிக்கினிதுயரக்
கடியயிற் படைகொ ளிறையவ னேகைக்
கடலிடையாழ்ந் தனனுகி [ருய]

காதல னில்லாத் தன்மையிற் றுயரக் கடலிடை
யாழ்ந்துளம் வருந்தி
யீதள வாகக் காலம தகற்றி யிருந்துமிக்
குழலுறு மெம்பாற்
போதவு மொளிரு மாண்மக வீந்த புனிதமைம்
முகினிறத் தாதி
நாதனிங் கதற்குண்டாயசெய்கைகளு
நல்கிலா திருப்பவ னல்லன் [ருக]

அன்றிநந் தமக்கோரருங் கொடுந்துயர்க
ளடைந்திடி லன்னவ னல்லால்
சென்றினி தொழுக்குந் தன்மைய ருளரோ
செறிதிரைப் பரவை சூழுலகில்
என்றுளிவிரிக்கு மயிற்படை தரித்த
வெழின்முடி மன்னவர் வணங்கக்
குன்றெனப் பணைத்த புயவலி படைத்த
கோமகன் றிருவுளத் தெண்ணு [ருஉ]

அருமறைக்குரிய வேள்வி யந்தணர்களாசிகள்
பற்பல நவிலத்
திருமுடி தரிக்கு மன்னவர் தாழ்ந்து திரண்டு
நான்மருங்கினு மேக
மருமலர்க் கூந்தற்குவளை யொண்கண்ணார்
வானிறக் கவரிகா லசைப்ப
வுருமெனத்தவள வலம்புரிக்குலமு முயர்
முரசினங்களுங் கறங்க [ருந]

மிடைந்தொளிர் தரளமணி யெடுத்தெறியும்
வெண்டிரைத் தாம்பரவன்னி
யடைந்தரும் புனலி லாடியுள் ளுகந்து
தென்கலைப் புண்டரமணிந்து
குடைந்து வண்டிமிரு மருமலர்த் தொடையல்
கொண்டகன் றெளிருமார் பிறையோ
னடைந்தனன் விரைவில்லுதையனைப் பொருந்த
னையனற்றிருமுகங் காண்பான் [ருச]

செப்பெனப் பரந்து மார்பிடம் கவர்ந்து
திரண்முலை மடமினு ருகந்நங்
கொப்பருங் குழவிதனை யெடுத் தளிக்க
வொன்னல ருடறடி யிறையோ
னப்பரன் றனது திருவுருவனைத்து மன்பொடு
கண்டு கண்டுருகித்
துப்புறுஞ் சுடர்கொளுதையனைக் கண்ட
தூயசெங்கமல மொத்தனனல் [ருரு]

உருமினு மிரட்டி மும்முரசினமு முயரிய
சங்கமும் பிளிற
அருமறைக்கிழவர வாவின தளவா யகத்திடைப்
பெருங்களிதுளும்பப்
பொருவிலுன் கனகப் பொருப்பெனக் குவித்து
வித்தினற்றனமும் மிமிரு
மிருநிதிக்குவையு மெண்ணிலா நிரையுமிசைபெறப்
புனலொடு மளித்து [ருகா]

மெய்வகையுணரு முழையரைக் கூவி
விளங்கு நம்மரபினுக்குரிய
தெய்வமா மாதி நாயகனமருந் திருத்தளியேமுத
லாய
பொய் வகையொழி நன்னாட்டினிற் சிறந்து
பொலியுமால் சன்னதி தோறும்
மெய்வகை திருத்தி யாடைபூ ணிதிய மிகுநில
முதற்சிறப் பளிமின் [ருள]

ஆனினமுதல பற்பல வுயிர்க ளருந்திமெய்
விடாயது தணிப்பா
னீனிறக் கடலினிரட்டிய தடமும் நிகமநற்
சாலையுஞ் சிகரம்
போனிகழ் தருமாலயங்களு மெவரும் புகழ்தரு
மன்னசத்திரமும்
மானயிவ வகையி னுயபோ லினும்ப லாயிர
வறத்துறை யிழைமின் [ருஅ]

சிறைபது விடுமின் சிறைக்கள மெடுமின்
றிகழ்முடி மன்னவரளக்கும்
இறைவிடு மீரேழாண்டயனிதிய மீட்டு
மாயத்துறை விடுமின்
குறைவிலா நிதியவரையது திறந்து கோதறப்
பலவரு மெழுநா
ணிறைதருமளவும் வெறுத்திட வகத்துணோர்ந்தவை
யெடுத்யெடுத் தளிமின் [ருகூ]

நண்ணிய தடந்தோட் கொற்றவ ரிழைத்த நவையெலாம்
பொறுத்துறப் பிணித்த
திண்ணியகழல்யாப் பறவிடுத் தவர்தந்
திருநக ரடைதரச் செலுத்திப்
பண்ணியற்றமிழின் வகைநல முணரும்
பான்மைநம் பேரவைப் புலவோர்
உண்ணனி மகிழத் துன்னெனக் கலையு
முரையுடன் பணிகளு மளிமின் [சுய]

வெண்டிரை கொழிக்குங் கருங்கட லுடுத்த
மேதினியதனிடைச் சிறந்த
திண்டிறற் புயத்த மன்னவ நுணர்வான்
றிருமுகங் கடிதினி லனுப்பிக்
கொண்டல்கண் படுக்கு மாடமா நகரங்
கோதற வலங்கரித்திடுவான்
அண்டுறுமாந்த ரறிதரமுரச மறைதரச்
செய்மினென் றுரைத்தான் [௬௧]

இடியெனக் கறங்கு மணிமுரசோதை
யெழினகர் மாந்தர்தஞ் செவியிற்
கடிதினிற் படுமு னளவிலா வோகைக் கடலிடை
யாழ்ந்தன ராகி
வடிவுறுமயில்வே லனையகண் மடவார் மை
ந்தரோ டிணைந்திர வகற்றும்
படிமருந் தொடையும் பாயொளி விரிக்கும்
பற்பல வணிகளுமகற்றி. [௬௨]

மங்கையர் நகிலப் பொருப்பினுக்கணிந்த
வாசநற் கலவையின் றுகளும்
கங்குலிற் கரிய கூந்தனின் றிழிந்த கான்மக
ரந்தமு மடங்க
வங்கமுன் றிரு றுங் குங்குமச் செழுஞ்சே
றதுகொடு வழுக்குறத் தெளிப்பார்
பொங்கிய சுடர்வே லிறைமகன் றன்பாற்
புதல்வன்வந் துதித்திடு மகிழ்வால் [௬௩]

பத்தி யினிவந்து விசும்பக டுரிஞ்சும்பரூஉ
மணிமாட பந்தியினற்
பித்தியின் புறத்து மகத்திலும் புதுவெண்
மெய்யொளிச் சுதைகள் தீற்றிடுவார்
தித்திலமுறுவற் கமலைவா ழகல நிருமலன்
றிரு வவதாரச்
சித்திரவகையே முற்றிலு முவந்து தீட்டு
வர் கவின்பெறமாந்தர். [௬௪]

வெண்ணில வெறிக்குங் கையிலையின்
கிரியின் மிசைப்பலகதிரெழுவனபோல்
திண்ணிய மாடமுகட்டிடையனந்தஞ்
செறிசுடர்த் தூபிக ணிரைப்பார்
நண்ணியகுலிசத் துவசமு முழுவை நாடிய
கொடிகளு நடுவார்
தண்ணியவிதை வித்தரிய பாலிகைகள்
சதிருற வயின்வயி னிறைப்பார் [சுரு]

மங்கல மகலாமறுகிட மெங்கு மணிநடைக்
காவண மிடுவார்
துங்கமென்பாளைக் கமுகொடு சுவைகொள்
கன்னலுமினிமையிற் கனிந்த
செங்கனித்தாறு படுவிரிதலையுஞ் சேட்பட
வெழுத் தொறுமமைப்பார்
சங்கையின் மகரதோரண நிரைப்பார்
தமனியப் பாவைகள் தொடுப்பார் [சுசு]

தேனினமுரன்றிங்கள விசை பயில செழுமணித்
தாம நாற்றிடுவார்
வானில வெறிக்குமார வாரமுமொண் மரகதக்
கோவையுந் தொடுப்பார்
ஆனிழு துறப்பெய் தருஞ் சுடர்தருமொ ணஞ்சர
விளக்கினமிடுவார்
கானிடுமலருந்தண்பனி நீருங் கலவையுங்
குழம்பொடு மிறைப்பார் [சுஎ]

வேறு

கரியகுன்முகி லனையமும் மதம்பொழி கரிகட்
குரியவோடையு மேற்றவிசையு முறவமைப்பார்
விரியும் வான்முக டிடிதரத் தாவியு மீளும்
பரிகள் பல்லணங் கால்கழுத்தணிகளும் படுப்பார் [சுஅ]

திவிய மாமணி யணிபெறக் குயிற்றிய திகழும்
சவிகொண் மாவிரதங்க ளெண்ணில நிரைதயங்க
விவுளிசேர்த்திருமறுகிடை நிரைப்பரா லிரும்பொன்
அவிரு மேருபல் லொருவழிச் சேர்ந்தன வனைய [சுகூ]

தவள வானில வுமிழ் மணிமாட மேற்றுவத்
துவளிலாநறு மகிற்புகை வயின்வயின் றெருகுப்பார்
பவளவாய்க்கொடி நுண்ணிடைப் பனிமொழிக் கரிய
குவளையொண்கணார் குரவையாட் டயருவர்கூடி [எ0]

முருகுசேரு மாலதிக்கலிகைக் கிணைமூரல்
குருகுசேருமால் வரையெனப் பொலிதரக் குவிப்பார்
கருணையோடுமெற் றரியநற் கனிவருக்கமுநேர்
அருகுதோறுஞ் சிற்குன்றென வமைப்பர்களன்றே [எக]

இனியவாய முக்கனிகளு மிடையிடை நிறைப்பார்
புனிதவாதர நிறைந்த வுள்ளத்தினர் பொருந்தி
தனிவிருந்தினர்க் கெதிர்கொடு சென்று நற்றகையாய்
மனி யுமக்கெமக் கென்றுத மகங்கொடு வருவார் [எஉ]

சேயதேறலி னறுநெய்பால் தயிருடன் சேர்ந்து
தூயமாமறுகெங்கணுந் தொனியுறத் துதைந்து
பாயவென்னறு மாகனகக் கலம்பரப்பி
யேயநாரண னடியருக் கின்னமு திடுவார் [எங]

தழனிறத்தநற் றிகிரியு மிவுளியுந்தான
மழவிருங்கரிகளு முகைத் தவரவர் வருவார்
பழமை யாயபொற் கலன்களை வெறுத்தலைம் பாலார்
அழகினீடிய கலன்களைப் புனைகுவரன்றே [எச]

ஊறு தேன்பொழி மாலிருஞ் சோலைவெற் புயிர்த்த
நாறுசந்தன வரியமென றேய்வையின் றீய
சேறுநூலிடை தேம்புறப் பணைத்தருஞ் சிகர
வீறுவாய்ந்திணைத் தடர்தரு முலைமுகட் டணிவார் [எரு]

ஓங்குமாமதி வடந்தனைப் புனைகுவ ரொழுகுந்
தேங்கொள்வண்டின மலைதர வோச்சிநீர் செழுஞ்சூ
ழுங்குமால்குழல் திருத்தியத் தலைப்பணி சாத்தி
பூங்கொண் மாலதி செவந்திநற் பிச்சியும் பொறுப்பர் [எசா]

ஏரவாணுதற் சுந்தரத் திலகம திடுவார்
போரவானில வெறியுநித் திலச்சுட்டி புனைவார்
சூரவேனிக ரம்பகத் தஞ்சனந் தோய்ப்பார்
ஆரவாரவம் புதிக்கிரு வரம்பிட லனைய [எஎ]

பொய்யமைந்த நுண்ணிடைக் கணிமேகலை புனைவார்
துய்யநற்பசுங் கழையெனத் திரளுறுந் தோளிற்
செய்யமாமணி குயிற்றிய வொண்கலன் றிருத்திப்
பெய்யுமம்பொனிற் றொடிபல முன்கையிற் பெய்வார் [எஅ]

கடிதினிற்றழ னிறத்தநற் றளிர்நிறங் கவற்று
மடிமிசைச் செழுஞ்செய்ய பஞ்சின் குழம்பணிவார்
வெடிகொளம்புய மிசையனஞ்சிலம்புவ வனைய
படிவுறுஞ் சிலம்பொலிதரப் பதமிசை யணிவார் [எகூ]

மாடகத்த நன்மகரயா ழெடுத்திசை வகுப்பார்
பாடகத்தொடும் பரிபுரத் தொலியெழப் பதம்பேர்த்
தாடகக்குழை யலைதரத் தனித்தனி யரிய
நாடகத்தொழில் நலந்தெரி மடந்தையர் நடிப்பார் [அ0]

அந்த மாடவின் னெழினகர் மாந்தரு மடர்ந்த
சந்த வார்முலை மாதரு மகங்களி ததும்ப
இந்த வாறியற்றியபின்ன ரக்கொடி யிடையார்
விந்தையோடு பொற்சுண்ண நீராடுற விழைவார் [அக]

வேறு சாடிகொப்பரி சாருங் குழிசியிப்
பீடியற்கலம் பெய்திடி லற்பமே
நாடுமென்ன நளியும் பொழிபுனல்
ஓடிடாம லொருங்குறத் தேங்கவே [அஉ]

பண்ணுலாவிய பாவினு மின்மொழி
விண்ணுலாவிய மின்னிடை மாதரார்
எண்ணிலாதவரோர் மறுகெங்கணும்
வண்ணநீடு வரம்புகள் கட்டினார் [அங]

தமனியத்திற் சமைத்த தளங்களாற்
கமவசந்தக் கலவைக் குழம்பினோ
டிம நறும்புன னெய்நல்லெண்ணெ சுணம்
அமரு மத்தர் புனுகு மென்னனமே [அச]

வண்ணமுற்ற பொற்சுண்ண வனநறுந்
தண்ணநீரிற் றகையன மட்டிலா
விண்ணின்மா நகரெங்கும் விடுத்தனர்
பண்ணினின் சொற்பனிக் குழன்மாதரே [அரு]

சத்தவார்கடறா னொருங் குற்றபோற்
சுத்தவீதிகடோறு நன்மஞ்சனம்
பத்தியோடு பொழிந்தபின் பான்மொழிக்
கொத்தலர்க் குழற்கோதையர் கூடியே [௮௬]

இழையினுண்ணிடை நீவியிறுக்கிமென்
றழைசுணங்கின் றனங்கள் குலுங்குறப்
பிழையில் வம்பு பிணித்து மழைக்கருங்
குழறிருத்திநற் கொண்டை யணிந்தரோ [௮௭]

தந்ததாரைக் குழலுங் தமனிய
விந்தை தேர்கட் சிவிறியு மின்னபோ
லந்தமில் புனலாடுங் கருவியோ
டிந்துவின்னுத லேழையர் தோன்றினர் [௮௮]

இடக்கை பேரிகை யேய்ந்திடு திண்டிம
முடுக்கை பம்பையுறுமி முரசொடுந்
தடக்கு தோறவில் தமரவலம்புரி
திடத்திருச்சினந் தேசிகக்காளமே [௮௯]

கூறிவாச்சியங் கொண்டு குணில்களா
லேறுசூன் முகிறன்னி லிரட்டியே
நாறிசைக்கணு நண்ணிமுழக்கிடச்
சாறினேழையர்தாம் புனலாடுவார் [௯௰]

கள்ளலம்புங் கருங்குழன் மாதரார்
உள்ளலம்பிய வோகை கிளர்ந்தெழ
வெள்ளிடற்கிடனின்றி மறுகடர்ந்
தள்ளியள்ளியவர் புனலாடுவார் [௯௧]

கூந்தல்சோரக் கொடியிடை சோர்தரக்
காந்தளென்னக் கரஞ்சிவப் பேறவே
சாந்தணிந்த தனங்கள் குலுங்குற
வாந்தருத்தி கொண்டாடுவர் நீரரோ [௯௨]

கலைநெகிழ்ந்தது காண்கிலர் கச்சுமென்
முலைநெகிழ்ந்தது மோர்கிலர் மொய்யொளி
யலையு மாரமகன்ற துணர்கிலார்
தலைமை சேர்புன லாடுந் தருக்கினால் [௯௩]

அத்தர் பன்னீர் புனுகினோ டாரநெய்
யொத்துவாரி யொருவ ரொருவர்மேல்
லத்த நற்குழ லாலினி தாடுவார்
புத்தகத்தின் புறவடி மாதரே [௬௪]

அருத்தி யோடொ ரரிவைநன் னெய்யைமா
ருருத்தி வாயி லொழுக்க வுமிழ்ந்திட
திருத்தன் வாயெனுஞ் செவ்வித ழாம்பல்பெய்
மருத்தண் டேற றனைநிகர் மானுமால் [௬௫]

கூந்தன்மீதிற் குழல்கொடு பீச்சுநீ
ரேந்தி ளந்தனந் தன்னி லிழிதரல்
சேர்ந்த மேருத் திகிரியின் மீமிசை
போந்துமேகம் பொழிதலை மானுமால் [௬௬]

மாதர்பல்லோர் மடந்தையின் வான்முக
மீதருங்குழல் கொண்டு விடும்புன
லோது வானெழு மொண்மதி வீசிய
சீத வெண்கதி ரென்னத் திகழுமால் [௬௭]

விடவெண் பால்கொடோர் மின்னிடை மாதின்மேல
லுடல்வெழுப்பினை யுற்றுடன் றீர்தலாற்
புடவி யிற்பசும் பொன்னினற் பாவையைப்
படம்படுத்து மறிப்பதை யொக்குமால் [௬௮]

நெஞ்சினிற் பொழி நீரிரு கொங்கைமே
லெஞ்சலானதற் றேயிழிந் தோடிறல்
விஞ்சடர்ந்தெழு விண்டுவின் மேல்வழி
யுஞ்சிறுதண் ணருவியை யொக்குமால் [௬௯]

படைக்கண்மங்கை பனிமுகம் வீசுநீர்
தடுப்பவங்கைத் தலம்பொதி தன்மரை
யிடக்குள்வீழ வெண்மைவருத் தேன்மதி
யடைக்கலம்மென் றடைதலை மானுமால் [௭௰]

சோதிமாமணி மாடங்க டுன்றிய
வீதிதோறும் விழைவி னடார்ந்துமுப்
போதுமீராறு வைகல் புனலிடை
மாதராடி மனக்களி யுற்றபின் [௭௧]

வண்ணமாமறு கெங்கும் வதிந்தபொற்
சுண்ணநீர் தலைப்பெய்து துவன்றியே
தண்ணறும் பொருனைநதி சார்ந்திரும்
பண்ணைவாயிட மெங்கும் பரந்துபோய் [௩௨]

கலிகொள் வெண்டிரை நண்ணி யதினுள
புலவுநீக்கிப் புதுமண மீந்தவன்
சுலவு மிப்பி சுரிமுக முண்ணச்செய்
உலவுமார முயிர்த்திடச் செய்யுமால் [௩௩]

திருவவதாரப்படல முற்றும்.

---

# நாமதேயப் படலம்

## வழிபடுதெய்வ வணக்கம்

கற்றவ னீராடவெழ முதலியாண்டான்
கையும்பின் வடுகநம்பி கரமென்போதும்
பற்றியெழற் காண்டானுள் வெதும்ப வத்தைப்
பரிகரிக்க வவர்க்கிருதாம் பரச்செம் பீந்தாங்
கற்றநதிப்புனல் கொணர்வித் தலைநா னம்பி
யாந்தரிகப் பத்திவெளி யறியச் செய்த
கற்றவனெம் மெதிராச னடியை வாழ்த்தி
நாமதேயப்படல நல்குவாமால். (௧)

(வேறு) மீனவன்குல வேந்தன் வியந்துபலை
ஞானமந்தணர் தாமுகக்கக்கொடுத்
தானபின் பேரவை யெழுந்தாங்கொளிர்
வானரியணை மன்னினன் மாதரோ. (௨)

ஆரியர்க ளறிஞர் கணிதநூ
லோருவோர் மெய்யுறுதிகொ ளாரணஞ்
சோர்விலா துணர் தூய்மறை யாளர் மற்
றோருதொளி ரேந்தலுழையரே. (௩)

மற்ற நுட்ப மதியின ரானிறை
யுற்ற சங்கத் துறவிலர் மௌலிதோய்
பொற்றிருக்கழற் பூப னுவகையாற்
சொற்றிடுஞ்சில தூய்மொழி யன்றரோ. (௪)

மன்றனோரெம் மனமரை யின்முகை
யின்றலர்ந் தொளி யெய்திட வெல்லிளங்
கன்றை நேர்வருகான் முளைக்கியாதுநா
மின்று நாம மிடுத லியம்புவீர். (௫)

கொக்குமீது று கோகிலவின் சொலார்
செக்கர்மாடத் திருக்குருகாபுரி
புக்க நும்மைப் புரக்கும் புயலுக்கு
மிக்க வாதிப்பிரான் றளிமேவியே. (௬)

பரவை சூழுல கோரடி பற்றிடக்
கரவிலுளங் தின்பருள் கான்மலர்
சிரமணிந்தவன் சீரருட் பெற்றுடன்
மரபினுமம் வழங்குதன் மாண்பரோ. (௭)

பாதுகாத்துயிர்ப் பாலருள் கூர்ந்துநன்
னீதியாலுலகோச்சு நிருபநின்
றீதிலாத திருவுரை யுட்கொடீ
தோதினே மற்றுளப்படி செய்குதி. (௮)

(வேறு)

இவ்வண மன்றுளார்சொல் லியல்பினை யிறைவ னுள்ளிற்
செவ்வியி னமைத்து நந்தஞ்செய்தவத் துதித்த சேய்க்குக்
கொவ்வையின் கனிவா யின்சொற்கோங்கரும் பனைய கொங்கை
நவ்விநேர் விழியாய் யாது சாற்றலா நாமமென்றான். (௯)

நம்மகவெனவுமன்ன னவின்றிடப் பெற்றோமென்று
செம்மலங் கடலுளாழ்ந்து திரு முகமலர்ந்து நீருண்
மைம்முகிற் குழலி வேந்தன் மலரடி பரவி யின்பம்
விம்மியாழ் குழலே யின்சொல் விளம்புவள் சிலது மன்னே (௰)

புத்தெனுங் கொடிய சேறிற் புகுந்துழன் றழலுகின்ற
தத்தினை யறுத்து நம்பாற் றனய சம்பத் தையீந்த
வித்தகன் பொலிந்து நின்ற மெய்ப்பர னமரரஞ்ச
நத்தினை முழக்கு மாதி நாதர் சன்னதி முன் சென்றே [௰௧]

வஞ்ச மற்றுளத்தை யைவர் வழி செலுத்தாது வாழ்த்து
நெஞ்சினர் நாற்பொருட் குணினைத்த தங்குவந் தளிக்கும்
கஞ்சனன் மலர்த் தாட்கீழ்க் கான்முளை வணங்கச் செய்து
விஞ்சுநம் மரபினுமம் விளம்பலே விதி யென்றாளே [௰௨]

கொங்கலர்க் கருத்து மைம்பாற் குவளை வாண் மதரரிக்கண்
நங்கையா ருரைத்த வாய்மை நங்கருத்தியைந்த தென்றப்
புங்கவ னமைச்சர்க் கூவிப் பொரு கடற் றானைசூழ
விங்கடைந் திடுவீர் ஸ்ரீமா திறைவனைத் தொழச் செலற்கே [௰௩]

ஆண்டகை யியம்பாமுன்ன மரும்பொருண் முகத்தி னோக்காற்
காண்டக விரைவிற் செய்யுங் கருணை கூருழையர் சேனை
யீண்டவந் தறிக்கை செய்தவ் வின்னடி பரவ வண்டு
பாண்டருந் துளவினானைப் பணிந்திடற் கெழுச்சி யானான் [௰௪]

தண்ணுமை படகம் பீலி தக்கை திண்டிமந் தடாரி
மண்ணமை முழவு கேட்போர் வள்ளின முவந்து கீதக்
கண்ணுகர்ந் திடுபன் னாகசுரமோ டெக்காளஞ் சின்ன
மெண்ணில் பல்லி யங்களெங்கு மெறி திரைக் கடலினார்ப்ப ௰௫

கருவிளை குமிழி னொண்பூக் கயிரவ மலர்களுட் கொண்
மருமலர்க் கமலமோர் பொன் கொடி மிசை மலர்ந்த தன்ன
திருமுகத் தரிவை மார்வெண் கவரியின் சிறு கால் வீசக்
குருமணி நிலவு காலுங் குழூஉக் கொள் வெண்குடை நிழற்ற [௰௬]

மட்டவிழ் குமுத வேந்துள் வதியிரு முயனீத் தூர்வான்
விட்டதி வெளிவந்தாக மீதிரு கயல் கடாங்கி
யிட்டமோடுல வலன்ன வெழின்முக மடவாரால
வட்டமீயோட்டிகொண் டுண்மகிழ்ந்தருகசைப்பர் மன்னோ [௰௭]

மாசுறாங் கலியின் றீயவலிகெடு மெனவே வெள்ளை
வீசுதலனைய வான்மீவெண்டுகிற் கொடிகளாட
வேசிவிண்ண ரம்பை மாதர்க்கின்புறு பரதங்காட்டுந்
தாசியரிசையினோர்ப் பச்சதியிடையடிகள் பேர்ப்ப. [௰௮]

தேங்கமழ் கமலப் புத்தேள் சேணிறை கலச யோனி
யாங்கவிர் வேத நாவரரசர் முத்தமிழ் தேர் வாணர்
பாங்குட னருகிலாரப் பரவு பொற் சிவிகை பம்ப
வீங்குதிண் *குவவுத் தோளார் கட்டிய மியம்ப மன்னே [௰௯]

கங்குல வயிற்கை யொன்னார் கணங்களின் வலி மலைக்குத்
தங்கிய குலிசத்திண்டோட் டானைமுன் மிடைந்து செல்லப்
பொங்கு செந்துக ளிவர்ந்து புயலெனப் படரத் தீய்க்கும்
வெங்கதிரவிந்து வானஞ் செக்கரில் விளங்கித் தோன்ற [௨௰]

தூயதீப் புடத்திற் பல்காற் சுட்டசெம் பொன்னிலும்பர்
மேயயாணரினுற் செய்ய வில்லுமிழ் மணியிடைக் கண்
ணேயவிட் டடைத்த தொட்டிலேற்றி யக்குழவி சூழ்ந்தாங்
காய மிண்டேகலென்மு னம்புலிக் கணநேராமால் [௨௧]

கோதில்பூந் தொட்டி லூடு குயிற்று செம் மணிவிற் றோற்றம்
மாதவ னரசன் சேய வந்தவா றறிந்து போற்றப்
பாதலத் தனந்தன் றனமெய்ப்படிவத்தை மறைந்தீண் டேகச்
சோதி கொள் சுடிகைநாறு மாமணிச் சுடரி னேர்த்த [௨௨]

இன்னணங் குழவி தன்னே டிறைவனு மெழுந்து செங்காற்
பொன்னனந் துயிலுஞ் சேக்கைப் பூம்பணைக் குருகை மேவிக்
கொன்னவில் படைக்கணார்தங் குழற்கிடு புகையின் வாச
மன்னிய மறுகி னூடண மகிழ்தர வலம் வந்தானல் [௨௩]

கூன்சுரி முகங்க ளீனுங் கோதினித்திலங்க ளுற்றித்
தேன்பயி லலரி னுற்றுஞ் செழிய காவண முகப்பில்
வான்றட வரம்பை நாட்டும் வாயினின் றயினிநீரைக்
கான்படு மழலைத் தீஞ்சொற் கன்னியர் சுழற்றினரால். [௨௪]

கருமணி குயிற்று செம்பொற் றகட்டுறழ் கடிகொண் மாத
ரிருவரோ ரிருவராய்த் தம்மின் முனந்திக் காப்பிட்டுப்
பருகவின் னமுதிற் சேயின் படிவத்தி னெழினேக் காற்பின்
றிருமினர் சிலர் கர்ப்பூர வாரத்தி தெரியச் செய்தார் [௨௫]

ஆரண மொருநான் கோது மயனன வறிஞரெல்லாம்
நாரணனும நாவி னவின்றிரு கரத்திற் செம்பொற்
பூரண கும்பங் கொண்டிப் பூதலத் துயிருயசெய்
காரணன மகவிற் றோன்றப் பெற்ற காவலனைக் கண்டார் [௨௬]

மட்டவிழ் நறவமாந்தி வண்டிமிர்ந் தடரு மைம்பாற்
கட்டழ கரம்பை மாதர் கடுப்பவரடிகள் போர்ப்பக்
கொட்ட மிட்டமர நீட்டங் குலையவெண் றமுதைத் தால
வட்டம் வைத்திடு புட்டோன்றல் வாகனன்றளிக்குட் சென் (றுன் [உஎ]

வேறு

அத்திரு புரத்து வாழருச்சுனற் கறத்தினால்
தத்துவத் தரும்பொருள் ரதத்தினிற் றெரித்தவன்
மெத்தவுட் புறத்து றிக்கிடைச்சி வைத்த வெண்ணே பா
னத்தி யுண்ட பூரணத்தி தேச லோக நாதனே [உஅ]

எருதோ ரேழடர்த்து மாதொருத்தி பாலிணங்கினுய்
மருதினூடு போய்றுத்து மாயமாய் வருந்தினுய்
குருதி தோயிபப் பதிக்கிழிந்த தூது கூறினுய்
கருத நின் குணத்தை யார் கணிக்க வல்ல வல்லரே [உகூ]

தாலமீது நாக கேதனன் முனந்தளர்ந்த பாஞ்
சாலி நாணழிந்திடாது தானைமுன் னளித்தனை
சீல வேத வாணனெஞ்சு தேற வாக மோடவன்
பாலனீ நினது தன்மை யார் மதிக்க வல்லதோ [௩0]

இச்சையா லுளங்களிந் தெழுந்த வன்பினேடு நீ
மெச்சவே சுவைத்திடுங் கனிக்குளின்பு விஞ்சின
லச்சுதற் கெனப்புறத் தமைத்த சௌரி யங்கனை
யெச்சிலுண்டு வானளித் தெழுந்த புண்டரீகனே [௩க]

இன்னணம் பொலிந்து நின்ற வெம்பிரா னிணைப்பதஞ்
சென்னியிற் புனைந்து பின் றுதித்துளஞ் சிறப்புறத்
தன்னருங் குலப்பெருஞ் சுடர்ச்சுதன் றனைப்புவி
மன்னனுண் மகிழ்ந்தவன் பொலன்கழல் வணக்கியே [௩உ]

புத்தெனுங் கராலையைப் புடைத்தெமைப் புறந்த வேய்
முத்தனே டயன் பராவு மூர்த்தி யாதி மூலமென்
றத்தனைப் பழிச்சி மன்னவன் றிருவருட் கொடுண்
ணத்தியே மகற் குகந்து நாம மோத லாயினன் [௩௩]

தங்குலப் புரோகிதன் றனைக் கோடேத மின்றியா
றங்கமைந்து வேள்வி நான் மறைக்குடே ரகங்கொணற்
புங்க வேத வாணர்கூய்ப் பொலிந்தபின் விதிப்படி
மங்களத்தி யங்கறங்க மாதவர்க் களிப்பனுல் [௩௪]

செம்பொனே ரிலங்கு பூணிவர்ந்து விண் செறிந்தவிற்
பம்பு மாட கூட மாளிகைச் செநெற் பணைத்தல
மம்பரஞ் சுவைப்பயஞ் செழித்தவா னிதிக்குவை
இம்பரைந் தருக்கு நேர பீட்ட தான மீந்தனன் [௩௫]

பொங்குவெண் முனூலிலங்கு பூசுரர்க்களித்த போழ்
தங்கை விட்ட நீருகுந் துலாயியாறு பாய்ந்தவண்
எங்கணும் பரந்து தாம்ப்ரவன்னி யாயிழிந்ததே
லங்கவன் செய்தான நேரிதாகு மென்ன லாருமே [௩௬]

எண்ணிறுன மாதவர்க் களித்து லோப மொன்றிலா
துண்ணெகிழ்ந்து நீதி நூலிலோது நேம கப்படி
நண்ணியே சடங்கினை நடத்தியன்பின் வந்தெழுந்
தண்ணளிக் கடற்கு வள்ளல் சாத கர்ம மாற்றியே [௩௭]

ஏறெருத்த மீதுறீச னுக்கய னிழைத்ததத்
தூறரித்த மால் பதத்தி லொண்டமிழ்ப் புனைந்து நா
வீறணுகு மெய்ப்பரன் றனக்கவன் குலப்பெயர்
மாறனென்று நாமமன் வரோதயன் வழங்கினன் [௩௮]

அந்தரத்தி னன்பணுகி யம்புயத் தவன் மறை
யெந்தை தாளுறற் கொணும லின்னு மேத்த நின்றவன்
றந்தையாகி மன்னவன் றனக்கு நாம முந்தரில்
விந்தை சேரவன் புகழ் விளம்ப யாவர் வல்லரே [௩௯]

இன்னணா நராதிபன் பொலிந்து நின்ற வெம்பிரான்
றன்னருட் கொடேதமார் சடத்தினைச் சினந்ததிக்
கன்னலின் சொனங்கை கான்முளைக் கநாம மோது நாள்
பொன்னகர்க்கு ளோருகந்து பூவின் மாரி பெய்தனர் [௪௰]

மண்ட லேசுரன் கனிந்து மாறனைத்த ஸ்ரீஇயெணி
லண்ட முண்டு மிழ்ந்த மாயனம் புயப் பதம்பராய்
விண்டடைந்த மாடமார்த மாளிகைக்குண் மேவியே
கெண்டை யொண் கண் மாதினோடு சேண்மையுற் றுறைந்தனன்
[௪௧]

நாமதேயப் படல முற்றும்.

# ஆதிமால் தரிசனப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

பொன்பதி யெனவாழ் கோட்டிப் புங்கவ நம்பி பாலி
ரொன்பது தடவைச் சுப்பா லோதியந் நூலையார்க்கு
மின்புற வளித்து நாம மெம்பெருமானா ரானோன்
றன்பத மலரைச் சூடித் தரிசனப் படலஞ் சொல்வாம் [க]

இன்னண முவகை மீதூ ரேந்தறம் சேமக் கோயின்
மன்னியந் தமரினோடு மறுவிலா தறுசுவைக்க
ணன்னய மூரலுண் டனந்தர முடைய நங்கை
தன்னருஞ் சுதனைத் தொட்டி லிடுதரத் தலைமை சான்றாள் [உ]

கொண்டலிற் சுருளுங் குஞ்சி நிந்திலக் கொண்டை சேர்த்துத்
துண்டவெண் பிறைநுதனமீத் தூராயொளி துலங்கச் சாத்திப்
பண்டமார் சுடிகையோடைப் பற்பல மணியிழைத்த
குண்டலம் பிடிகஞ் சாத்திக் குலவு கண்டிகையும் பூட்டி [ங]

அம்புயத் தொளிரும் வைரத் தழுத்து மங்கதமுஞ் சாத்தி
வம்புறு நிம்ப மாலை மார்பிடை மதாணி சாத்தி
பம்பு மொண் கதிருலாய காஞ்சியும் பரிவிற் பூட்டிச்
சம்பய னறியாத்தாளிற் பரிபுரச் சதங்கை சாத்தி [ச]

பாடகங் கொலுசு பாதப் பவளமென் விரலின் மிஞ்சி
யாடகத் தமைத்துப் பூட்டி யங்குலிக் காழி சேர்த்துக்
கோடு புன்னகமுஞ் சாத்திக் குதலைக் கிண்கிணிக் காயொடு
நீடர வடமும் பூட்டி நிலவமண் டிலதமிட்டு [ரு]

அஞ்சன மகன்று நீண்ட வையரி விழிமேற் றீட்டிக்
கஞ்ச மெல்லடியிற் செய்ய மஞ்சொளி கதுவக் கோட்டி
வஞ்சர் கண்ணீறு தையா வகை வலக்கதுப் பினீல
நஞ்சினுங் கரியமையா னலம்பெறக் குறியொன்றிட்டு [சு]

காசறெண் பிரவாளத்தாற் கவின் பெறக் கடைந்த காலுட்
டேசிகத் திடைசலாகை சேர்ந்த மாமணி குயிற்றிப்
பாசொளி பரந்த சட்டம் பணித்துமா மரகதத்தில்
வீசுவிற் றொடரு நாற்றி விசித்த பொற்றொட் டிலேற்றி [எ]

பற்பல நிலவு காலுஞ் சூரிய படத்திற் செய்ய
விற்புனை யேழடுக்கு மெத்தை மேல் விரித்து வெண்பட்
டற்புத மலர்களாற்செய் தணிகொண்மே லாப்பமைத்துப்
பொற்புறு தொட்டி லேற்றிப் பூவை தாலாட்டு வாளால் [அ]

பண்ணைவாய் வளையு குத்த பன்மணி நிலவு காலுங்
கண்ணகன் றுளிரு கூடற் காவலன் மரபுளோரை
நண்ணுதற் கரிய வைதரணிக் கரை கடத்த வென்றிம்
மண்ணிடை யுதித்த வென்கண் மணியே தாலோ தாலேலோ [கூ]

உலைபடா தொளிருஞ் செம்பொ னுதயனுற் கருகாமாலை
யலைபடா வமுத மாலை யடைதரா வினிய கன்னல்
கலைபடா மதியம் வண்டர் கவர்ந்திடா தினிய செந்தேன்
விலைபடா மணியோர் நந்தா விளக்கே தாலோ தாலேலோ [௰]

கோடரங் குழையிற் பாயக் கூனிறு னுடையத் தேனூர்
மாடவிர் முகடார் மந்த மாருத வரையாள் கோவே
நீடிய திரைவாய் முத்தை நேமியம் பறவை காக்குந்
தோடவிழ் கமல வைகைத் துறைவ தாலோ தாலேலோ [௰க]

அள்ளலங் கருஞ்சே றற்ற வகன்பணை யுழவின் மள்ளர்
உள்ளடி யுறுத்த நீல முகுமதுக் குருகூர் நப்பி
வெள்ளநீர்க் கயல்க ளுக மேயவைந் தருவைச் சாடித்
துள்ளுநீர்ப் பொருநற் சங்கத் துறைவ தாலோ தாலேலோ [௰உ]

இருநிலத்துறு விசிட்டாத் துவைத முற்றிட வுயர்ந்த
திருமிகு மகர கேதுச் செல்வனே வாசுதேவ
தருநிழ லண்ட முற்றுந் தங்கிய தன்ன முன்னீர்
வருபுவி யோர்குடைக்கீழ் வளர்க்க வந்தவ தாலேலோ [௰௩]

வாட்டடங் கண்ணி யிவ்வா றலகெலாம் வயிற்றடக்கி
மீட்டுமிழ்ந் தளித்தழிக்கும் விருப்பு மாத்திரத்தி லோரும்
பாட்டுடைப் பரனை முன்னுட் பயிற்றிடு தவத்தி னூற்று
லாட்டியுள் ளுவகை பொங்க வங்கையி லெடுத்துப் பின்னர் [௰௪]

முன்னுளபடி மலர்க்கண் முகிழ்த்தி யாம் வீட்ட வாறே
நன்னய வணைகிடந்து நகிலமு முண்ணு தங்கந்
தன்னிலே யசைவு மெய்யிற் றளர்ச்சியோ டமுகையின்றி
மன்னுநம் மதலைபோலே வையகத்துளதோ வென்றே [௰௫]

அம்மமுண் ணெனவே யங்கை யனகனை கிடத்தி வார்கொள்
கொம்மைவெம்முலை பிடித்துக் குமுத வாய் பொருத்த வப்பால்
செம்மையங் கடைவாய் முன்போ லோடுறத் திகைப்புற் றந்தோ
மைம்முகி லளகத்தீ தென்னென வருந்தா நின்றாள் [௰௬]

சுவர்க்க பூதலத்திற் றோன்றி தூம்பயல் விளைந்த தன்ன
விவர்தரு திருத்தோனல்லீ ரென்ன காரண முனைன்செய்
பவமதின் குறையோ வன்றிப் பயிற்றிய தவத்துட் கோதோ
வவனிமீ திவ்வாறெச்ச மாரேனும் பெற்ற துண்டோ [௰௭]

சசியலை தரவே செய்வ தனமுறு மடவீர் சற்றும்
பசியினு லழவு மின்றிச் சேனையும் பருகா தாகி
அசதியு மில்லா தங்க மதிவளம் பெருக முன்னீர்
வசுந்தரை பிறந்த மாதர் மக்களைப் பெறலு முண்டோ [௰௮]

மைப்படு குழலீராயு மலரணை மீதியானங்
கெப்படிக் கிடத்தினேனே யிசைந்து நாளெட்டானாலும்
அப்படி யிருக்க லல்லா லங்கமொன் றசைவு மில்லா
திப்படி மீது மாத ரிளமக வயிர்த்த துண்டோ [௰௯]

இண்டை கொண்டிலகு மைம்பா லிழைநுசுப் பரிவையீர் பொற்
றண்டை கிண்கிணி கறங்கத் தவழ்ந்திடு சிறுசே யென்னைக்
கண்டு முன்றெ வன்போடு கைகொடுதழா அ தழுக்கா
றுண் டெரிசின முள்ளோங்க வுற்றெடா திருந்திட்டேனே [உ௰]

பல்லமம் பகமொண் மௌவ்வற் பசிய கோாக வெயிற்றீர்
தொல்லை நாளளவுஞ் சேயாற் றுன்புறப் பின் றவத்தான்
மல்லலங் குழவி தந்த மாமகனேய னிவ்வா
றல்லலுற் றழுங்கச் செய்ய வடிமையிற் பிழையென் னேவால் [உக]

ஒரு குறுங்கணை வாய் வைத்தாங் கொரு குறுங்கணை நெரூ உடித்
திருமுக மலர நோக்கிச் சிறு நகை புரியாச் சேயைக்
குருமணி கொழிக்கு முன்னீர் குலவு மானிலத் துளோர்கண்
மருமல ரளகபார வனிதைமீ ரறிந்த துண்டோ [உஉ]

வண்டு நாணுடைய வீரன் வாளிபாய் செம்புணரச்
செண்டு மாமுலை கொண்டொத்திச் செழிக்க வன்பரைச்சேர் நல்லீர்
யெண்டிசை யிடத்திலுள்ளே ருழலிகட் கென்சேய் நோய் போ
லுண்டு கொல் யான் செய் பாவத்துறுதி கொலறைநி ரென்றாள் [௨௩]

பொற்றொடி கறங்கு முன்கைப் பூவையீ ராரியின்றாளுட்
பற்று மிவ்வுலகர் செய்ய பாலனில்லா தழுங்கிப்
பெற்ற பிணுவகை கொள்வர் பேதையே னளவுமச்சே
யுற்று நீயழுங் கென்றெம்மா னுந்தி யோன் வகுத்திட்டானே [௨௪]

தையலார் முழுகு சீறு தைத்ததோ வன்றி வேலன்
வெய்ய கண்ணேக்கோ வந்தி மேய புட் சீரோ வென்று
வையுற விதற்குமுன் னிவ்வன்கறுப் பாடினேனே
தொய்யில் வெம்முலையீ ருற்ற சூழ்ச்சியை யறிநதிலோமால் [௨௫]

கொங்கையின் பொறை கண்டேங்கு கொடியிடை மடவீர் சற்றுஞ்
சங்கை வேறுளவென் றெண்ணிற் றனுவிடை வாட்ட மில்லை
யங்கை யுள்ளங்கால் வெப்ப மாறிலைச் சரந்தாழ்வில்லை
யிங்குள முச்சி தாழ்வு மெய்தில தென்னே வென்றாள் [௨௬]

மெதகு முனிவன் பின்பேர்ய் விறல் கொடா டகையும் அம்மம்
போத வந்துதவு சீற்றப் பூதனை யாளையும் பார்த்
தேதிவர் பெண்பா லென்றங் கெண்ணிடாதவர் கடுஞ்ச
மோதுகன் மனனே நங்கை மொழியினுக் கிரங்குவானே [௨௭]

இன்னண முடைய நங்கை யுண விலாதிளைப் புற்றோர்க
ணன்னய மூர தீம்பா னண்ணியு முணற் கில்லாயி
னன்னவ ருறுக ணெவ்வா றடைவரோ வஃதினைந்து
மன்னனுக் குரைப்ப வன்னோன் வருந்தி யீதுரை செய்வானல் [௨௮]

வேறு

கொந்தார் குழலெழி றோடணி குழையாய் கலை குறையா
விந்தார் முக மகவார்கலி யிரு மானிலர் முளைபோற்
செந்தாமரை விழிவாயவிழ் செயுமென்றெணி யிதுநாள்
வந்தோமினி முனமீ பெருமானே சரணெனவே [௨௯]

என்போடுள மூலவாய் மெழுகெனவே கரை தரவுள்
ளன்போடவ னிணைமாமல ரடிமீதினி லமரப்
பொன் போலொளி ரிளமாறனைப் புகவித்தடி பரவி
மின்போதரு முரனே யெனவினை செய்தன மூனமே [௯0]

அடியோ மிது தரமோ நினையருளார் கலியெனவிப்
படியோ டமரரு மாமறை பகரும் முறை கெடுமே
கடிவார் மறையுறைவோன்கடுக் களனோடடி யறியா
வடிவாகிய முதலேயறு மனமேவிய துயரே [௯க]

என்றே பல துதி செய்திடி லிம்மா முகிலுருவோன்
அன்றே யருள் புரிவா னிதிலயமே தவனடிவாய்
சென்றே துயர் களைவோ மெழு தெரிவாயென விறைவன்
மன்றேறியோ ரிரதங்கொடு வாரும்மென வுரைத்தான் [௯௨]

மெய் யொன்றிய மதியோருளை விறன் மாவணி திகழும்
வையந்தனை மறிதெண்டிரை மடைநின்றெழு புனனேர்
மொய்யன் புறுபடை பல்லிய முழவார்ப் பெழவுதவ
வய்யன்மன மகிழாவவ ணடைவான்மிசை யேறி [௯௩]

தனையன் றனையி டமென் கொடுதளிர் மெல்லடி மடமான்
மனனந் தணிகர நங்கையு மதிமந்திரி யுடனே
கனமொன் றுயரணி மேடைகள் கவினு ரெயில் சிகரி
யினமொன் றியமறு கோடிறை யெய்தாச் சினகரமே [௯௪]

திதி மைந்தரின் வலியால்வரர் சேணுடரசிழவா
விதியே வலினிவண் வந்தடி மேவும்பொழு துருவா
யெதிர் வந்தவர் வலியொன்றிட வினல் வென்றிட வருளும்
புதுமென் மரை மலர்வுளிறை முன்போய்த் துதி புரிவான் [௯௫]

வேறு

கண்ணனின் னருளா லென்றுய ரறமுன் கான்முளை
யளித்தனை யதுவிம்
மண்ணக மடவார் சிறுவரிற் கருணை வார்விழி
யவிழ் தரா தம்ம
முண்ணிலா தவயவங்களு மசையா தொளிகொள் செம்
பவள வாய் திறவா
தண்ணலிப் புதுமை யெற்கென நினைந்தோ வருளினை
கருணை வாருதியே (௯௬)

பாட்டளிமுரலின் றளவணி முறுவற்பாசிழைக் கமலவீட் டரசி
மோட்டிள நகிலமுழுந்திரு வரைகொள் மொய்ம்பநன் மகவருளென்
வேட்டிடக் களப குங்குமஞ் சுமந்த வேசரி யாக்கனிற் கறமோ (று
வோட்டரும் பிரசத் துளவணி புயவீண் டுணையலாற் களைகண்வேறி
லயே. (௩௭)

செப்புறழ் நகில முருந்திள முறுவற் சேலிணைக்கண்டுடி யிடைகொ
ணப்பினைபொருட்டேழ் விடைபட ராதிநாதனேயருள் மழைமுகிலே
மைப்படு வரைசெங் கதிர்மதி யிருபால் வயங்க நின்றது வனவுருவத்
தப்பனே களைக ணீயலா தெற்கீங் காருளார் கருணைவாரிதியே. ௩௮

கோதறு மறைகளுணன்கின மறியாக் குணமிகும் பரமதாய் விழியின்
சோதியா லெவரு மறிவதற் கரிதாய்த் துளக்கறுமனத்தினுக் கெளி
தாய்)
[முகிலே
நீதிகொ ளறமா யவைசெயும் பொருளாய் நிறைதரும் குணமழை
ஆதியே களைக ணீயலா தெற்கிங் காருளார் கருணைவாரிதியே (௩௯)

அண்டமாயண்டத் தயனரன் குலிசத் தரசனு யவனவனுலகாய்ப்
பிண்டமாய் விரிவாய்ப் புலனொடு நிலனாய்ப் பிறங்கன லொலியொடு
[விசும்பாய்ப்
பண்டமா யணுவுக் கணுவதா யிவரும்பருப்பத மதற்கத னுருவாய்
மண்டலமுழுதும் நிறைதரும்பொருளேமாயனே கருணைவாரிதியே

கண்ணிலா னொருவன் நின்னடி நிழற்கீழ்க் கடுந்தவமுஞற்றியெற்
கிருகண்)
[தனைய
நண்ணிட வருளென் றிறைஞ்சிட வுருக்க னல்கிய தொளிகொடா
வண்ணனின் னருள்கொ டுதவுநம் மகவீண் டணையதாயுறிலெவ
[னருள்வாய்
வண்ணமால் வரைசெங் கரநுதி பரித்த மாயனே கருணைவாரிதியே.

கண்ணகன் ஞாலத்தொரு பொறியிலிமால்கருணையாற் பசுங்கனி
[கைக்கொண்
டுண்ணுநாட் சுவையில் லாகிலாங் கதுவுற் றுளபயனெவணது சிவண
வெண்ணுதற்கரிய மாமையங் குழவியீண்டெனக் களித்தையதினைய
வண்ணமுற்றிடி லென் பயனதற் கருள்வாய் மாயனே கருணை
வாரிதியே. (௪௨)

வட்டவா ருலகத் தொருபசுங் கொடியன் மகவுயிர்த்திட வதிலொரு
வன்) [தனைநெஞ்
துட்டனையிடினு மாங்கவற் குறுகண் டோன்றுமிக் குழல்பொழு
சொட்டுமோ கடிய வதுவியல் பன்றியோதநீர் வண்ணநின் னடியை
யெட்டுணைப்பொழுது நயந்துள முன்னு திருந்தெனே கருணை
[வாரிதியே. (௪௩)

புத்தமு தூறுங் கூபமு மடவார் புனிதமாங் கற்பினின் றகலாச்
சித்தமு மாலே பரமெனக் கருதிச் செபதப கோம நேமமு
மத்தமும் படையு மடல்கெழு புயமிக் காண்மையும் படைத்து நின்
[னடிசேர்
பத்தர்கணிடையூறளித்திடுங் கொடியபாகுபா டொன்றுறு மதனால்

இஞ்சிசூழவரை வெல்வதற் கெணிநா மெதிருறில் வல்லைநங் கழல்
[வாய்த்
தஞ்சமென் றடைவ ரருள்செய வேண்டுஞ் சரியல வாங்கவர் செயலை
வஞ்சமா யழிவுசெய்ய வென்றுன்னி மாவுரு வெடுத்தமு தனைத்துந்
துஞ்சிடப் பருகி யாசதாய் மடவார் தூயகற் பதனையு மழித்தே. ௪௫

போதவோர் புத்தனுயவர் பக்தி போக்கியிவ் வுலகிரதமதாய்
ஆதவன் மதியந் திகிரியா யொருநான் காரணம் பரியதாய்ச் சூதன்
வேதனு யரனு மெதிரியாய் மேரு வில்லதாய் நாணும் வாசுகியாய்
தீதறுவாளி நீயதாய் வென்ற தேவவென் பிழையதிற் கொடிதோ.
(௪௬)

வேறு

தனியாழிசூழ வனியாளுமெந்தை சரராம னைபொழுதோர்
முனிவாவிலக்கு வனைநீமுகத்து முனிலென் முனங்குருகைபோ
யினிதாயடர்ந்த புளியாவைநின்க ணெழுவாம்பி னென்ற வுரையே
யுனிமாயனம்பொன் னடிவாய் கிடத்து மொளிசேய் செய்வாய்மை
[யறைவாம். (௪௭)

ஆதிமால் தரிசனப்படலம் முற்றும்.

# திருப்புளிப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

பருமா னிலத்தி லடர்நீச முற்ற பரவாதி யர்க்கியமனுய்த்
திருமாதிருக்கு மணிமார்பருக்க திக நேசருக்கினியவாங்
குருவாயுதித்த வெதிராசன் மெச்சு குணசீல னித்தனடியா
மிருதாமரைச்செம் மலரே மனத்து ளௌியே மிருத்தி நினைவாம். ௧

மதியோடருக்க ரிருபாடு முற்று மருமாமரைச் செம்மலரே
பொதிநீல்வரைக்கு நிகராகி நின்றபொருவான தற்ற பெருமா
னெதிரேதிருக்கு முதவாய்முகிழ்த்த வெழில்கால் கிடத்தி யிறையும்
நிதியாலிழைத்த கடமாமுலைப் பெணிநியோடு மெச்சு பொழுதில். ௨

இமையோர்வணங்கமுனிவோரிறைஞ்சவிறையோரிதென்கொல்விப
தமதாயதென்று வகையோடிரங்க வடியார்கள் சங்க மறைசொல்[ரீ
விமலாதிமன்ற னருளானதின்று வெளியானதென்று மகிழக்
கமமாயதுன்ப நிறைவாரி நின்று கரைகாண வன்பர்கணமே. [௩]

பிடியே மிகுப்ப வதினே மவர்க்கு மிளிர்மா னிதிக் குவையுமே
னெடுநாடிருக் கிலயர் வோடிருக்கு நிலமானிடர்க் கிருகணு
மிடைசேர் தரக்கொ ளவரோகை கற்கு மினிதே யிரட்டி யயில்வே
லுடையானெடுற்ற விள வாணைக்கு மொழியா மகிழ்ச்சி யெழவே.

தரைமீது சற்று மசையாது வைத்த தலமேகிடக்கு முளைதான்
புரைதீரு மத்த வளையாதி மைத்த புகழ்சாயல் கண்டு மகிழ்வான்
மரைநே ரரிக்க ணுறவே விழித்து மணிவாய் திறந்து பொதுவர்
நிரையேகளிக்க வவர்பாலுதித்து நெடுநா டவழ்ந்த தெனவே. [௫]

இருதோள் குலுங்க விருகா தணிந்தவெழிலே மிகுந்த மணிசேர்
தருநீடு குண்டலமராக வொண்வி றரலோடிலங்க வவிருந்
திருமார் பணிந்த வணியே சரிந்து செகமீ திழிந்து புரளச்
சுருணுறுகுஞ்சிமிசையார்கலன்கடொடையோடசைந்தொளிரவே. ௬

பிறையோ டிகற்றரு மனோகரத்தின் பிழைதீர் நுதற்க ணணியு
நிறைவா லொளித் தரளமே யிழைத்த நெடிதாய சுட்டியலைய
விறைபா மடிச்செ நறையோடு புத்து றிருதாமரைச்செ மலர்மே
லுறையோதிமத்தண்சிறையோதிபட்புள்ளொலியேதரக்கலெனவே.

எணிலாத தன்மை யுறுமார வண்ட மிசையாவடங்கு மிடமா
மணிமேவு பண்டி யரைசேர் சதங்கை யொடுகீழ் சரிந்து புரளப்
புணராய செந்துவரை நேரிலங்கு புகழ்தாளி னங்குலிகளொ
ணிணர்கோடை யங்கையுடன் மாமுழந்து மிடவே சிவந்த நிறமே. அ

திருமாமடந்தை புவிமாது செவ்வி திகழீளை தங்களுடனே
யொருநீல விண்டு நிகராக நின்ற வொளிராதி தன்னை வலமா
யருகே தவழ்ந்து வருபோதி லய்யனனையோடு தந்த மரெலாம்
பெருகோகை மண்டியெழ நீடுகண்டு பினிலே தொடர்ந்து வரவே. கூ

எழிலே மிகுந்த மதவேளு மண்டி யெதிர்கா ணுறிற்றன் வடிவவ்
வுழியார வெள்ளி யணைவானோர் பெண்மையுறவே விருப்புளடையக்
கழிதே சிலங்க வருளாகி நின்று களிநீடிடத்தின் வடபால்
வழியாகி நின்ற மதிமேவு திங்கிரிணி நீழலுற் றனனரோ. [௰]

மாக னகக்கலை சூழரையிற்புனை மாறனணைத்தலமா
நாக மதைக்கலி யேகுது முற்பட ஞாலமடுத் தெகின
மாகி யுதித்திடு போதி யெனச்சொல வார வழுத்திவிரைத்
தேகி யுரைப்படி யாய திருப்புளி யேர்தகை சிற்பகர்வாம். [௰க]

கஞ்ச மலர்த்தவி சந்தரமுற்றெழு கண்ணொரு வெட்டனொடு
மஞ்சி னிறத்தடை கண்டர் தமக்கு மகிழ்ந்தினி தெட்டரிதா
யெஞ்சலினித்திய வும்பரிலுற்றிட மெங்கும் விரிந்திடலா
லஞ்சயினற்படை யங்கைதரிக்கு மரிந்தமனெக்குமரோ. [௰உ]

வானகமண்டல மோர்கையின் மன்னியவாணிதனத் திசையா
மேனனிகொண்டிடு மோதிமனண்ணிய வேலையுயிர்ப்படையா
கானன் முகங்களுநாடி யிரும்மரி தாமரை பெற்றிடலாற்
றுனவருங் கமலாலய மன்னுபிதாமக னெக்குமரோ. [௧௩]

வானதி தன்னுடன் மீதவிரும்பிறை வான்முக மஞ்சுறலா
லூனமிலங்கமலாதன மன்னய னோர்தலை தங்குறலாற்
றானகு கொன்றையுமாடரவுந்தலை சூடியை யொன்றுமதே
ஞானமிகுந்தந மாறனுகந்தன னுடிய திந்த்ரிணியே. [௧௪]

வென்றிமிகுத்திடு மங்கதமுற்று விளங்கு பதிக்குமடி
நின்றெவருக்கு மகிழ்ந்தினி தெட்டினிமிர்ந்து சலிப்படையா
வன்றிறலிற்படுமண்ட முகட்டிடைமன்னி யுணிற்குமதை
யென்றுமுறச்சரிவின்றி நிறத்தெழு வென்னு முரைக்குறழா. [௰௫]

கொண்டபசுஞ்சுடர் விண்டுவையுஞ் சிறுகுன்று கடம்மையுமே
கண்டதை யொன்று மணங்கையினன் கவிகை யெனும் வண்ணமுற
வண்ட மடங்கலு மண்டிவிரிந்தெழு மந்தர மாந்தனையும்
வண்டலையும் பல தண்டலைதம்மையு மன்னவே கண்டிடிலே. [கசு]

காயொடடை திரள் சேர்தரு நற்கனி காண மிகுக்குமலர்
தூயமிகக்கெழு காலடி பட்டுயர்சோர்வி றிசைத் திசைப்போ
யோயடையுற்றிடு மோவலதுக்கு விணோடுநதிக்குள்விழா
மேயலை கிட்டுமோ வோர்கிலமித்தரை வீழ்தரலற்றனவே. [கஎ]

ஆருமலர்க்கணணுமளப்பரி தாய்முடி வற்றிமிருஞ்
சாருமெணற்றப லாயிர மற்படு சாகை தழைத்திடலா
லாரணமொக்கு மலாமலு மற்று வலாரி நிகர்க்குமதே
சேருமையுற்றெளி சேர்சசி தொட்டுயர் சேணகருற்றிடலால். [கஅ]

வாரிகலிங்க மெனுவரை கொண்டிடு மானில மண்டிமிரு
மாரிருள் வெம்பகை போழ்தர வெங்கதி ராமசி கொண் டெழுகுஞ்
சூரிய னென்றினராவித னுண்ணுமை தோறு மெஞ்ஞான ரவி
சாரொளியா லொரு தீபமெனும்படி தானொளி தந்திடுமால். [ககூ]

பாயுமிதிற் சிறுதேனு முரைத்திடில் பாருள பட்டுமிழி
வாயுவுடற்படு நோய்களனைத்தும் வராமலடர்த்திடுமாற்
றீயகனற் கனுவேனுமிதிற் படில்சேகுருகிப் புனல்க
ளேயது வெத்தல மோவவ்விடத்தினி லேறவிடுத்திடுமால். [உo]

யோகவருங் கொடிதாய தொழில்புரிவோர்களு மிவ்வழியா
யேகவரும்பொழு தீதவர்கண்படிலேய பவந்தொலையும்
ஆகவநன்னகர் மேவி விளங்குவாகில் விளம்புவர் யார்
தாகமொடும் வழிபாடுசெயும் மவர்தாமடையுந் திறனே. [உக]

தாறுபடுங்கமுகோர்பெறு தெங்கொடு சாமரையிற் பொலியச்
சீறிமலர்ந்தகல் வானுயருங் கவிர்தேரின் விளக்கொளிரச்
சூறடிவிண்டவழ் சோலையெறழ் மனர்தாழ்ந் தயனிற்பவன
மாறனெனும்படி பூவரசுற்றிடும் வாளர வப்புளியே. [உஉ]

வேறு

அத்தனரு மாவலிபான் மூவடிமண் வாங்கிய நாளனைத்துந் தன்னுள்
வைத்தடக்கு மலரடியே மானவிரு வானமெலா மலர்ந்து நீண்ட
இத்தகையபுளிநீழற்றவழ்ந்தோடிச்சென்றணைந்தவிளவலாய[தான்.
முத்திநிலமடிதொழுவோர்தமக்கருளும்பரனதன் றன்மூலஞ்சேர்ந்

பாரடையிற் பரகதியிற் சேர்த்தருள்வாம் வடபாற்கட் பரிந்துமுன் [போய்
ஓரடியிட்டினிவரவின் ஞெழுதிரெனத்தென்புறத்து ற்றுறையுந்திய
காரடுமற்படு முடலத்தேமனருங் கொடுந்தமரைக்காய்வான் போலச்
சீரடரப்புளிவேரிற்சென் றபரன்றெக்கணமாந்திசையைநோக்கா. உச

ஐம்புலமாயக்களை நிராகரிக்கும் மியாகியர்கட் கறிவிப்பான் போற்
செம்பதுமாதனந்தரித்துட்கரிதாகிப்புடையகலாச்செழித்துநீண்டு
வம்புறுமமற்கமலநறும்போதெனவேயிடையிடைசெவ்வரிகளோடிப்
பம்பருட் கணிணைபிறழா தெழிலாரு நாசிநுனிபார்த்துமாதோ. உரு

வடமேருப் பொன்கிரி நின்றிழிதரு பல்லருவியெனவயங்குமார்பி
னிடமே வொண்ணிலவு மிழும் வெண்டரள மணியார மிலங்கவே
படமேவி நிமிர்ந்தி மிருமரகத நல்வரைய தனுட் படிந்த சோதித்(தோ்
தடமேய செங்கதிரிற் றிருமேனி யொளிசெய்யச் சலியாதாகி. [உசு]

பல்லாயிரங்கோடி யண்டமு மவ்வண்டத்துட் பரந்துவாழு
மெல்லாமுந் தானுகி நின்றருளு முதலாய வெழில்கொள் சோதி
யில்லாரைம்படையாதி நிர்மலனே பரமாயவிமல னென்னு
மல்லாரும் வலது கரத்தில குசின்முத்திரை தரித்து வயங்கிமாதோ.

மற்றோர் செங்கர கமல முன்னொரு நாட் டோன்றிய வம்மலரே [சேர்த்தி
யன்னப்)
பொற்றோ யுமப்போதிற் புடைபரந்தவுந்தி யின்மேற் பொருந்தச்
யுற்றோடும்பேருயிர்ப்புள்ளுறவடக்கி யாப்பலம்போ துறழ்வாய்மூடி
முற்றோகையொளிபரந்துவாண்முகநின் றொளிசெய்யமோனமாகி.

அகனுகில்லேனிறையு மெனத் திருமாதுள்ளுற மகிழ்வுற்ற மருமார் [பன்
சகமுழுதுந்தன்னுளுறத் தானடக்குந்தாட்கமலத்தார்வம் வைத்துப்
பகர்தாக் கண்ணகத் துழனுமிருவினையாம் பவந் தொடைத்துப் [பாகாடீயும்
நிகரிலருந் தகையவட்டாக் கரப்பொருளே தாரகமாய் நெஞ்சுட் கொண்டு [உகூ]

உருகிய பேரன்பினெடும்வந்தணைந்தாரிருவினையீர்த்து யர்வானீயத்
தருமுதலே மெல்லணையா யங்கிழலே மேனிமுற்றுஞ் சத்திரமாகப்
பெருகிய மெய்ஞ்ஞானச்செங்கோலோச்சி வீற்றிருந்து பிறங்கினை
லிருநிலங்கொள் மருளகலச் செங்கதிர்போற் றென்பாலி லெழுந் தானம்மா. [௩௰]

இவ்வணம் வீற்றிருந் தருளுமேந் தறனைக்கண் டெளிதி னெடுப்பா
னெண்ணிப்) [கச்
பவ்வங்கொளலை வாரிதன்னிலும் பேருவகை வெள்ளம்பம்பியோங்
செவ்வண்ணந் திகழ்சுடரோன்றனை மின்சேருந் தகையிற் றழுவினு
(ளான்
மைவ் வண்ணந் திகழோதிப் பொன்னுடைய நங்கையெனு மடந்தை
தானே. [௩௧]

கையாரத் தழுவியணைத் தெடுத்தளவிற் போர்வரைபோற் கனப்ப
(நோக்கி
யையோ வீதென்கொலெனப் பதைபதைப்புற் றசைத் தெடுத்து
(மசையா னுகி
மெய்சோரக் கைசோர மாழாந்து வாய்குழறி மிகவே விம்மி
மையோதி யெழுதியவோர் சித்திரம்போலத் தனையு மறந்தாண்
மன்னோ. [௩௨]

மருவிரியுங் குழலுடைய நங்கையெனும்மடமாதோர்வண்ணந்தேறிப்
பொருமலொடு விம்மலு மென்மே லெழவுள்ளூற வடக்கிப் பொரு
வேற் கண்ணின்) [மன்னோ
றருவியெனப் புனல்சோர வாம்பலென வாயங் காந்தறைந்தாண்
விருநிலனும் பெருவானுங் கருதுறவே யிசை வாய்ந்த விறையோற்
கன்றே. [௩௩]

போதகமோடிகல் வேடற் கிருவானமீந்து முகிற்பொலிந்து நின்ற
நாதனருட் பல்காற் சிந்தித் தோகைமீக்கிளர் நனியுந்தேசார்
காதலனின் றிங்கோடித் தவழ்ந்ததுவே பெறும்பேறுய்க்கருதிநின்ற
சீதநறுங் களிவண்டு பாண்முரலுந் தொடை யகல த்திறல்வேற்
கோமான். [௩௪]

வேறு

பருந்தாயில்வாட் படைவிழியாள் பரிவிற் சோர்வுற் றுரைத்த
திருந்தாரங்கை வேனுதிபோற் செவியினூடே நுழைதரலும்(மொழி
வருந்தா நின்றுள்ளினி திரங்கி மாழாந் தீதென் னதிசயமென்
றருந்தாட் கமலத் தவிர்கழல் களதிரக்கடிதிற் குறுகினனால். [௩௫]

மழஞ்சே ரொளிவிட் டெழுங் கதிரைவளையுமோர் கோள் சூழ்ந்ததெ
குழைஞ்சேயுள்ளந் திருந்தலர்க்குக் கொடுமை கூருங்கொலைவே(னக்
பழஞ்சேயாம்பற் றுவர் வாயபாலனுமைப் பரனைத்தன் (லான்
முழைஞ்சேயேம வரையன்ன மொய்ம்பாற் றழுவி யெடுத்தனனால்.

தண்ணென் நதி சூடிறையன்னான் றுதையாய தாட்கமலத்
தண்ண றன்னோடும்ப ரெல்லாமறியச் சுடரை யெடுத்தளவிற்
றிண்ணஞ் சிகரம்போற் கனப்பச் செழியர் கோமான்றிறலழிந்து
கண்ணிலாதான் பெற்றிழந்த காட்சி யண்ணலாயினனால். [௩௭]

மன்னர்கோமா னெடுத்ததற் பின் மாழாந்துருகித் தமர்குழுவுந்
துன்னுங் கதிர்வேன ராதிபருந் துணைமென்கொங்கை நுண்மருங்கு
லின்னல்கூரப் பணைத்தண்ணுந் திறமாந்திருக்குங் குவடிணையா
மன்னம்போலு நடையாரு மசைத் தசைத்துப் பார்த்தனரால். ௩௮

தம்மாலாகுந் திறத்தினோடுந் தழுவி யசைத்துப் பார்த்தளவிற்
செம்மா மேனித் தனிமுதல்வன் சிறிதுஞ் சலியாவகை நோக்கா
நம்மாலாகா வகையன்றி நாறுங்கதிர்காலிப் புதல்வன்
செம்மாந் திருக்குங் களியானைத் திரட்குமசையா னென்றனரே. ௩௯

சனித்தநாட் டொட்டின் றளவுஞ் சலியாத ணுவுமணி விரைவி
லினித்த செவ்வாய் கண்டிறந் தின்றெளி திற்றவழ்ந்திங் கோடிய
பனித்த நெஞ்சில்லாதார் தம் பார்வை யெச்சிலெய்தியதோ (தால்
தனிச்செஞ்சுடரேயெனவொளிரித்தனையற்கென்பார்சிலரன்றே. ௪௰

மருந்தினின்சொற் றிருமாது வளரு மணிமார்பன் கொல்லோ
திருந்து தனிச் செங்கோ னடத்துஞ் சேனை முதல்வன்தான் கொல்
கருந்தண்ணீர் மண்ணிடத்தேதோ காரணத்தின் பொருட்டாக (லோ
அருந்தவத் திம்மன்னவன் பாலடைந்தார் கொல்லோ வென்பாரால்.

தேனார்கமலத் திருமகட்குந் திரைப்பார் மகட்குந் தனிச் செல்வக்
கோனாதனுக்குக் குடிகுடியாட் சேய்யுஞ் செழியர்தங் கோமான்
மேனாளிழைத்த மெய்த் தவங்கள் விளங்க முற்று முடித்திலனோ
ஏனுமிவ்வாறிப் புதல்வற் கிருக்குந் திறனென்பார் சிலரே. [௪௨]

வாளை கமுகு மடல் கீறு வயல்சூழ் குருகாபுரி யளிக்குங்
காளையன்னா னிம்மைதனிற் கணமுந் தீமை நினையானாய்
வேளை மூன்று மெய்யறம்மே விளங்கச் செய்தான் யாமறிவோங்
கோளை யெய்திக் கொடுமை யன்னன் கொண்டதிறனெ னென்பார்
சிலரே. [௪௩]

வியனார்பதும மென்போதே மிளிருங் கண்கால் கரமாயு
முயர்வா னிலவினேர் மதியே யொளிமா முகமாயும் படைத்தே
யியலாரிப் பாலகன் றனக்கீங் கிவ்வாற ளித்தவீர்ங்கமலத்
தயனே கொடிய பாவியென வறைவாருள்ளங் கரைவாரால். [௪௪]

என்று கூறுமொழிகளைக் கேட்டிறுமாந் திணைந்த வன்னமுலை
துன்றுங்குழ னங்கை மாதுந் தோன்றறுனு முள்ளுடைந்து
கன்றிமாழாந் தனராகிக் கண்ணீர் தனைம மஞ்சன மாட்டக்
குன்றுபோலப் பொலிந்து நின்ற கோமான் முன்னரிவை சொல்
வார். [சரு]

வேறு

கொண்டலிற் பொலிந்து நின்ற கொழுஞ்சுடர்ப் பரிதி வேந்தே
வண்டர்தக் துயரந்தீர வகலிடத்துதித்த கோவே
பண்டொரு விலங்கிற்கோடிப் பாலனம் புரிந்த வுன்றன்
மண்டருளினையின்றெங்கண் மறைத்தனை யெம்பான் மன்னே. சசு

வழிவழி நினக்காட் செய்து வந்த வல்வினையே மின்று
கழிபெருங் கொடிய துன்பக் கடலிடையாழ்த னன்றோ
பழிவழி யொழுகா வன்பர் படுந்துயர் காப்பா யென்று
மொழிவது பொய்யதாமோ முதற்பரம் பொருளிரங்காய். [சஎ]

அறிவிலாச் சிறியரே போலெதுவு நின்னடியலாது
பிறிதுயர் நினைந்ததுண்டோ பெருந்துய ருழன்று வாடுங்
குறியினைப் புரிவதென்னே குணப்பெருங் கடலேநாவி
செறிகுழற் றிருமணாளா செழிக்க வின்னருள் செய்வாயே. [சஅ]

அருளிழிந் தொழுகு தாதையன்னை மெய்ஞ்ஞான மோதுங்
குருமுத லனைத்து நீயாய்க்கொண் டினிதிருக்கு மெம்பாற்
பெருகியவருள் செய்யாதே பிறங்கு மெய்ப்பொருளே மென்மேல்
வருதுய ரதனின் மூழ்கவைத்தனை யென்கொலின்றே, [சகூ]

வன்புறு மனத்தேன் நின்பான் மனிமக வருள்வா யென்ன
வன்புடன் வேண்டுங்காலை யளித்திடா தொழியின் மேவுந்
துன்பமொன் றதுவேயாகுந் தூய்மறைப்பொருளே யன்றி
யின்ப மதருள்வான்போல விடர் பல விளைத்ததென்னே. [ருய]

மூல மென்றொருகாற் கூவுமுன்னரே யடைந்தோர்மாவி
னேலஞரொழித்தா யின்றிவ்விளி வரலிடரின் மூழ்கச்
சாலவு முழன்றநேகந் தரமுனை யழைத்து மென்னே
வாலடைதுயின்றகோவே யருள்செயா திருந்தவாறே. [ருக]

உள்ளநெக்குருகி யிவ்வாறொலி திரைப் பரவைஞாலத்
தெள்ளருஞ் சிறப்புவாய்ந்த வெரிமணிப் பூணரேத்தப்
புள்ளுயர் கொடியானங்குப் பொலிந்தருள் புரியானாகத்
தள்ளருந்துயரவாரி தன்னுளாழ்ந் திருந்தாரன்றே. [ருஉ]

வரிசிலைச்சுவடு தோய்ந்த வரைபொருவயிரத்திண்டோட்
குரிசிலாண் டகைமையாலுட் கொள்ளரு ரடக்கா நின்றான்
பெரியவாட்டடங்கணல்லாள் பேதைமைக் குணத்தாலன்ன
துரியனைக் கண்டு கண்டு துயருளாழ்ந்திணைய சொல்வாள். [ருங]

வேறு

நஞ்சிற் பொலிகண் ணங்கையர் நகை கண்டயல் சூழ்ந்தே
கொஞ்சத்தனி மஞ்சத்திடை குலவித்துயில் வளர்ந்தென்
நெஞ்சத் துயரகலக் களிநிலைபெற்றிட வருளா
விஞ்சுற்றுயர்தருமித்தரு வேருற்றதென்மதலாய். [ருச]

தளிர்மெல்லடி தனுவைப் பழிநுதலாய் குலமதலாய்
மிளிரொண்மணி மனைவாய்ப் பவவினையாள் செயவிழைவா
லொளிமேனி சற்றசையா விடுமுழையே கிடந்தனையே
யெளிதாயிவனுறவே யெழுமிகல் வந்ததெனிறையோய் [ருரு]

இருகட்புல னில்லாதவர்க் கிடையேயளித் தன்றே
பருகுற்றிடு வகைபோ லொளிர் பனிமாமதி நுதலாய்
மருவுற்றெழு களியுட்கொளும் வகையேதவழ் நடைசெய்
தருகித் துயருற வென்னதை யுடனே கரந்தனையே. [ருசு]

பழுமாமர விலைமேலொரு பகலோர் சிறுமகவாய்த்
தழுவாவிழிதுயில்வோனருட் டகையால்வரு மகனே
யெழுநீள்பசியதனுன்மல ரெழில்வாய்திறந் தினிதா
யழுமோசையை யெளியேன்செவி யடையுந்திற னென்றே. [ருஎ]

துனியேமிகு மாபாதகத் தொழிலே யருவினையே
னினிதாய் மடிமிசைவைத்தம மிழிபானிறை யூட்டக்
கனிவாய்திறந் துண வென்றுகொல் களியோடது காண்பேன்
பனிமாமதி மரபூடெழு பகல் போலொளிர் மகனே [ருஅ]

இங்குன்றனதணியும் பெருவெழிலார்மதி முகமும்
பொங்குஞ்செழு வகுளப்புயம் பொருவு நயநயுக
முங்கண்டவர் கணெணச் சிலதுடையபபல காப்புத்
தங்கும்படி செயவெனறெழு தருவா யொளியுருவே. [ருகூ]

கோடுஞ்சிலை நுதலாயணி குழையார்கன மரும்பப்
பாடுள்ளவிர் பனிதூங்கவே செங்கீரைய தொன்றி
யாடும்பருவ மிதாகலினரிதாய தொல்வினை யேன்
நீடுந்துயரது தீர்தர நீயென்றது புரிவாய். [சுய]

தூன்றுங்குழன்மட மங்கையர் சூழ்வுற்றனர் தாலோ
வென்றுன்றனை யாட்டச்சுட ரெறிமா மணியதனு
லொன்றும்படியிழை தொட்டிலிலோடித் தவழ்ந்தேறி
யின்றுன்றிய கழலாய்மலர் விழியென்றுகொ றுயில்வாய். [சுக]

என்றென் வயிறிடைநின்று நீயிவண்வந் துதித்தனையோ
வன்றொன்றியே யிதுநாள்வரை யஞரிற்பட மூழ்கு
முன்றன்றவ முதுதந்தையு முறவோர்களு மியானுங்
குன்றில் களிகொள வென்றுகொல் சப்பாணி கொட்டுவையே. சுஉ

சித்தந் தனிலுறு வெந்துயர் தீரக்களிசேரக்
கத்துந் திறலதுகண்டு நீயினியாகிலுங் கனிவாய்
முத்தந் தரவெழுவாய்தரு மூலத்துறைவோ யென்
புத்தென்றுரை நரகப்பிணி போகப்பணி மகனே. [சுரு]

விட்டுக்கதிர் பொலியுஞ்சுடர் மிளிரும் பசுமுகிலு
மெட்டிக்கு மகிழவந்தென விவரிம்மர முறைவோய்
வட்டச்சிறு பறைகைக்கொடு வருசிற்ற வருடனே
கொட்டித் திரிதரலென்றுகொல் கொடியே னிடர்கெடவே [சுச]

தாராகண நடுநின்றோளிர் தருமாமதியெனவே
வேரார் தருசிறு பாலகரிடை மன்னுறவெய்தி
வாரார்முலை மடவார்மலிமறு கூடொளிர் சிறிய
தேராரவிடுத் தென்று கொறிரிவா யொளியுருவே. [சுரு]

வரமாமலரிணை கேரடிமணி நூபுரமொலியே
தரநாடொறும் விரைவோடியே தளவெண்ணகை யிளையார்
பாவாவகன்மறு கூடிழை பயில் சிற்றில்கண் முழுதுந்
திரமாக வெனொரு பாலக சிதைத்தென்றுகொல் வருவாய். [சுசு]

அணிமாநகருறைவோர் பல ரடையா வெனதிடையே
மணிவார் குழையுடையாயுனன் மகனு டொறுமளவில்
திணியோடின றருவட்புகள் செய்கின்றன னெனவே
பணியாவெழ விறையென்றுகொல் பயில்வாய் மறுகிடையே. [சுஎ]

பெருநீருலகிடை மாமகள் பெருமானுயர் மதமே
மருவாமலிதரவே செயுமனர் கோனளி மகனே
திருமாதுறுமணி மாளிகைத் திருவே முதன்மருவா
திருமாமரநிழல் வைகுறுமிதுவோவுன விதியே. [சுஅ]

கடல்வேலை கடந்தாலென விழிநீரிருபுடையும்
விடவேயெரிதரு வெங்கனலிடைமென்றளி ரெனவே
யுடல்சோர் தரமாழாந்தினி துருகுஞ் செயல்கண்டு
மிடரேனென வுரையாடலை யிதுவோவுனதறமே. [சுகூ]

மிகவேநறையுகு மாலுகவிரி மாலையினிறையோய்
மகனே யருமகவினையென மதிசோர்தரல் கண்டே
யுகவாவெனதனை நீ யினியுருகேலெனவுரையா
வகமேவிய துயர்தீர்தரவருளாதது தகவோ. [எ0]

நகுமின்சுதரிசனன்பத நளினங்களை மறவேக்
தகவெந்துயர்கொள மன்னுயிர்தமையெங் கணுநலியே
மிகுநல்லறவினை யன்றியேபுரியோமொரு வினையுஞ்
செகுவெந்துயரிடை மூழ்குறசெயலென்ன கொல்விதியே. [எக]

வேறு

கொலைபழுத்தொழுகூன் வைவேற்கொற்றவர் குழூமிகந்தந்
தலைமகனிவனேயென்று தாங்கருந்திறைகள் கொண்டு
சிலைநுதற்றிருவேயுன்றன் றிருவடிபோற்று நின்றார்
உலைவுறென்றுயரந்தீர வுகந்ததைக்கண்ணுறற்பாராய். [எஉ]

சிற்றிடைக்கன்னிமாருன் சீரடிச்சுவடு காண்பான்
முற்றிலந்தூதைகொண்டிம் மூதெகினத்தினீழற்
சுற்றிலுஞ்சிற்றில்செய்து துன்னிநின்றார் நீயத்தைப்
பற்றுமென்றுயரந்தீரப் பணிமலர்க்கண்ணுற் பாராய். [எங]

செவ்வியவொளிகொள் மேனிச்செல்வனோர் வளர்வெண்டிங்கட்
கொவ்வநாடொரும் பூரித்துமுடல் சிறிதசையானாக
வவ்வணமிருப்பக்கண்டே யறற்குழனரிலாழ்ந்தாங்
கிவ்வணம்பருவந்தோறு மிரங்கியுள்ளுருகா நின்றார். [எச]

எல்லியும்பகலுநீங்கா தியாவருமிருப்பச் செம்பொற்
சில்லியங்குழலாணங்கை செவ்வியிற்றினங்கடோறு
மில்லகந்தனிலே முன்னரியற்றியவாறுபோல
வல்லியங்கடலக்கண்ணுற் கவ்விடத்தியற்று நின்றாள். [எரு]

வண்டலைந்திழிதேனுண்டு மருவுதாரிமிரு மார்பக்
கொண்டலைப்பொருவும் வண்கைக்கோமகன் குழவிதன்னைக்
கண்டுகண்டுருகித் துன்பக்கடற்கரை காணுகிப்
பண்டருங்குறுங்கைவாழும் பரமனதுரைமறந்தே. [எசு]

நச்சினர்வினையைநீக்கும் ஞானதேசிகனெடுப்பான்
வைச்சபண்டிதர்களாலு மந்திரத்தலைவராலும்
வெச்சுறமுத்தீயோம்பும் வேதவந்தணர்களாலும்
பச்சிலைவகையினாலும் பார்த்தனனிருந்தானன்றே. [எஎ]

நீருலாம்பொருனை நாடனெஞ்சிடர் நிறையநாளு
மேருலாங்குழவிதன்னை யெடுத்தினி தளிப்போர்க்கென்றன்
சீருலாந்தரணியாவுஞ் சிறப்புடனளிப்பேனென்ன
வோருரைவழங்கி யன்னேருறும் வழிபாராநின்றான். [எஅ]

ஞானவாரமுதமுண்டு நாடொறுமவயவாதி
வானவாந்தருக்களேபோல் வளர்தரத்தருவின்மூலத்
தேனலம்பொருந்த யோகியெனவினிதமர்ந்துவாழு
மூனமிலாதவெந்தை யொளித்திர மேனிதன்னில். [எகூ]

விரைக்கருங்குழலாணங்கை வேந்தர்கோன் முதலயாரு
நிரைக்குலந்தமது கன்றை நீங்கிலா வகைபோற்சூழ்ந்தே
யுரைக்கரும்பதினாறாண்டீ யுடனெறும் பனுகாவண்ண
மரைக்கணப்பொழுதுநீங்கா தன்னவரிருந்தாரங்கே. [அம]

திருப்புளிப்படல முற்றும்.

---

# திருமதுரகவிப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

பைத்தலை யரவந் தாங்கும் பாரிடத் துயிர்கட் கெல்லா
மெய்த்தகு முகிலேய் மேனி மாயனெம் பெருமான் றன்னைக்
கைத்தலத் தமர்ந்த நெல்லிக் கனியெனக் காட்டித் தந்த
மெய்த்தவ னெதிராசன் றன் விரைமல ரடியுட் கொள்வாம் [க]

காகமலங்கள் கூப்பிக் கைதொழு மவர்தம் தீய
நரகவித் தருள்வான் ஞான நாதனிவ் வாறிருக்க
குரகதமுகத்தாற் கன்பாங் குமுதகணும்சராம்ம
தூரகவிப் பெருமான் வந்துதோன்றிய விபரஞ்சொல்வாம். [உ]

உலகெனு மடந்தைக் கோங்கு முருவமை யவயவாதி
யலகிலா வளஞ்சேர் தேய மவற்றுளிப் பாண்டி நங்கா
டிலகொளி வதன மந்த வெழின்முகங் கவினத் தீட்டுந்
திலகமதென்னத் தோன்றித் திகழ்தருந் திருக்கோளூரே. [ங]

அத்தமா னிறந்துவேதத் தந்தணன் முதலாந் தேவர்
தத்தமானியை யெடுத்துச் சாற்றிடக் கமலமென்போ
துய்த்தமா னிலமான் செய்ய வொளியடி வருடப் பாம்பில்
வைத்தமா னிதிமலர்க்கண் வளர்தருந் திருக்கோளூரே. [ச]

மாகய மருப்புமாய்த்தான் மலரடி வணங்குந்தூயோ
ரேகய வேள்வி யாற்ற வெழுந்தடர் கரியதூமம்
ஆகயம் படரக் கண்டே யணிமுகிற் குலங்களென்னுக்
கேகயம் பலநின் றாடிக் கிளர்தருந் திருக்கோளூரே. [ரு]

அமலமுற் றிடலான் மீநி லணிமைதங்குறலான் மீவான்
கமலக னுறலா னற்பொற் கலைசரித் திடலான்மண்ணின்
குமரர்கண் ணிணைக்கு மெட்டாக் கொள்கையா லொளிருமாடம்
விமலவிண்டுவினை யொப்பாய் விளங்குறுந்திருக்கோளூரே [சா]

எங்கண்மா னகர்போந் தெந்த மிறையடி வணங்கி யேகுஞ்
சங்கரன் றனைநீ தாங்கித் தருக்குட னெம்போ னிற்குந்
துங்கநன் றெனவான் கைலைத் தொல்கிரி யினைநக்கென்னுத்
திங்களஞ் சவிசேர் மாடந் திகழ்தருந் திருக்கோளூரோ [எ]

இத்திரு நகரில் வேத வெழிற் பெருங்குலத்துட்டுவாப
ரத்தின தந்த மாகு மணியவிக்கிரம வாண்டிற்
சித்திரை மாதத் தோடு சேர்ந்தசுக்கிலபக்கச்ச
தூர்த்தசித் திதியுஞ் சுக்ர வாரமுங் கலந்ததாகும் [அ]
சித்திரை நாளி லாசான் சிச்சரி னியல்பு மன்னோர்
பத்தியும் விசுவாசத்தின் பான்மையு நிலத்துவாழும்
புத்தியி லுயிர்கட் கன்பாய்ப் புகழ்பெறக் காட்டித் தூய
முத்தியின் விளைவை நல்க முதற்பரம் பொருளாலன்றே. [கூ]

இருணலி தரக்கால் சோதி யிளங்கதி ருதையமுன்ன
ரருணனா ருதிக்குந் தன்மை யாமெனப் பரவை ஞால
மருணசிப் படைய ஞான வாரமு தருளுஞ்செம்பொன்
வருணநங் காரிமாறன் வருமுன மெழுந்த வள்ளல். [௰]

முடிவிலின்னவனால் வேத முற்றுணர் திறத்தைக் கூறிற்
கடிமலர் கமலச்சேக்கைக் கண்ணவற் கிழுக்குண்டாமா
லொடிதிரைப் பரவை ஞாலத் துயிர்கண்மேல் வைக்கு மன்பாற்
படிமுழு தளந்துகொண்ட பரமனேயனை யனாவான். [௰௧]

பண்டரும் பரம வேதவிதிப்படி பரித்த முந்நூல்
விண்டலத் தெழுந்துலாவு மின்னெனப் பிறழுமார்பன்
வெண்டிக ழூர்த்த புண்ட்ர மேவிய நுதலான் சேந்த
மண்டுபொற் சடிலத் தாலே வயங்குசேகரத்தினானே. [௰௨]

பரந்தர வணையான் செய்ய பதகமலங்க ளல்லாற்
புரந்தர னீறாய் வேதப்புனிதனே முதலாந்தேவர்
வரந்தர வல்லே மென்ன வந்துமுன் னிற்பாரேனுங்
கரந்தலை குவித்துச் சற்றுங் கணித்திடாக் கருத்தனம்மா. [௰௩]

கொல்லுநஞ் சடக்கு கண்டக் குழகனு மறைவலானும்
வெல்லுதற் கரிய காமவெகுளிக ளவிக்கு நீரான்
புல்லிய நெறியி னாளும் பொறிபுலன் றமைப்போக் காது
சொல்லிய வறத்தினிற்குந்தூய நன்மனத் தனம்மா. [௰௪]

சென்னிகழ் வடைக லாகச் செப்பிய காலமூன்று
முன்னியுள் ளறியும் ஞானத் துறுதிகொண் டுயர்வு பெற்றான்
பன்னுதற் கரியவாய பதும வாதனத் தட்டாங்க
மன்னிய யோகத் தின்கண் வரம்பினான் மகிழ்வு கொண்டோன் ௰௫

வேறு

இன்னதன்மையமதுரகவிப்பெருமானெண்ணுதற்கரியவேதாந்தத்
தன்னியல்புணருநிபுணனாய்ச்சந்வந்தலையெடுத்தெவருமோர்தரமு
னுன்னிய வளவிற் பரகதி யுதவயோத்தியேமுதற்றிரு மடந்தை
மன்னியோ ரிறையு மகல்கிலா மருமன்வளர்தரும் பதிதொறுஞ்
சென்றே. [௰௬]

விழுந்தகு முவகை யுள்ளநெக் குருகி விரைமல ரருச்சனை புரியா
வழுத்தியாங் குளவாம் புனிதநற் றிவலை வானகமுகடுதைவரவே(து
கொழுத்தலையெறியுங்கங்கையைமுதலாக் கொண்ட பற்பலநதிபடிக்
பழுத்தமெய்ஞ் ஞான நிலையுணர்ந் தநேகம்பகல்வட புலத்திருந்தன
னால். [௰௭]

அங்கரு முனிவ னிவ்வண மிருப்ப வணியவைகுந்தநன்னாட்டிற்
பொங்கருட் பரம வுருவினித்தியர்கள் புடைபரந் திறைஞ்சினர் [பொலிய
சங்குடன் றிகிரி வாள்கதை வரிவிற் றாங்கிவீற்றிருந்தரு ளமலன்
செங்கையிற் பிரம்பொன் றேந்தி நன்களிக்குஞ் சேனையர் தலைவ
னைக்கூவி. [௰௮]

இன்றெழுங் குலகிற் றீயிருட் பிழம்பை யிகலறத் துடைத்தருள் [புரிவான்
சென்றுந மிசைபூதரா யுதித்துத் திருப்புளியடியில்யோகியரா
யொன்றிய பதுமாசனந்தரித் திருக்குமொப்பிலா மாறனுக்கின்றே
பொன்மக ளிடமுன்னீர்ப்பெருந் தகையைப்போற்றிரு விலச்சினை
முதலா. [௰௯]

மந்திர வுபதேசமும்புரிந் திவணீர் வருதிரென் றுரைத்திட விரை
விற்) [திருக்கும்
சிந்தையுள் ளுவகை கொண்டன னிவணந் திருந்நுணி யடியில் வீற்
நந்தமதிறையாங் கொந்தவிழ் குழலி னங்கைதன் றிருவயிறுதித்த
சுந்தர வதநற் கவ்வணம் புரிந்து தொன்னக ரடைந்தனன்றா
யோன். [௨௰]

சங்கொடும் புனிதத் திகிரியுந் தாங்கித் தயங்குறு மூர்த்தபுண்டர
மங்கலி லதிதேயோமயனாய் நின்மலனுமாய்வீற்றிருந்தனனால் [னாய்
பொங்கலைப் புணரி நிலந்தனி புரக்கும் புரவல னியற்றருந் தவத்தில்
வெங்கலி கரப்ப வந்தெழுந்தருளும் விமலமெய்ஞ் ஞானநாய
கனே. [௨௧]

இருந்தரு டரவிங்கிணையிலான் முன்ன ரெழுந்தன னுத்தரதிசை
யிற்) [றமா
பொருந்திய மதுர கவியெனும் பெயர்கொள் புனிதமெய் யறநிலைபி

வருந்தவ முனிவ னொருபக லிரவி லனைபிரிந்தலமருகன் றின்
வருந்தியுள ளுருகி யணிதிருக்கோளூர்வணங்கினன்தென்றிசை
நோக்கா. [உஉ]

நோக்கலு மிவணத் திருப்புளி யடியி னுவலருந் தகையின் வீற்றி
ருக்கு) [லாற்
மாக்கவி னிமல மாறனன்னவன்றன் மணி விழி யிணையினுக் கல்
ருக்குற வெவர்க்குந் தோற்றில னாகித் தளதளப் புடனெழுமுதைய
நீக்கருஞ் சவிகொள் கதிரெனப் பொலிந்து நின்றிடக் கண்டனன
வனும். [உங]

காண்டவச் செழுமி னொளிவிடுஞ் சுடரைக் கடியவெங்கானக மத
[னிற்
றூண்டிநின் றெரியு மங்கிகொ லலது தடநகர் வேவுறக் கனன்று
நீண்டுபற்றிடுசெங் கனல் கொலோ வென்ன நெஞ்சயிர்ப் புடனி
[ருந்தனனால்
மாண்டகு மினிய தமிழ்மறை யுரைத்த வன்றன தடிபணிந்துய்ந்
தோன். [உச]

வேறு

இவ்வண மிரண்டு மூன்றுநா ளளவா யெண்ணியு மவ்வொளி
மழுங்கா) [ணக்கு
தவ்வண மிருப்ப வென்விழிப் புலனுக் கன்றிமற் றியாவர் கண்ணி
மொவ்வுத லின்றி யொளியுட னிலங்க லென்னகொ லிதுவெனக்
[கலங்கிச்
செவ்விய நெறிகொண் முனிவரன் பின்னுந் திருவினையகன்செய
லென்னு. [உரு]

நன்றுகொ லிதனைக் கண்ணுறி லழியா நவையிலா வொளியதா
யிலங்கு) [புரிந்து
கின்றது கணமுந் தங்குறு விரைவிற் கிளம்பியான் சோதனை
சென்றிவ ணடைவ னெனத்திரங் கொடுதொ றென்முக நோக்
[கினனெழுந்தான்
மன்றலந் துளவத் தாரினு னடியர் மலரடியன்றிமற்றன்னுன்[உகூ]

உதையவெங்கதிரி னொளிவிடுஞ் சுடரை யொன்றுற நோக்கியச்
சுடரே) [றரும்பக ரொருங்கண்
சிதைவினன் னெறியாக் கொண்டிரா முழுதுஞ் சென்றுசென்

டதைமலர் வளரச் செயதிடை யுறநற் றலந்தொறுஞ் சோதனை
[புரிந்து
புதையிருட் பிழம்பு சீத்தொளிர் மாடம் பொலிதிரு வரங்கம்வந்த
டைந்தான். [உஎ]

அத்திரு நகரி லரங்கனை வணங்கி யற்றைப பகலினைக் கழித்து
நத்தம்வந்தடைய வாய்ந்தன னவணந் நகைவிடுஞ் சோதியே பின்னு
மத்திசையொளிரவெழுந்தனன்விரைவிலடைவிவெற்பகன்றிருங்கரை
[யைக்
குத்திருந் திரைகொள் பொருனைசூழ் தருமிக் குருகைமானகரம்
வந்தடைந்தான். [உஅ]

எழுந்தரு டரவு மவ்வொளி மறைய விரும்பல தருவினன் மறைந்து
மழுங்கியதுகொலோ வெனும்பினுந் தென்பால் வந்தனன் வட
[திதென்ன
புலத் தொளிரத்)
தொழுந்தகை யுடையவ் வருந்தவ முனியித் தொன்னக ரிடத்த
வழுந்தினன் களியி லடைந்தன னிவணேயடைதலு மறைந்ததவ்
வொளியே. [உகூ]

வேறு

வந்த வருந்தவ மாமுனி வோனு
மிந்த நகர்க்கு ளேதேனும் விசேடம்
விந்தையி னுண்டுகொ லென்ன வினவச்
சிந்தை யுவந்தனர் செப்புவர் மன்னோ. [௩௰]

எந்தம் விளங்கயி லேந்திறை வோனே
சந்தத முஞ்செய் தவத்தினின் மாயோ
னந்தமிலண்ணறன் னின்னரு ளாலே
மைந்தனும் வந்து பிறந்தன னன்றே. [௩க]

தோன்றிய வன்று தொடங்கியி றீரு
யான்ற வரும்பதி னறெனு மாண்டாய்
வான்றழை வெஞ்சுடர் வானவ னேபோற்
கான்ற கவின்றிகழ் காண்டகு மேனி. [௩உ]

சற்றுமசைத்திலன் றூமரை யங்க
ணுற்றுவிழித்தில னெள்ளிய செம்மை
முற்றியவாயது மூடுத லின்றிப்
பற்றிழையான் முலைப்பாலு மருந்தான். [௩௩]

தீண்டரு மெய்த்தவ செப்பிய தன்றி
யாண்டுதோ றுங்கவி னங்கம் வளர்ந்தே
நீண்டிட வோர்தரு நீழ லிடத்தே
மாண்டக வைகினன் மைந்தனு மன்றே. [நூச]

அன்றுமுதற்கொ டருந்திறல் வேலோ
னின்றள வாக வெழுந்தரு ளுன்போற்
சென்றவ ராய செழுந்தவர் தம்மாற்
குன்றி னிதிக்குவை கொள்ள வளிப்பேன். [நரு]

என்னவுரைத்தன னிந்நெடு நாளாய்த்
துன்னவருட்கொடு பார்த்தனன் றய்ய
வன்னவ ராலு மசைந்தில ளுக
மன்னிய வின்னலின் மாழ்கின னன்னேன். [நசு]

என்றுரை செய்தன ரின்றத னைப்போய்
நன்றறி வேனென நாறிய மாடங்
குன்றென நின்றொளிர் கோமறு கின்கண்
சென்றுநடந்தனன் றீதில்குணத்தோன் [நஎ]

வருந்தவனைச்செழு மாமறு கிற்கண்
டரந்தையமுங்கினனன்னவர்காணு
இருந்தவெழிற்புயவேந்தலிடம்போய்
விரைந்தனர்சென்றவிளம்பினரன்றே. [நஅ]

கேட்டள விற்பொன் கிரிப்பெரு மொய்ம்பின்
வாட்டகை மன்னன் மதிக்கடலாய
கூட்டவமைச்சர்கள் கூட்டிவரத்தீ
வீட்டிய லற்கெதிர் மேவின னன்றே. [நகூ]

இந்நக ருக்குணீ யெய்துற வென்றன்
முன்னரிழைத்த முதற்றவ மேயென்
றன்னமுனிப்பர ளுய்மல ரன்ன
மன்னுமடித்துணை யாரவழுத்தி [சய]

ஆக்கமு றும்முடை யார வொடுக்கி
நீக்கரும் வெந்துயர் நீடின னிற்கும்
வீக்கவடற்புய வேந்தனை யன்னோ
னேக்கின னின்று நுவன்றிட லுற்றான். [சக]

நெய்கதழ் வேலநின் னெஞ்சிடர் கொள்ளுஞ்
செய்கையதென்னகொல் செப்புதி யென்னப்
பொய்கை தனிற்பல புட்செறி பாண்டி
மொய்கவினுற்று முதிர்ந்திடு நாடன். [சஉ]

மைந்த னிலாது வருந்திய தாதி
யந்த மரத்தி லடைந்ததை யீறாய்
விந்தை யினங்கிடை மேவிய வெல்லாஞ்
சிந்தை மயக்கொடு செப்பினனன்றே. [சங]

வேறு

இந்த வாறிரு நிலந்தனி புரந்தரு ளிறையோன்
சந்த மாமுடி மன்னவன் சாற்றின னிற்ப
வந்த மாமுனி யருண்முக நோக்கின ராகி
அந்த மாமதி யமைச்சர்நின் றறைகுவர் மாதோ. [சச]


அரிய மாமறைப் பொருளெலா மினிதுணர்ந் தரியாத்
துரிய மால்பத மன்றிமற் றுணர்தராத் தூயோய்
விரிய காதமென் மேலெழுந் துயரெனு மிகுந்த
கரிய வார்கலிக் கரைபெறு துழன்றுயர் கடையோம். [சரு]

களிப்பெனும்பெரு மதுக்கட லாழ்தரக் கமலத்
தளிர்க்கு மெல்லடிக் குமரனத் தருநிழல் விட்டெங்
களிக்குலம்படு மாம்பலம் போதினுக் கரிய
நளிக்கனிக்கிணை வாய்திறந் தொருமொழி நவில. [சகா]

விருப்புளிப்புரிந் தருளுவ தன்றிமேல் வேங்கைப்
பொருப்புவிட்டபைங்கிரியெனத்தனியிடை பொலியுந்
திருப்புளித்தலத் திருந்தெடுத் தன்னை தன் செழுமே
யருப்புளிற்பெரு கமுதுண வருள்செய வேண்டும் [சஎ]

இவ்வணப்புரிந் திடிலொரு சூச்சியு மேறுச்
செவ்வணந்திகழ் சடில்சேகரவருந் திறலோய்
பவ்வ வெண்டிரைப் பரவைமா விலந்தனி புரக்குங்
கவ்வை யின்னக ரன்புட னளித்தகங் களிப்ப [சஅ]

மண்டலேசுர ரனைவரு நின்னடி வணங்கப்
பண்டை யாய்வழி வருமுடி சூட்டினர் பரவுக்
கொண்ட தோரரி யணைமிசை யிருத்தினங் கொடியேந்
தொண்டு செய்தனம் வருகுவ மென்றுபு சொற்றார். [சகூ]



ஸ்வாமி நம்மாழ்வார் யோகாஸனத்தில் எழுந்தருளியிருந்த
16-வது திருநக்ஷத்திரத்தில், மதுரகவிகள்
ஸேவித்து நிற்றல். (53-ம் கவி)

சொற்ற வம்மொழி யிருசெவி வெதுப்புறத் தூய்மை
யுற்ற மாமுனி வரனவ னுறைவிட மதனை
யிற்றை நீரது காட்டுமி னிவ்வனை மியற்றிப்
பிற்றை யானது கொள்ளுவ னென்மொழி பெய்தான் [ருO]

என்ற மாமுனி வரன்றனை யிறையவர்க் கிறையோன்
துன்று பற்பல மங்கல முரசினந் தொனிப்ப
நன்று கொண்டினி தேகியத் தருநிழ னவையின்
ருன்றி வைகிய வொளியினைக் காட்டின னுகந்தே. [ருக]

முன்னந் தாயினை நீங்கிய முலைவிடாக் கன்று
பின்னங் காண்குறு வகையெனப் பெய்யொளி பிறங்க
மன்னுந் தாருநன் னிழலிடைக் கதிரென வைகும்
பொன்னந் தேசினம் மாறனைக் கண்டனன் புனிதன். [ருஉ]

வண்டு சூழ்மகிழ் மாறனைக் காண்டலும் வதநம்
விண்டலர்ந்திட லாலவன் முகமது விளங்கும்
புண்டரீகமென் பதற்குமம் மாறனைப் பொருவி
லண்ட யோனியென் பதற்குமிங் கையமில்லம்மா. [ருங]

மோன மாகியோகத்தினி திருந்தருண் முதல்வ
னை நாதனைக் காண்டலு மன்னவ னருளால்
ஞான முன்னைய துதயமா குறமுனி நளினத்
தேனவாமலர்த் தாட்டுணைச் சடைமுடி தீண்டி [ருச]

இப்பெருந்தனிச் சோதியோ வென்றன திதயந்
துப்பனன்மெழு கெனவுருக் கியநெறனுந் தூய
முப்பரஞ்சுடர் தம்மிலு முதற்சுட ரிதுவென்
றப்பராங்குசன் குணமெலா மெடுத்தெடுத் தறையும். [ருரு]

கண்ணுகர்ந்தவர் தம்மிலுங் களிநரு வருந்தி
யுண்ணெகிழ்ந்துநின் ருடுறும் பாடுறு முயர்யாழ்ப்
பண்ணுலாமொழி நங்கைகொண் மகிமையிப் பரவை
நண்ணு மானிலத் துற்றவர் யாரென நவிலும். [ருசா]

அங்கு மிங்குமா யெழுந்தெழுந் தேமுறு மமல
னிங்கு தோன்றுதற் கெத்தவ மிழைத்ததிவ் வெற்நீர்
தங்கு மானில மென்னுமியான் பெற்றிடுந் தகையிற்
பொங்கு பேறியார் பெற்றவ ரெனத்தனைப் புகழும். [ருஎ]

மருப்படுங்கம லாநந மலருமாநந்தப்
பெருக்கி னீடுகட் புனலிடை மூழ்குறும் பிதிருந்
திருத்தகும்புய வரைகள் பூரிப்புடன் றிகழ
விருப்பினுற்புள காங்கித மடைதர வியக்கும் [ருஅ]

இத்தரைக்குள்யா னியற்றிய தவப்பல னின்றே
முத்தி யின்விளை யதனையீந்ததுவென மொழியும்
பித்தடைந்தவ ரென்னமெய் மறந்தளி பிதிருங்
கொத்து நன்மலர் கொய்துகொய் தெறிதரு மன்றே. [ருகூ]

இவ்வணம்பர மானந்தக் கடலத னிடையே
யவ்வரந்தரு முனிவரன் மெய்மறந் தாழ்ந்து
செவ்வை யின்னகந் தெளிந்துபின் றோத்திரஞ் செய்வான்
கொவ்வை வாயுடை நங்கைதன் குலக்கொழுந் தினையே. [சுo]

வேறு

செஞ்சுடர் போலொளிசெய் தேசுறு மெய்ப்பொருளே
மஞ்செனு வேயணிசேர் மானிற மெங்குரையாய்
விஞ்சகல்மார்பிடையேமேவிவிளங்குறுபொற்
கஞ்சமலர்த்தவிசார்காரிகைமெய்த்தவனே. [சுக]

பொங்கட லாரவுணர் பொயொழியப் புவியில்
வெங்கதம் வாளமரில் வீசுசெழுந்திகிரி
சங்குட னெண்கதைவாள் சார்ங்கமெனுந்தவர்மற்
றெங்கிவை வைத்தனையோ வென்றனை யாளொளியே [சுஉ]

மந்தர மாமலையின் வாகொரு நான்கினுநுங்
சுந்தர மோடடல்சேர் தோளிணை யெங்குகொலோ
இந்திர ராகமிசைத் தின்னளி பல்லடருங்
கந்தமுறுந்துளவக் கண்ணிக ளெங்குகொலோ. [சுங]

பாதக வெவ்வினைகள் பாரிடம் விட்டகலத்
தீதறு மெய்யறிவாந் தேசிடு மாதவனே
மாதக வாயுறுசீவத்ச மெனும்மருவும்
பீதக மெய்யொளிசேர் பீடுடை யெங்குகொலோ. [சுச]

செஞ்சரண் வீழ்சுரர்நோய் தீர்தர மண்கொளுநாள்
விஞ்சகல் வான்முகடு மேவர நின்றதுதான்

எஞ்சலி னன்மணியா லிழைபல பூண்டிகழிக்
குஞ்சிகொலோவழுதிக் கோமகனேயுரையாய். [கூரு]

நாடிய வாசமுறு நான நறுந்திலகம்
பீடிய லாவணியப் பெய்யொளி செய்வதுதான்
நீடிய வெண்ணிலவி னோவிர் புண்டரமார்
கோடிய செம்பிறைநேர் கொண்டொளிரிந்துதலே. [கூசா]

அண்டர் தொழக்குளிர வன்றருள் செய்ததுதான்
வண்டலர் செங்கமல மான மிளிர்ந்தரிகள்
கொண்டு பரந்தணிசேர் குழைகளி னேடிகலிக்
கண்டவர் கண்கவரிக் கண்ணிணையேகொலரோ. [கூஎ]

கோவியர் மத்தனைபால் கொண்டினி துண்டதுதான்
காவிய நீள்விழிநங்கைக்குயர் மாமதலாய்
தூவிய னற்பவளத் துண்ட மிரண்டதனைச்
சீவியிணைத்ததெனத் திகழுமிவ் வாய்கொலரோ. [கூஅ]

முன்னொரு வாரணமே மூலமெனுஞ்சொலையே
மன்னுற வேற்றதுதான் மாமறை யாலுணராய்
நன்னய நான்மகர குண்டல நின்றினிதா
சன்னளி யாடுறுமிக் காதுகொல் சற்றுரையாய் [கூகூ]

விழுத்தகு வால்வளையை வென்று பசுங்கமுகிற்
பழுத்தணி கொண்டுபள பளப்புட னேங்குறுமிக்
கழுத்துகொ லண்டமெலா முண்டு களித்ததுவே
கொழுத்தலை மண்டுபுனற் கூர்பொருனைத்துறையாய் [எ0]

விண்ணவருக்கினிய வெண்சுதை யீந்தருள்வான்
தண்ணலைக்கடையுஞ் சார்தகை யுற்றதுதான்
வண்ணமுறுங்கிரிபோன் மல்லோடு பேரணியு
நண்ணிய விப்புயமோ நங்கைகண் மாமணியே. [எக]

சங்கமுறும்பசிய தாமரை யோடிகல
விங்கைசின் முத்திரையை மேவிய விக்கரமோ
நொந்தக நைந்தரனுர் நுன்சர ணேசரணுய்
வந்தடி வீழ்தருமுன் மாபலி யிட்டதுவே. [எஉ]

துண்டநறுந்துவரோ தூய்மையருங்கமலம்
விண்டிடதழோவெனவே விளங்கணி யிவ்விரலுன்

மண்டுநிரைக்குலம்வின் மாரிநெருங்குதலைக்
கண்டழு கால்வரையைத் தாங்கியளித்ததுவே. [௭௩]

நிம்பவலங்கலொடு நீண்மணி யாரமுநி
ரம்பிநிதிக்கிரிபோ லகன்றொளி ரிம்மருமப்
பம்பிடமேகொலரும் பைங்கமலத்திடைவாழ்
வம்புமலர்க்குழலாள்வாழ்வினுகக்குமிடம் (௭௪)

குயிற்றிட மேதினியிற் கோதறு மெய்யறிவைப்
பயிற்றிட வேவியவெம் பரம்பொருண் முத்திரையைக்
கயிற்றிட மேகொளிறை கவின்மிக வார்ந்தொளிரிவ்
வயிற்றிட மேகொலுயிர் வைத்து வளர்த்ததுவே (௭௫)

அங்கம லாதனனை யன்றருள் செய்ததுதான்
துங்கம லாதவனார் தோன்றின ரென்னவொளி
பொங்கம லாதடையிற் பூம்புன லிற்சுழிபோற்
பங்கம லாதளிசேர் பாவுமிவ் வுந்திகொலோ (௭௬)

பார்த்தனணிந்தசெழும் பைந்தொடையுங்கனத
தீர்த்தமு மன்றரனார் செஞ்சடை மீதுறவே
சேர்த்தது தானெழிலச் செய்ய மலர்க்கழலோ
நீர்த்தல மேழினுமே நின்ற புகழ்ச்சுடரே. (௭௭)

ஏறுட னம்பதும விரேகைபரந்தமலர்
வீறுகெடுத்துமணி மேவி யடைந்தவர்நோய்
மாறுபடுத்தியருண் மாமலரிவ்வடியோ
வீறிலிரும்புவிமண் டாவியளர்ந்ததுவே. (௭௮)

சேயமணிச்சடிலச் சேகர னிவ்வனமா
யேயரியன்றிவிழி யேனெனு மக்குறியே
மேயவ னாகியநா வீறனை யுன்றனரு
மாயமதைத்தெரியும் வல்லவர் யார்கொலெனா. (௭௯)

பற்பல தோத்திரமுஞ் செய்து பரன்செயலைக்
கற்புடை நங்கைமுதல் கண்டு மகிழ்ந்திடுவான்
சிற்பரனுக்கணிசேர் செவிப்புல னுண்டுகொலென்
றற்பக நின்றெழவே யம்முனி வோரிறையே (௮௰)

அடுத்ததிரைக்கடன்மண் ணதிர்ச்சி மிகுந்திடவே
யெடுத்தோரிருங்கலைமுன் னேயெறியக் குணமே
கொடுத்தருள் செய்தெளியேங் கோது தொலைப்பவனுந்
திடுக்கென வேவிழிக டிறந்தனனோக்கினனால் (அக)

நீக்கமருங்களியி னாழ்ந்தனனின்றெவரு
நோக்கினர் மன்னுறவே நோன்மையி னுலகு
மாக்கிய நல்லிசைகொ ளவ்வரு மாமுனிவன்
வாக்கிவ னுக்குளகொ லென்றுமகிழ்ந்தனனாய். (அஉ)

சித்தின்வயிற்றிடையே சிறிய துதித்திடிலே
யெத்தையருந்தியது மெங்கு கிடக்குமென
வத்தையருந்தியது வங்கு கிடக்குமென
வித்தக னன்பொடுவாய் விண்டுரைசெய்தனனால் (அங)

வேறு

அதுல னுரைத்திடு மம்மொழி தன்செவி யடையாமுன்
மதுர கவித்தவ னெந்தை யடித்துணை மலர்வாழ்த்திச்
சதுமறையுட்பொருண் முற்றுமோ ரிம்மொழி தனிலொன்றி
யதுவெனவுட்கொடு கந்தன னங்ங னிருக்குங்கால். (அச)

வந்தடி சென்னி புனைந்தவர் வெவ்வினை மருவாதே
விந்தையி னின்ப முகந்தரு ணன்மகிழ் விரைமார்பன்
சிந்தையுவந்து விளம்பிய வம்மொழி செவியோரா
வந்தர நின்று பொழிந்தனர் விண்ணவ ரலர்மாரி. (அரு)

மல்லட ரும்புய நின்மல னன்று மகிழ்ந்தீயு
நல்லமு துண்டு வியந்தவி னும்பரி னனியேயு
மல்லலெனுங்கட றன்னி லழுங்கிய வனைவோருஞ்
சொல்லமு தஞ்செவி யுண்டு களித்தனர் துணிவுற்றார். (அசு)

எத்திசை யுந்தனி நின்று புரந்தரு ளிறையோனே
டுத்தியுறும்பணி நுண்ணிடைநங்கையு முடனாகப்
பித்தரெனும்படி தம்மை மறந்தனர் பேரோகை
யத்தியமுங்கி மயங்கி யுணர்ந்தன ராய்நின்றே. (அஎ)

அங்கையெனும்மலர் சென்னி புனைந்தன ராயம்பொன்
றங்கிய செஞ்சடை கொண்டெழுமம்முனி தனையார
வெங்கடம் வெந்துயர் மங்க வெழுந்தரு ளிறைபோற்றி
யங்கச னுந்திய வெஞ்சரம் வென்றவ வருள்போற்றி. (அஅ)

வய்யக மெங்குமலிந்து பிறங்கிசை வளர்ந்தோங்கப்
பொய்யிலருந்தவ மெண்ணில் புரிந்த புனிதபோற்றி
வெய்யகொடும்பவ மெவ்வுயி ரும்விட மேவாவந்
தய்யமறும்படி மெய்யறி வின்றரு ளடிபோற்றி. (௮௯)

என்றுவணங்கின ருள்ள நிரம்பி யெழுந்தோகை
யொன்றுற நின்றிட மன்ற லுறுங்குழன் மடமாதர்
வன்றிறலின்மணி மண்டபமெங்கு மலிந்தோங்கிக்
குன்றின்மிகுந்தெரு வெங்கு முளங்களி கொண்டாராய் (௯௰)

விந்தையலங்கிர்த நன்குபுரிந்தனர் மென்மேலுஞ்
சந்தனநன்புனு கின்பனி நீர்மலர் தயிர்நெய்பால்
புந்தியிலன்புமிகுந்து பொழிந்தனர் பொருவில்லா
மைந்தனுதித்தரு ளன்றினு மின்றெண் மடங்காக. (௯௧)

இவ்வண மெண்ணி லருந்தகை யந்நக ரெல்லோரு
மெவ்வழி யுள்ள மகிழ்ந்தனர் வைகுற விகல்சேருந்
தெவ்வர்கடம்முயிர் தினவொளி மண்டிய திறல்வேலான்
முவ்வுல கும்புக ழும்முனி தன்னடி முடிதாழ்ந்தே. (௯௨)

மின்னவிருஞ்சடை மன்னு மருந்தவ வினையேன்முன்
சொன்னவணந்திரை மண்டி யெழுங்கடல் சூழும்பார்
நின்னததன்கண் மலிந்து பிறங்கிய நிதியெல்லா
முன்னது வின்றுநீ கொள்ளுதி யென்றவ னுரைசெய்தான். (௯௩)

அவ்வுரை தன்னை யுணர்ந்துமறிந்தில னெனவேயவ்
வெவ்வழி னன்னெறி கொண்ட வருந்தவ னிடைவைகப்
பவ்வவருங்கடன் மண்டணி நின்றளி பகல்வேலான்
செவ்விய வன்னவன் முன்பினு மின்னுரை செய்வானால். (௯௪)

இன்றுகொடும்பவ வல்வினை யென்சொலை யேறாதே
யொன்றிய தென்னென வன்பு மிகுந்தன னுரைசெய்யத்
துன்றிய மின்னவி ருஞ்சடை கொண்டு துறந்தெல்லாம்
பின்றவ நல்விர தங்கொ டெழுந்தவர் பிழையில்லோய். (௯௫)

மன்னவர் தம்வினை கொண்டு மகிழ்ந்திடு வகைநன்றோ
வின்னமு துண்டவர் வெங்கடு வுண்பர்கொ லெனவேமுன்
றென்னமுகந்தனில் வெங்கதிர் கண்டெழு சீராளன்
சொன்னதுணர்ந்தெழின் மன்னவர் மன்னவன் சொல்வானால். ௯௬

சங்கென வெண்ணில வுந்தி யிலங்குப றவயோகி
ருங்குல தன்மமி தென்னிலெ மைந்தனை யுறநன்றாய்ச்
செங்கனி மென்றுவ ரென்ன விளங்குறு செவ்வாயை
யிங்குதிறந்துசொ னன்குமொழிந்திட விறைசெய்யா. (௯௭)

அப்புமலர்க்கண் விழித்திட வின்னுமதருள்செய்தே
யொப்பிலிவன்றனை யன்னை முலைப்பய முணவோங்கு
மிப்புளி நின்று மெடுத்தெமிடந்தனி லினிதீந்து
செப்பரு வாழ்வையளித்தரு ளென்றுரை செய்தானல். (௯௮)

திருமதுரகவிப் படலம் முற்றும்.

# பதின்மர் திருவரன்முறைப் படலம்

## வழிபடு தெய்வ வணக்கம்

ஆடரவத் தமளிதுயி லரங்கன்செய்ய வடிபரவக்
கூரேச னடையமேலை
வீடுமக்கின் றளித்தனமென் றரங்கன்சொல்ல
விபுதனென் சம்பந்தா சம்பந்திகட்குன்
காடிடக் தந்தருடியெனவுரைத்துக் கைக்கொ
ணன்மையிற் காடாயமுயர் கனிவீசெந்தை
சேடமுனி கழல்பணிந்து பதின்மர்தங்க
டிருவரன்முறைப் படலஞ் செப்புவாமால். (௧)

வேறு

இன்னணங் குரிசி லுரைசெவி யுணர்ந்தாங் கேதிலாத் தவமுனி [யுகந்து
தென்னனின் மகவென் றுள்ளினை யதுவோர் தேவரா சியமெனத் [திரண்ட
கன்னவிறிறற் றோட் காளைமன் மதுர கவியடி பணிந்ததை யருடி
யென்னலு முன்னுண் டறிந்தவை முழுது மியம்பின னெவர்களு [மறிய. (௨)

தாதனைந்தினவண் டுதேடைந்துளபத் தாரினன் கரைக்கள னூர்திப்
போதவற் கருநான் மறையன வடிவிற் போதமுற் றிடவருள் புனி [தன்
ஆதவனொளிகெட் டிரவுறப் பகலி லாழிகொண் டெறிதருகபடன்
வாதமுண் ணரவப் பணுடவி நடித்த மாயவன் பரவாசுதேவன். (௩)

செங்கதிர் மதிமின் மினியெனவொளிகொள் சேணுறு நித்தியரன்றிப்
பங்கய னரனிந் திரன்முத லறியாப் பதத்தவ னுள்மகிழ்ந்துலகோர்
நங்கழ னிலைபெற் றின்புற வவர்த நவைகொள்வெவ் வினைத்தொட
[ரகலச்
சங்கையி லவதாரங்கள்செய்துரைத்த சதுமறைவிதிவழியனைத்தும்.

கற்றிடற் குரிய ரெவர்க்குமுட் பொருள்கள் கசடற வெளிப்பட
[லரிதாய்
மற்றுளோ ருள்ளற் கறமில தாகி வழங்கலி லவரெவா றுய்வார்
இற்றைநாடொடங்கி யாவரு மஃதை யெளிதினி லறிவதற் கினிய
சொற்றருந் தமிழி லருமறைப் பொருளைச் சொற்றிடி லுய்வரென்
[றெண்ணி. (ரு)

பைத்தலை யரவுக் கரசனோ டினிய பரிகர மனைத்தையும் விளித்தங்
கத்திருவுலகின் முன்பிறு மமிச மவதரித் திடப்புரிந் தறநூன்
முத்தமிழதனிற் றெளிதரப் பொருளை மொழிந்துவெம் பிறமத
[நெறிகொள்
சித்தர்களெளிதிற் பரமிதென் றறியச் செய்திடச் செவ்வியிற்
[செய்மின். (சா)

என்றவர்க் குரைத்திவ் வுலகுயக் கருது மெம்பிரான் சரபசங்கார
வென்றிகொளுகிரி னரகரி யெனுமம் மேதகு விமலனுள் ளுகந்தே
இன்றுநீசெய்த தவத்தினு முன்னு ளெய்துமாதவத்தினு முனக்கு
மன்றலங் குழவி யெனப்புகழுடைபோய் மலடற வுதித்தன னென்
[றுன். (எ)

மாமுனியுரைத்த வுரைசெவி யுணரா வாம்பரி மன்னர்கோனயந்து
தேமலர்த்துள வினனருட் பெறுமச் சேடன்மற் றுளபரிகரங்க
டாமினிதுதித்த தெவ்விட மவர்கள் சாற்றிய நூல்கள்யா வெனவும்
நாமவேன் மன்னு நினக்கறி வுறயா னவில்குவ னெனநவில்குவனால்

## முதலாழ்வார்கள் (வேறு)

தண்டுழாய் மார்பன் பாஞ்ச சன்னியாழ் வானு மிந்தத்
தொண்டைமானிலப்பெண் கண்டந் துலங்குமங்கலமே யென்ன
வண்டமொடிலகு மிஞ்சி யத்திமா நாகந்தன்னுட்
கொண்டலார்கலியென் றுள்ளிக்குளிர்புனற்பருகும் பொய்கை.[அ]

தோடவிழ்ந் தொழுகு செந்தேன் றும்பிதங்கிளையோ டுண்டு
பாடொலி கறங்குஞ் செய்ய பங்கயமலரினுள்ளே
கேடிறுவாபராந்தங் கெழுமுசித்தார்த்திதன்னி
னுடுமைப்பசியிற்சுக்லபக்கமுநயந்தகாலை. [௰]

ஓணமோ டார ஊன்ற ளொன்றிய தினத்தி லாங்கு
மாணமர் குழவி யாயவ் வளநகர் வதிந்து நாம
நீணிலத்தவர்கள் பொய்கை யாரென நிகழ்த்த மேலோர்
பேணிய புவிகள் முற்றும் வலஞ்செய்வான் பெயர்ந்தா னன்றே

திண்டிறற் கதையு முன்னஞ் செப்பிய திருநா டுள்ளே
வெண்டிரைக் கரங்கண் முத்தம் வீசுமம் புதிக்கங் குற்ற
துண்ட வெண் பிறை யோனென்னச் சுதையவிர் மாட மல்லை
வண்டிமிர்ந் தடருத்யான வனத்துறு குருக் கத்திக்கண் [௰௨]

வாய்ந்த பொன் மலரிலந்த யுகமொடு வருட மாதத்
தேந்திடு புதனவிட்டத் திளமக வுருவாய் நாம
மாய்ந்த பேருலகர் பூதத் தய்யனென் றழைக்க முன்னீர்
தோய்ந்த மாநிலமன்னேனும் வலஞ்செய்வான் றொடங்கிச்சென்றான்

நாந்தக மதுமுன் சொன்ன நாட்டெறி கடற் கரைக்கண்
மாந்தளி ரனையமேனி மாதரார் மயிலை தன்னிற்
பாந்தளிற் பயிலு மாதி கேசவப் பெருமாள் கோயி
லேய்ந்தநீள் புனல்கொள் கூபத் திருந்தசெவ் வல்லிப்போதில் [௰௪]

முன்னிருவருக்கு மாங்கு மொழியுக வருட மாதம்
தன்னிலந் தசமி பொன்னாட் சதையம் வந்துதித்த நாம
மின்னிலத் தவர்கள் பேயரென்றிட முதிர்ந்த ஞான
மன்னியவாறு பூமி வலஞ்செய்வான் றொடங்கிச்சென்றான் [௰௫]

முனம்புவி வலஞ்செயச்சென் மூவரிற் பெரியோன் செய்யி
லனம்பயில் கோவ லூற்றோ ரம்மையார் மனைக்கண் சென்றித்
தினந்துயில் வுறவெற் கும்மி லிடமருள் செய்வீரென்ன
மனமகிழ்ந் தவளத் தொண்டன் மலரடி பரவிச் சொல்வாள் [௰௬]

அய்யவிக் குடிற்கு டிண்ணை யொருவருக் கணையா மற்று
மெய்யவரிருவராகில் வீற்றிருந் திடலா மூன்று
துய்யவராகின் மாயன் றொடர நிற்றிடலா மென்னப்
பொய்யிலாள் மனைக்கு ளன்பிற் புகுந்து கண்டுயிலுங் காலை [௰௭]

பூதமா முனிவ னின்னோன் போலவே வினவி வந்தம்
மேதகு விமலனோடு வீற்றிருந் தருளமற்றும்
கோதிலா னொருவ னன்னோன் போலமேய் வினவிக் கூட
வேதிலார் மூவராகி யிசைந்து நின்றிடுமவ்வேலை [யஅ]

நள்ளிருட் பிழம்பி னங்கு நனிபடர் தரவவ்வேலை
கள்ளிருந் தொழுக வண்டர் காமரு மிடையோ டுண்டு
கொள்ளரும் பார்ப்பு முண்ணக் கொடுத்துவாழ் துளவத் தெந்தை
யெள்ளலாரிடைக்க ணின்று நெருக்கிடவவருஞ் சொல்வார். [யக]

அய்ய மூவரின் முன்னோனங் கடைதரு மிருட்குலங்க
ணையவென் றூழியான்ற னளிரடிக் கமலப் போதில்
வையமோர் தகழி யாக வாரிதி நறுநெய் யாக
வெய்யவன் விளக்கதாக விருப்புட னேற்றினானல். [உய]

பின்பிரு வருக்குண் முன்னோன் பேரிருட் பிழம்புதுஞ்ச
வன்பொரு தகழி யாக வார்வமே நறுநெய் யாக
வின்புறு சிந்தை யங்கெய் யிடுதிரி யாகப் போத
நன்மணி விளக்கதாக நாரணன் கழலிற் சூட்ட. [உக]

துன்னியவிருள் கணீங்கித் துளவினன் கலுழன் மீதங்
கன்னவர்க்கெதிரில் காட்சி யளித்திட வவருட் பின்னோன்
மன்னிய திருவைக் கண்டேன் மாசில்பொன் மேனிகண்டேன்
பின்னுமைம் படைகைக் கண்டேன் பேரருட் கடலென்றோதி [உஉ]

மூவரொன் றாகி யார்க்கு முதல்வனை விதியீசற்குந்
தேவனைக் கமலவீட்டுச் செல்வி நாயகனை வாழ்த்தி
மேவுபு வணங்கி யன்னோன் விரிபுக ழுதனினெஞ்ச
வாவுற வேதாந்தார்த்தம் வண்டமிழ்த் தொடைசெய்தாரால். [உங]

அத்திரு நாட்டில் மாயன் றிருவாழி யாழ்வான் மெய்யர்
நித்தமைந் தழலை யோம்பு நீணகர் மழிசை தன்பாற்
பத்துடை யடியர் மேலாம் பார்க்கவ ரிடிதன்றேவி
மைத்தகோ திசுக வின்சொற் கனகாங்கி மணிவயிற்றில். [உச]

செப்புறு விபவாப்தத்துட் செயிரறு மகரசுக்லத்
தொப்பறுதசமி பொன்னாளுற்றிடு மகநாளெங்கு
மற்புத மெனவோர் பிண்ட மாயவதரிக்கநொந்தம்
மைப்படி குழலியோடவ் வரமுனி யதையெடுத்தே. [உரு]

வனத்துறு பிரப்புத் தூற்றில் வைத்தவ ரேகப் பின்பு
வனத்துளோர் தமைப்புரக்கு மலரவ ளருளினாலே
வனத்துறு புணரி சூழ்குவலயமா ததனைக் காக்க
வனப்புறு குழவி போல வடிவமைந் தழுமவ் வேல்வை [௨௬]

அந்தக ருறையு நெய்யா ராழியா னறிந்து சென்று
தன்னிரு கண்க ளாரத் தழீஇயரு ளமுத மூட்டி
மன்னுதன் வடிவு காட்டி மாயனுண் மகிழ்ந்து போய
பின்னரம் மகவு தாயைப் பிரிந்தகன் றனைய வேங்க [௨௭]

அற்றைநா ளரிதா சென்னு மருட்டிரு வாள னென்னும்
வெற்றிவேந் தொருவ னன்பின் மேவவவ் வனத்து முன்செய்
நற்றவ மதனாற் கண்ட னாகிளங் குழவி செங்கை
பற்றியுண் மகிழ்தன் றூரப் பங்கயச் செல்விக் கீந்தான் [௨௮]

கொந்தவி ழளக பாரக் குவிமுலை மடமா னேக்கி
வந்தியா கையிலன் போடு வாங்கியுள் ளுவகை பொங்கக்
கந்துக நகிலங் கொண்டு கான்முளை மலர் வாய் வைக்கச்
செந்தளிர் மேனி கொள்ளச் செல்வனும் பருகா துற்றான் [௨௯]

என்ன காரணமோ வென்றங் கிருவரும் வருந்தா நிற்க
மன்னுமவ் வூரினன்காந் வருணத்தோர் திருமா னேய
னுன்னியிப் புதுமை கேளா வுளங்கனிந் தினிய தீம்பால்
கன்னியங் குழவிக் கென்று காய்ச்சிவந் துதவ வுண்டான் [௩௰]

நாடொறு மன்பி னன்னே னல்கவுண் டிடுமோர் நாளிற்
கோடிலா னுளமீ தென்றட் குறித்ததி லிறையுட் கொண்டிச்
சேடமுண் டிடினிற் கொன்போற் சிறுவனுண் டாகு மென்ன
நீடிய களிகூர்ந் துண்டங் நேயனுங் குழவி யீன்றான் [௩௧]

மண்ணுளோர் புகழப் பன்னீ ராண்டவண் வதிந்து வெவ்வே
றெண்ணமுற் றிதர மாய சமயம தியல்பு நோக்க
நண்ணியங் குளதே வெல்லா நலிதர வறிதல் காணப்
பண்ணவ னுழி யானே பரமென வுறுதி கொண்டே [௩௨]

மருமலர் நறவ மாந்தி வண்டிமிர்ந் தடருஞ் சோலைத்
திருவலிக் கேணி தன்னிற் சென்றமெய்ப் பொறி யடக்கிக்
குருமணி வண்ண னுன்னிக் கொடுந்தவ முஞற்று நாளி
லெருதுவெந் கொடிமுகக் கண்ணு னெய்தின னுமையோடன்றே

வெறுமையா லறுவை கீறி வேளை போக்கிடப் பொருத்து
மறிஞரை யுமைகாண் குற்றிவ் வறியனுக் கருள்வா யின்று
தறுகண்வெங் கயத்தோ லன்பா சார்ந்தென மறுக்கத் தாழ
மறுவிலான் முனவன் நண்ண மதித்திடா திருந்துந் தேறுன் [௫௪]

மாசிலாய் நினது ளென்சொல் வழங்குவ னெனவீ டென்ன
வாசிலா ததற்கு நாமோ ரதிகாரி யில்லை யென்னத்
தேசிக னகைத்தாங் கேளின் சீர்மை யிக்கலை பொருத்து
மூசிபோம்வழி நூலேனு மூடன் செலற் குதவா யென்ன [௫௫]

முக்கணன் பரிகசித்தா னிவனென முனிந்து வெய்ய
வக்கினிக் கணைவிழிப்ப வவன்றவத் தழலையேவ
விக்கினோங் குயரேழ் மால்பெய் வித்தும தவியா தெண்ணி
நக்கனும் பக்தி சார நாமமிட் டேகினனல் [௫௬]

இத்தகை மழிசை வேந்த னிணைமரு திறுத்த வேந்தே
மத்தளை தயிர்பா லுண்ட மாயனே பரனென்றோதுந்
தத்துவப் பொருளு மாறு சாத்திரப் பொருளு மோர்ந்து
முத்தமிழதனில் யாரு மொழிதரப் புகன்றான் மாதோ [௫௭]

காரமர் மேனி நங்கள் கண்ணனின் கவுத்துவாம்சத்
தார்கலி பரசு ராம னணையி லொதுக்கித் தந்த
கேரள நாட்டு மாதர் கிளரொளி வதனநோக்கி
மாரவேண் மயல்கொள் வஞ்சிக் களநக ரரசுகந்து. [௫௮]

அகனில முழுதுமோச்சு மரசனுங் கொருவன்பால
வுகமுறு பராபவத்து ளோங்கிய மாசிச்சுக்லத்
திகல்கெடு தசமி பொன்னு ளெய்திய புனர்பூசத்திற்
பகலவ னெளியே யன்ன பைங்கதிர்க் குழவியானான். [௫௯]

சேரனுக் கிளவலாகச் செனித்துவெண் டிருமண்காப்பு
நேர்கொள்வைணவர்க ளோடு நித்தலும் ராமகாதை
யோருநாட் கரனேடெந்தை யொருவனுய்ப் பொருதுங் காதை
போரவு மொழியக் கேட்டுப் பொருதுவன்கரனேடென்றே. [௬௰]

வழிகொடு நடந்த போத மைச்சரான் மறைவலார்கள்
பழிபடு கரன்மற் றுள்ள பரிகர மழிந்தாரென்று
மொழிதரு காதை சொல்ல முழக்குபேரிகையை யென்று
கழுகுலா யயிற்கை வேந்தன் களிப்புடனிருந்தானம்மா. [௬௧]

இன்னவா றியைந்த வாய்மை யேதிலா வுழையரோர்ந்து
மன்னனுக் கிவ்வா றோதும் வைணவர் நீக்கவென்று
ளுள்ளியவ் வினன்செய் பூசைக் குரியதென் னரங்கன்சாத்தும்
பொன்னணி யாரந் தாமே கவர்ந்துபின் புகலலுற்றார். [௪௨]

கடகரி மருப்பொசித்த கண்ணன் முத்தாரந் தன்னை
மடமிலா விபுதராயின் வைணவர் கவர்ந்தா ரென்ன
வடலரசவர்கள் செய்யா ரென்றுரை யாடிப்பாந்தட்
குடமதுட் கையிட் டன்னோர்க் குறுதியே கூறினால். [௪௩]

இனையன விழைத்தபேர்க ளுமைழயரென் றினனுளெண்ணி
வனமணி மார்ப னெந்தை மாமதி லரங்க மேவித்
தனைக்குல சேகராழ்வா ரென்றுபேர் சாற்றப் பெற்று
முனமுள ராம காதை மொழிந்தனன் றமிழி லன்றே. [௪௪]

கள்ளவி ழளகபாரக் கடைசியர் களைகொய் வேலை
பள்ளநீர்ப் பழன முற்றும் பங்கயங் குமுத நீலத்
தொள்ளிய வுருவிற் காட்ட வோதையிட் டலமார்ந் தெங்குங்
கொள்ளைவண் டுளமயங்குங் கோமகன் வழுதி நாட்டில். [௪௫]

அல்லியங் கோதை மாத ரகனிலா மணிமாடஞ்சேர்
வில்லிபுத்தூரின் மெய்ய விப்பிரர் குலத்து முன்னஞ்
சொல்லுநற் குரோதனத்திற் றோன்றியமிதுனசுக்லச்
செல்வநற் பலகோ ளேகாதெசிகொள் ஞாயிறுநன்னாளில். [௪௬]

சோதிநாட் கருடன் சேயாய்த் தோன்றியப் பருவஞ் சென்று
நீதிநூ லனைத்து மோர்ந்து நிமல ரநந்தனுன
வாதிமா லடியர் தம்பா லன்புபூண் டவன்பதத்திற்
போதுநந்தவனம் வைத்துப பூந்தொடை யளித்துவந்தான். [௪௭]

ஆவலிற் றுளபமற்று மமுதுகு மலர்கள் கொய்து
மாவல மார்பன் செய்ய மலரடி சூட்டுநாளிற்
சீவல தேவனென்னுந் தென்னர்கோன் பரமதாய
தேவினைத் தெரிவா னுள்ளந் திகைத்திருங் கவலைபூண்டே. [௪௮]

கல்வியின் முதிர்ந்து ஞானக் கடலெனக் கருணைபூத்த
செல்வநம் பியினைக்கூவித் தேவினுட்பரமீதென்று
சொல்வதற் குலகுளோரிற் றுளக்கறு மறைமற் றுள்ள
பல்வகை நூல்களாய்ந்த பாவலர்த் தேர்மினென்றான். [௪௯]

இன்னிலத் தியாவரேனு மிணையிலாப் பரமீதென்று
நன்னெறி மநுநூன் மற்று நான்மறை யெவையாலேனு
மன்னிடப் பிரதிபாதிக்க வல்லரே லளவிலிந்தப்
பொன்னூறு கிழியறுத்துப் போவரென் றறிவித்தானால். [௫௰]

கற்றறிவாளர் பல்லோர் கசடற வறிந்தீதென்று
சொற்றிடற் கரியதாகச் சோர்வுறப் புதுவை வாழு
மற்றுறந் திடவென் றோட்டும் வடபெருங் கோயிலுள்ளா
னற்றைநா டொடையல் சூட்டவ் வன்பனின் கனவிற் சொல்வான்

வார்ந்தவேல் வழுதி கூடன் மன்னர்கோன் பரமீதென்று
தேர்ந்திட வறிவிப் போரிக் கிழியறச் செய்வாரென்று
நேர்ந்தவ னாற்றி னனந் நிருபன தவைக்க ணீயுஞ்
சார்ந்திதென் றறிவித்துப்பொன் றனையறுத் திவணேகென்றான்.

கொழுஞ்சுட ரனைய நேமிக் கோவல னுரைப்பவன்றோன்
அழுங்கியு னடியிலன்பி னாய்மலர்த் தொடையல் சூட்டுந்
தொழும்பல தறியா யான்மெய்ச் சொரூபமீ தென்பான் கொட்டுத்
தழும்பினைக் காட்டி வீட்டத் தக்கதோ கிழியை யென்றான். [௫௩]

மெய்யநின் கவலை மாற்றி வேந்தன தவைக்கண்வாதஞ்
செய்யுநா ளெழுந்து யானுன் சிந்தைவந் திருப்ப னஞ்ச
லய்யவென் றிடவவ் வன்ப னரசர்கோ னவைக்கண்சென்று
பையராத் துயிலு மாலே பரமென வறிவித்தானால். [௫௪]

கொய்யுளைப் பரிவேந் தன்றோன் கூறிய தோர்ந்து பின்னுங்
கையிலங் காழி மாலே பரமெனக் கழறும் வாய்மை
மெய்யெனில் கிழியறுந்து விழுமெனச் சமயமெல்லா
நையவீழ்ந் ததுவெல்லோர்க்கு நாரணன் பரமனென்ன. [௫௫]

மீனகேதனனுகந்தவ் விபுதனைக் களிற்றி லேற்றித்
தானைபின் றொடர வீதி தனைவலம் வருங்காலத்தில்
வானினன் முகன்வேய் முத்தன் வார்தொழக் கலுழன்மீது
தேனிறை துளவத் தெந்தை சேவைதந் தருளக்கண்டே. [௫௬]

கூடினன் களிதுலங்கக் குணமிகு பரமன் றனைச்
சூடினன் றதிபல்காலுஞ் சொல்லினன் றுளங்கி நெஞ்சம்
வாடின னிவர்கண் ணூறு வருமெனத் திருப்பல்லாண்டு
பாடின னெவர்க்கு நீயே பரமெனத் தொழுதான்மாதோ. [௫௭]

பொன்னவள் கொழுநன் வாழ்த்திப் போனபின் புனிதனுகும்
பின்னமி லிவர்க்குப் பட்டர் பிரானென நாமஞ் சாத்திக்
கன்னவி றிரடோட் காளை கனிந்திவர்க் கடிமையாக
மன்னுமிவ் வுலகிற் பாக வதமியற் றமிழ்செய்தானல். [௫௮]

இனையவன் புதுவை சென்றுங் கெந்தைபான் முன்னினந்தா
வனமதுபுரந்து செய்ய மலரளித் திடுமோர்நாளிற்
கனவண னருளா னீளை கடிவனத் துளவத்தூ ற்றிற்
சினமக ளுருவதாகத் திருவின்வந் தவதரித்தாள். [௫௯]

மண்டமர் கடந்த வாழி வடபெருங் கோவிலார்க்குத்
தண்டுளை வெடுக்குங் காலத் தளிர்நிறக் குழவிதன்னைக்
கண்டட னெடுத்து வந்து கனிவுடன் வளர்க்க வன்னுள்
கொண்டலிற் சுருளுங் குஞ்சிக் குழவிபோய்ப் பருவமுற்றுன். ௬௰

ஓடரித் தடங்கணுளவ் வொளிமணி வண்ணற் கன்றேன்
றேடவிழ் மலர்கள் கொய்து தொடுத்துவைத் தயல்போங் காலை
நாடியுள் ளுகந்து நீண்ட நள்ளிரு ளளகந்தன்னிற்
சூடிநீர்க் கிணற்றிற் பார்த்துச் சுற்றிவைத் திடுமோர்நாளில். [௬௧]

தார்வட பத்திரற்குச் சாத்தவன் றேனெடுக்க
வார்குழலிருப்ப நோக்கி மதிமலைந் துழன்று கெட்டுச்
சீர்கெழிம் மடமான் செய்த செய்கையென் றறிந்துமற்று
மேர்கொடேமலர்கொய் தெந்தை யிணையடி புனைந்தான் மன்னே.

அம்மல ரணிந்த மாலவ் வடியனின் கனவிற் சென்றப்
பொம்மல்வெம் முலையாள் சூடும் போதுகந் தளித்திடாதிச்
செம்மல ரளித்த தெற்குத் திருவுள மிலையென்றேக
விம்மறை யோனு மன்னு ளிந்திரை யாமென்றெண்ணி. [௬௩]

படத்தர வணையானுள்ளப் படிமல ரளித்துச் சூடிக்
கொடுத்தவ ளென்று நாமங் கொழுங்கயற் கண்ணிக்கீந்தான்
மடக்கொடி யுகந்து பொன்னி யரங்கனை மணந்து முன்னீ
ரிடத்துப நிடதார்த்தத்தை யிசைத்தன டமிழிலன்றே. [௬௪]

கடிகொள்சந்தகிலுருட்டுங் காவிரி நதிநீர் சூழத்
தொடுநிரை விளைவாஞ் சாலிச் சோழநாடதனுள் மண்டங்
குடிநக ருறையும் விப்ர குலத்திலோர் வனமாலாஞ்சத்
தடியர்பாற் கலியுகத்தி லழகிய தனுமாதத்தில் [௬௫]

கேட்டைநாளவதரித்துக் கிளரொளி மகவாய் ஞான
நாட்டமார் விப்ரநாரா யணனென நாமம்பெற்று
வாட்டமின் மறைகண் மற்றை மனுமுத னூல்க ளோர்ந்து
கோட்டமின் மனத்தா னென்று கூறிட வதியுமெல்லை. [கூகூ]

மஞ்சுயர் மாட நீண்ட மாமதி லரங்கஞ் சென்றே
ரஞ்சன வண்ணன் செம்பொ னடியிணை வணங்க மாயோன்
கஞ்சநீண் மலரரிக்கட் கடையரு ளளித்தன் னேன்ற
னெஞ்சினைக் கவர்ந்து தன்பா னேயவா னாக்கினானால். [கூஎ]

அற்றைநாண் முதலன்னோனெம் மரங்கனே யரணென்றுள்ளிற்
பற்றிமா மலர்கொணர்ந்தா வனமது பரிவாய் வைத்து
நற்றொடை யளித்துச் செல்லு நாளொரு தினத்திலந்நா
டுற்றிடு திருக்கரம்ப னூரில்வாழ் கணிகைமாதுள். [கூஅ]

காவிவென் றகன்று நீண்ட கயற்கணந் துவர்வாய்த்தேவ
தேவகி யெனும்பேர் கொள்ளுந் தெரிவையு மிருளைமாரு
மாவலி னிசுளை யென்றோ ரணிநகர்க் கரசன்பாற்சென்
றேவல்கள் புரிந்து தன்பொ னெழினகர்க் கெய்துமாறில். [கூகூ]

இவ்வெழில் வனங்கண் டுட்சென் றெய்திரு வளநோக் குங்கா
னவ்விகொ ணயநி விப்ர நாரணன் றன்னைக் காணச்
செவ்வியோ னிவனை யோர்கண் டிரும்பியும் பாராநிற்க
வவ்வணி மாதுக் குற்ற பின்னவ ளறைகின்றாளால். [எ0]

மைப்படு குழலி யிந்த வையகத் தெவரையும்யான்
கைப்படுத் துவனென் றென்பாற் கழறினை யலவோவிந்தத்
துப்பனை வசஞ்செயின்னீ தொழில்வல வேசி யென்ன
வெப்படி யேனு நங்கா யிவனையென் வசப்படுப்பேன். [எக]

சூளென வுரைக்க மற்றோர் தொன்னக ரடைய வீண்டு
வாளரி மதர்க்கட் டேவ தேவகி வஞ்சமுற்று
நீளலர் வனத்துக் கன்னோன் பரிவுட னீரிறைக்கும்
வேளைபார்த் திவளங் குற்றம் மடையினை விலக்கிவந்தாள். [எஉ]

இன்னணஞ் சிலநாட் சென்றவ் வேதிலா னீயாரென்ன
நன்னய நிதிவெறுத்து நாயினேன் பரனைக் காண்பா
னுன்னடி பணிந்து சந்ம முய்ந்திட வந்தேனென்ன
வன்னவ னிசமென் றுள்ளி யவ்வனம் பயிலுங்காலை. [எங]

வருடமோ ரிரவிற் பெய்ய மறைவலான் சிறுகுடிற்கு
ளிருடிபோல் வேடங்கொண்ட விவளையாங் கழைக்க வந்தெ
னருடரும் தவனே நின்றன டியினை வருடல் செய்வேன்
முருடனே னெனநயந்து முனிவனை வசஞ்செய்தாளால். [எச]

அன்றுதொட் டவளை யின்னே னிறையள வகலானாகிப்
பின்றொடர்ந் தேக வன்னாள் பின்னவள் வியந்த பின்னர்ப்
பொன்தரத் தரமிலாய்நீ போவெனப் புகல மின்னாண்
முன்றில்வந் தணுகி யென்னே முடங்கிநெஞ் சுருகுங் காலை. [எரு]

வாவிசூழரங்கன் றன்பொன் வட்டிலை யெடுத்தன்னோனை
லேவிய தூதன் போல வெய்திய ஃவசி தன்முன்
மேவிவட் டிலையுன் விப்ர நாரணன் கொடுத்துவிட்டா
னாவியி னவனைக்கூவி யணைகெனக் கொடுத்தகன்றான். [எசு]

அன்னவன் கொடுத்தகன்ற வனந்தர மவனைக் கூவிப்
பின்னமி லணைந்து மற்றும் பிற்றைநாள் வெறுக்க வாங்கு
பொன்னரங் கேசன் கோயிற் பொலன்கொள் வட்டிலைக் காணாதீ
தென்ன காரணமென்றேங்கி யிறைவனுக் கறிவித் தாரால். [எஎ]

செம்பியன் சினத்தக் கோயிற் சேவக ரனைவோர்க்கூவி
யெம்பிரான் வட்டிறன்னைக் கவர்ந்த தாரியம்பீ ரென்று
வெம்பிட வருத்துங்காலவ் வேசையின் றாதி சென்றெம்
வம்பவிழுளக்த்தேவதேவகி மடமான் கண்ணே. [எஅ]

அடுத்தவ னொருவன் விப்ர நாரண னவன்றன் றாதாய்
விடுத்தவ னொருவ னோர்பொன் மேயவட்டிலைக்கைக் கொண்டு
கொடுத்தன னதுவோ வென்று கூறுமுன் படைதிரண்டவ்
வடுக்கணி மனைசோதித்தவ் வட்டிலை யெடுத்தாங் கெய்தும். [எகூ]

துப்பனை யழைத்து நின்றன் றாதனார் கவர்ந்த தென்னீ
செப்புவா யெனவுமன்னோன் செப்பலென் றாதுமில்லை
யிப்பொன் வட்டிலையும் யானிங் கெடுத்தி லெனவேந்துள்ளம்
வெப்பியன் னோனைக் காவற் படுத்திடவிளம்பிச் சென்றான். [அ0]

பொன்னிசூழரங்கனிந்தப் புனிதனென் றறியான் யானே
யன்னவ ளிடத்திற் சென்றிவ் வட்டில யளித்தன்னோன்ற
னன்னயத் தூதனென்று நவின்றன னென்று வைவேன்
மன்னவ னருகிற் சென்று கனவுரை வழங்கினனல். [அக]

கேட்டமன் னவனுமென்ன கேடிழைத் தனமென் றுள்ளம்
வாட்டமுற் றவனெழுந்தம் மறைவலான் சிறையை நீக்கிக்
கோட்டமின் மனத்தினேயென் கொடும்பிழை பொறுத்தி யென்று
தாட்டுணை தழுவ வன்னோன் றன்பிழை குறித்தயர்ந்தே. [௮௨]

முன்னினந் தவனம்வைத்தம் மூகிழ்மலர்த் தொடையல் சூட்டித்
தென்னரங் கேசன் மெய்ய திருவடித் தொழும்பணுகி
யன்னவ னடியவர்க்கு மடியர்காற் றுகணுமங்கொண்
டின்னியல் வேதாந்தார்த்த மிசைத்தனன் றமிழிலன்றே. [௮௩]

ஓதமா னீர்கொள் பொன்னி யுலவுதண் சோழநாட்டின்
மாதவர் வேள்வி நாளும் வளர்த்திடு முறந்தை தன்னிற்
சீதவா ரங்கொழிக்குஞ் செய்யுறு கதிரினுள்ளே
கோதறு கலியுகத்திற் கூறுதுன் மதியப்தத்தில். [௮௪]

விருச்சிகமதியிற் புந்திவிமாகநாள் ஸ்ரீவத்ஸாஞ்சத்
துருக்கிளர் மதலை யாயங்குதித்தழ வுழவன் காணுத்
தருக்குடனெடுத்தச்சேயைத் தன்மனை வளர்க்கச்சேயுந்
தெருட்சியின்முதிர்ந்தஞானச் சிந்தையாய்வளர்ந்துபின்னர். [௮௫]

நித்தலு மரங்கத்துற்றுத் திருமுகத்துறைக்கு நேர்நின்
றத்தனை மனத்துட் கொண்டங் கவன்குணம் பலவும் சொல்லிப்
பித்தரிற் கடையனேனென் பிறப்பறுத் தருள்வா யென்று
புத்தல ரடிவணங்கிப் போருநா ளொருநாளாங்கே. [௮௬]

போதுலாம் பொதும்பர் சூழும் பொன்னரங் கேசனைக்
கோதிலாற் கருள்வானெண்ணிக் குணமிகு முனிவனுக்கும்
வேதசாரங்கன் றண்டான் மேவுபு கனவி னீங்ஞ்
சீதவார் புனலலைக்குந் திருமுகத் துறைக்கண் சென்று [௮௭]

அங்கிருந் தொருவனம்பா லன்பினின் றகலா னாகிச்
செங்கர முடிமேல் வைத்தித் திசைதொழு திறைஞ்சி நிற்கும்
புங்கவன் றனைநின்றோளிற் பொலியவைத் திவண்வாவென்று
வங்கமா கடல்கடைந்த மாயவனருளிச் சென்றான். [௮௮]

அவ்வுரை முனிவன் கேளா வன்புடனெழுந்தாங்குற்ற
செவ்வியோன் றனையழைப்பச் சிறியனான் புலையனையா
எவ்வண மெழுவேனென்ன விசைத்தனன் றிருத்தோளேற்றிப்
பவ்வநீ ரணைபடுத்த பாழியான் றிருமுன் புய்த்தான். [௮௯]

வண்டின முரலுந்தாம வனமணி மார்பன் றன்னைக்
கண்டுள நிறையாநந்த நீரிரு கண்ணுங் காட்ட
வண்டர்நாயகனை வாழ்த்தி யவனரு ளமுத மாந்திப்
பண்டுபோம் பொருள்கிடைத்த படியுள மகிழ்ந்தானன்றே. [௬௰]

மாடமாளிகையரங்க மறைவலாரிவனை வாழ்த்திக்
கோடுடைப்பரனுக்குற்ற குணங்களி லீடுபட்டுப்
பாடலி லுனக்கு நாமம் பாண்பெரு மாளென் றோத
வீடிலான் வேதாந்தார்த்த மிசைத்தனன் றமிழிலன்றே. [௬௧]

கொல்லுலைப் படுவே லங்கைக் கோமகன் வதிசோணாட்டுட்
சில்லரிச் சிலம்பு மாதர் செறிதரு குறையலூரி
லல்லிநற் கமலக்கண்ண னழகிய தனுவஞ்சத்தின்
மல்லலங் கலியுகத்தில் வருநள வருடமன்னோ. [௬௨]

பொங்குகார்த்திகை யுவாவிற் பொன்னெரிநாளினல்ல
மங்கல யோக நான்காம் வருணம துதித்து நாம்ம்
நங்குல நீல னென்று நவின்றிட வளவன் றன்னாற்
சங்கையி னிதிபடைத்தோர் தரணியும் புரந்து வந்தான். [௬௩]

ஆவியி லுலக மோம்பு மவன்றிரு நகரி லுள்ளோர்
வாவியி லரம்பை மாதர் வைகலு மாட வோர்நாட்
கூவிளங் கனிமென் கொங்கைக் கொடியிடைக் கமல மாது
மேவியிப் புவிமானென்ன வியந்து நீராடி னளால். [௬௪]

அன்னவ ளடைதலோடு மரம்பைய ரகலக் கண்டார்
பொன்னவ டனிக்க வாங்கோர் புனிதன்வந் திவளை நோக்கா
நின்னிட மெவணின் பேரென் னிற்றலென் றனித்திங் கென்னக்
கன்னலிற் கனிந்த தீஞ்சொற் கன்னியுங் கழறு வாளால். [௬௫]

நாகமங்கையரோ டிங்கு நணுகின னெனையன்னோர்விட்
டேகின ரினியுன் பண்டி யெய்திய மகள்யா னென்னக்
கேகையச் சாயன் மாதைக் கிழத்திபா லளித்து நாளும்
பாகமா ரமுத மூட்டிப் பரிவுடன் வளர்க்குங் காலை. [௬௬]

நீலனவ் வநகன்பாலோர் நேரிழை யியைந்து வாழுஞ்
சீலம தறிந்தனளைத் திருமணஞ் செய்ய வென்று
கோலியாங் கணுகிச் செம்பொன் குறைவறக் கொடுக்கவன்னோன்
னேல்வார் குழலி யுள்ள மென்றவ னியம்பப்பின்னர். [௬௭]

குருகுலாமயிற்கைவேந்தன் கோகில மொழியைக்கேட்கத்
திருவிலச்சினையுண்டாகிற் செய்வனென் றுரைப்பச்சென்று
மருமலர்ப்பொதும்பர்சூழு மாமதினறையூர்நம்பி
யருளினன்றிருமுன்பெற்றீண்டடைதலுமவள்பின் சொல்வாள்.

வான்றொடை புனைநாட் டொட்டோர் வருடமதளவுமெற்கோர்
நோன்பது வைணவர்க்கு னூறுபேரழைத்துநித்தம்
பான்மிசை கருணை மற்றும் பலமளித் தவருண்பிக்கி
லுனை மணப்பே னென்ன நன்றென மணஞ்செய்தானால். [௯௯]

மன்றலா னதுதொட் டன்னோன் வைணவர்க்களித்துக்காணக்
குன்றிய நிதியோ னாயுட் குழைவது வளவன் கேட்டு
யின்றுநந் நிலுவை வாங்கி யேகுமென் றுரைக்கத்தூதர்
சென்றிட முனிந்தி லென்னச் செம்பியன் சிறையிலிட்டான். [௱]

வெம்பிய சிறையி லன்னோன் வெதும்பநும் வேந்திறைக்கும்
வம்பவிழ் கமலத்தொங்கல் வைணவர் வேழ்விக்கும்யான்
அம்பொன தளிப்பே னென்றங் கத்திமாநாகத் தெம்மா
னெம்பதிக் கேகென் றன்னோற் கியம்பினன் கனவிலன்றே. [௱௧]

அக்கன வறியா நீல னத்திமா நாகம் வந்து
மிக்கநும் பகுதி கோடி வேந்தென விசைந்தவ் வூருட்
புக்கநன் னிதிகாணாது புலர்ந்திடக் கனவில் வந்து
சக்கரத் தெந்தை காட்டுந்தனத்தவர்க் குளதளித்தான். [௱௨]

மற்றநன்னிதியு முன்போல் வைணவர்க்களிக்கக்காண
துற்றிட வழிப்பறிசெய் துதவவவ் வேள்விக்கோர்நாள்
சொற்றெரி விழிதுயின்ற றாயவன் றிருவினோடு
விற்றிரட் பணிபூண் டாற்றின் மேவினன் கிழவோரன்ன. [௱௩]

அன்னவ ரடைய நீல னகமகிழ்ந் தணுகி வல்லை
பொன்னணி பறித்தன் னோர்தம் பொற்கலை விரித்து வைத்து
பன்னக நடித்த பொற்றாட் பவளமெல் விரலின் மிஞ்சி
தன்னைவெள் ளெயிற்றால் வாங்கித் தானைவைத் தெடுக்குங்காலை.

அந்தர மசைபட்டாலு மசைபடா விதனை யோர்ந்து
கந்துகக் களிறு போல்வான் காய்சினத் தவனை நோக்கி
மந்திர முணர்ந்தாய் கொல்லோ மறைவலா வதையான் றேறத்
தந்திடில் விடுவனென்னச் சக்கரத் தெந்தை சொல்லும். [௱௫]

வழிப்பறிக் கபடர் மேலாம் வள்ளலிம் மந்திரந்தான்
விழுமிய ததினாலிந்த மென்மலர் வாவியுண்ணீ
முழுகிநாமமு மணிந்துண் மொய்த்தவன் பகலத் தென்னை
தொழுதுபின் வினவிற் சொல்வன் றாய வென்னலு மிசைந்தான்.

மாதவ னடியை வாழ்த்தி வலச்செவி கொடுக்க வன்னோன்
கோத றட்டாக்கரத்தைக் கூறவு மிருளகன்று
போதமுற் றெனையிவ் வாறிற் போக்குனதடிக்காட்செய்த
காதனை கண்டுகொண்டே னாரண னாமமென்றே. [௱௭]

சூடினான் மடிமாங்காயிட் டடியனை வழித்தொண் டாக்குங்
கோடுளாய் மாதரார்தங் கூர்விழி வலையிற் பட்டு
வாடினேன் வாடி யென்றும் வருந்தினேனெனப் பாமாலை
பாடினான் பரமீதென்று பாருளோர் தெளிய மாதோ. [௱௮]

பொன்வரைக் குடுமி மீதூர் புயலெனக் கலுழன்மீது
கன்னியந் துளவினானுங் காட்சிதந் தருளிப் பின்னர்
மன்னுநங் கலிய னென்று நாமமும்வழங்கிச் செல்ல
வின்னவ னுகந்தம் மாயன் பதிதொறு மிறைஞ்ச வென்றே. [௱௯]

நாடிப்பல் பதிகஞ் சொல்லி நாற்கவிப் புலவனென்று
நீடிய விருது பெற்று நிகழுறும்பொழுது கொன்றை
சூடியின் கழல்சம்பந்த தூதனுங் கொருவன் செல்லா
ஏடவிவம் மிறைபோலிந்த விருதுனக் கிசையாதென்ன. [௱௰]

கலியனீ தறிந்திவ் வண்ணம் விருதுகொள் கவியின் மிக்க
வலியன தவைக்கண் சென்றியாம் வாதமேபுரிவ மென்று
சொலிவரு மிவனை யன்னோன் றாயனென் றறியானாகி
வெலுவமென் றெண்ணிநீயோர் குறளினை விளம்பென்றானால். ௱௰௧

இந்தவா றுரைப்ப நெஞ்சத் தேதிலாக் கலியனோர்ந்தே
யந்தமா நகர்க்குள் வைகும் வைணவத் தம்மையாரை
யெந்தமக் குமது பூசை யெம்பிரான் றனைநீர்சற்றே
தந்திடு மெனக்கைக் கொண்டச் சார்ங்கனை யெதிரில் வைத்தே.

ஒருகுற ளென்றெடுத்துப் பதிகமொன் றுரைத்துத் தான்கொள்
விருதுக ளனைத்துங் கூறி வென்றபி னிவனை யன்னோன்
திருவடி வணங்கி நாயேன் செய்பிழை பொறுத்தி யென்று
பருதிமுன் சசியினின்று பரகால னென்று போனான். [௱௰௩]

நாரணன் பதிகடோறு நாடியன் னவனும் வாழ்த்தி
யாரணப் பொருளீ தென்றுள் ளறிந்துபற் பதிகமாக
பாரணு முயிர்கள் செய்யபழவினை யறுத்துய்தற்குக்
காரணமாகச்செய்தான்கலியனுந் தமிழின்மன்னே. [௱௰௪]

## திருப்புளியாழ்வார் (வேறு)

நன்னய துவாபர சயத்தினலி வில்லா
மன்னு மிதுநத்தில்வரு மாசிறிரு மூலம்
பன்னக வரோதய னுகந்துபனி மாலூ
ரின்னறுமலர்ப்புளியுருக்கொடிவனுற்றான். [௱௰௫]

இங்ஙன முரைத்திடுப்ர பந்நர்களிவர்க்கே
யங்கமென வுற்றிடுவ ரண்ணலினிநீயிப்
புங்கவனை நம்புதல்வ னென்று புகலாது
வங்கமவி பவ்வமதி மாயனென வெண்ணீ. [௱௰௬]

கற்றின மறித்ததோர் கழைத்தலை யிடத்தும்
புற்றரவ மீதும்விழி போதவள ரெந்தை
சிற்றருவினேரிலிவன் சென்றுத னடிக்காட்
பற்றியநின் பேரினுயர் பாரிலெவ ருள்ளார். [௱௰௭]

வாரிச நிகேதனன் மலைத்தெரிவை பாகன்
ஈரிரு மறைக்குவடு மின்னு மறியாத
சூரிகள் பராவுமிவன் றொண்டு புரிகின்ற
வாரிய நினைதுபுக ழாருரை செய்கிற்பார். [௱௰௮]

வெஞ்சமர் கடந்தவிறல் வேந்தென விளம்ப
நெஞ்சிரு ளகன்றுவகை நீள்கடலழுந்தா
வெஞ்சலிலிவன்பர னெனும்வகை தெரிந்தே
வஞ்சலிபுரிந்திறைவ னம்முனி பணிந்தான். [௱௰௯]

இத்தகைமை யுற்றபுக ழெய்துமுதிர் ஞானத்
தத்துவ முனிப்பர னடித்துணை யிறைஞ்சா
நத்தியுல காயசட நாசனென நாமம்
முத்திதருகானரு முதற்கினிதளித்தே. [௱௨௰]

எம்பிறவி வெவ்வலை யிறக்கருணை கூரும்
நம்பியருள் செய்த மொழி நாயினன் மறந்தேன்

வம்புலவு பைந்துளவ மாலையணி மார்பா
கொம்புலவு திந்திரிணி கொண்ட சடகோபா. [௩௨௧]

கண்ணநினை யிவ்வுலகர் காள்முளையினெஞ்சத்
தெண்ணியடியன்பிழை யிழைத்தது பொறுத்தி
விண்ணவிர் திருப்புளி வியந்த பெருமானே
தண்ணளி யெனுங்கட றதும்புசடகோபா [௩௨௨]

என்றுபல வாறுள மியைந்து பணிமாறி
நன்றுபுரி யாதுபவ நாடி நனிசெய்யுந்
தன்றனைய னுயவன் சனித்தவரு ளோரா
நின்றுபு திகைத்துபு நினைந்துபு மகிழ்ந்தே. [௩௨௩]

என்னையுல கோர்பொரு ளெனத்திரு வுளத்தி
லுன்னியருள் வான்வயி றுதித்த பெருமானு
நின்னைமக வென்றபிழை நீபொறு வெனத்தார்
மன்னவ னிரந்துபு மலர்க்கழல் பணிந்தான் [௩௨௪]

அன்னவ னிறைஞ்சலு மருட்கொடளி சூழாத்
தென்னவெனு மாலையன்முன் செய்யு மவதாரந்
தன்னைமுழு தும்மவன் றனதுளம் வியப்பப்
பின்னமி லளித்தனன் பிறப்பினை யறுப்பான். [௩௨௫]

தாறுகொள் மதக்கரி தடிந்தவிறை தந்த
வீறிலவ தாரமதி லின்புற வுளங்கண்
மாறில்வகை பற்றவுடன் வாய்புகழ வென்போற்
பேறுறுவ ரார்கொலென வேபெரி துவந்தான். [௩௨௬]

இன்னண நவின்றுவல மெய்தியிம மால்கொண்
மின்னெனு நுடங்கிடை விழிக்கரு விளைப்பூ
கன்னியுட னப்பரன் கழற்றுணை பணிந்தே
நன்னக ரடைந்துநித நாடுவர்தொழற்கே. [௩௨௭]

பதின்மர் திரு வரன்முறைப் படல முற்றும்.

# நூற்றெட்டுத் திருப்பதிப் படலம்

திருமகிழ் மார்பரங்கன் றிருவடித் துணையதாகு
மருமகிழ் மாலை மாறன் மலர்ப்பதத் தினிதுவாழு
மிருமகி தலத்துளோங்கு மெதிபதி சரணம்போற்றி
யருமகிமைய நூற்றெட்டா மரும்பதிப் படலஞ் சொல்வாம். [க]

குருதிகொப்பளிக்கும் வைவேற் கொற்றவன் றேவிசேரப்
பருதியிற் றிகழு மேனிப் பரமனை யிவ்வாறாகக்
கருதிநித்தமும் போந்தன்னான் கழறொழு தினிய செய்யுட்
டருதவத் திறையை நீகொள் தகையார்பெற்றாரென்றேத்தி. [உ]

அண்டமு மண்டத்துற்ற சராசர மனைத்து மாகும்
புண்டரீகக்கண் ணாழிப் புங்கவன் போந்து போந்திவ்
வெண்டிசை போற்றச் செய்த வெழில்விபவாவதாரந்
தண்டரை யின்றர்ச்சாவதார மாய்விளங்கலாலே. [ங]

அன்னது நிகர்ப்ப நம்பா லடைந்தவதாரஞ் செய்த
பன்னருஞ் சிறப்புற் றோங்கிப் பரமனு மிவ்வாறாவா
னென்னமண்டலங்கள் காக்கு மெழின்முடி மன்னர்போந்தே
சென்னிதாழ்ந் திறைஞ்சும் வேந்தன் றிருவுளத் தெண்ணாநின்றே.

பொனனக ரிமையோர் போற்றப் பொலிந்துநின் றருளுமாதி
சினகரத்தினுக்குத் தெற்கிற் றிகழ்திருப் புளியின்கீழ்பா
லனகாற் புளத்து வாழு மனையமாறனுக்குக் கோயில்
கனக ரத்தினத்தினாலே கவின்பெற வமைத்துப் பின்னர். [ரு]

சங்கராசனுக்கு முத்தித் தலமுகந் தளித்தவாதிப்
புங்கவன் மிக்கவாதிப் புனிதன் றன்பாற் றனாது
தங்குநீர் வளங்கொண்டோங்குந் தரையெழி னகராங்குள்ள
மங்கல நிதிபூண் மற்றும் வளமெலா முகந்துநல்கி. [சு]

பாட்டளி துதைந்து பாடும் பணிவளர் வகுளத் தெம்மான்
றாட்டுணை கருதியன்னோன் றழைவிழிக் கருணையாலே
வாட்டடங் கண்ணாணங்கை மாதொடுஞ் சின்னாளிங்கு
வேட்டனன் வைகி வேந்தன் விளம்பரும் பதியிற்சேர்ந்தான். [எ]

அனையவ ரிவ்வாறாக வணிபெருஞ் சுடர்கொள் மேனி
புனைதரும் வகுளத் தெம்மான் பொற்றிரு வடித்துணைக்கே
தனைநிகர் மதுரச் செய்யுட் டவப்பிரான் பலவாறாய
நினைவரு மடிமைசெய்யா நின்றமுன் னினைய சொல்வான். [அ]

எளியனு மடியேற் கின்று ஹிதபுரு டார்த்த தத்வங்
களைவிளக் குறுவிசேடார்த் தங்களை யெல்லாங் கைசே
ருளமயக் கறவே யுள்ள முகந்துரைத் தருடி யென்றே
வளமலர்க் கரங்கள் கூப்பி வணங்கினன் வழங்கினுனல். [கூ]

இன்னணம் பரமன் முன்ன ரிசைத்தன னிற்குங்காலை
துன்னுமெய்ஞ்ஞான நித்ய சூரிகடமக்கிலாது
பின்னெவர்களுக்கு மெட்டாப் பேறரித் தாகியோங்குந்
தன்னிக ரில்லாவைகுந் தத்தினிற் பொலிந்துவாழும். [௰]

திருவினயக னெண்போதின் செல்வனன் றிட்டசாப
மிருவிநாயகன் றுதைக்கன் றீர்த்தவன் கமலபாத
மருவினய கருவோட்டி வானுகந் தளிக்குமெம்மான்
பொருவினயக மாறற்குப் புகழ்ந்தெதிர் விழிகொடுப்பான். [௰௧]

கருத்தினிற் கருதாமுன்னர்க் கனுழனுமுன்னர்த்தோன்ற
வெருத்தமீ தலரின் ம்மன்மா திருநில மாது நீளை
யருத்தியி னுடன்வந் தேற வயிர்பொலன் கிரியின்மீது
கருத்ததோர்வெற் புவந்து கலந்தெனத் திகழத்தோன்றி. [௰௨]

இருமருங் கினிது வாழு மிந்திரை முதலாமூவர்
கருவிழி யெனுங்கார் வண்டின் கண்முக மலரின்வீழப்
பொருதயிற் றிகிரி யாதி பூங்கரத் தடக்குந்துய்ய
செருவிகற் படைகளேந்து முறைமுறை திகழ்மின்காட்ட. [௰௩]

அங்கையிற் பிரம்பொன் றேந்தி யண்டாண்ட முழுதுங் காக்கும்
பொங்கருட் சேனைநாதன் புகழ்ந்தனன் முன்னரேகத்
துங்கவில் வினைதீர் நித்ய சூரிகள் நெருக்கிப்பக்க
மெங்கினுஞ் சூழ்ந்து சென்னி யெழிற்கர முகிழ்த்தாராகி. [௰௪]

பாயிர மறைகளுன்கும் பாடுறப் பலர்கள் சில்லோ
ராயிர நாமங் கூறி யடியினை பணிந்தாரேத்த
தூயவர் சிலர்ப்ர தாபஞ் சொல்லியங் கரமுகிழ்த்தா
ராயவண் வெகுபராக்கென் றன்னவ ரெழுச்சிகூர. [௰௫]

வேறு

தாணுவய னேமுதலர் காணரிய மாயன் றனக்குவிழி யிற்றுறு
மெனத்தமதுளத்தே) [மங்கள முரைப்பச்
பூணரிய சங்கைகொடு மாணுறுமநேகர் பொங்குபல வாழியொடு
சேணிமிரு வெண்மதியின் வாணில வெறிக்குஞ் சித்திர மிழைத்தபல
சத்திர மெடுத்தே) [யினிழுற்றினர்கள் செல்ல
யேணுடைய சிற்சிலர்க ணீணசையி னொடுமெழிற்றிருவொண் மேனி

ஆமவர்க ளிற்சிலர்க டேமருவுமென்பூ வாசறுமி ணுசையுறு தூசி
னொடு சுண்ணம்) [போதவு மிரட்டுங்
பூமருவு மங்கைகொட மாமணமும் வீசப் போதமிக வுற்றசிலர்
காமரொணி லாவுலவு சாமரைக ளன்னொன் காயமெனு மார்கலியின்
மேயகவினங்கத்) [மேவாதிமகிர்ப்ப
தாமரையை நாடிவரு கோமள மிகும்புட் சாதியி னுயர்ந்தபல

மந்தவிள மாருத மிகுந்தடைய வால வட்டமல ரங்கைகொடு
சிட்டர்பலர்வீச) [வொண் விசுத்த விருதுக்க
விந்தையுறு பற்பலர்கள் சிந்தைமகிழ் வோடும் விசித்திர விநோத
ளந்தமற வங்கைகொடு முந்தினர் நடப்ப வற்புத மிகுந்தணிய
பொற்புலவுமின்னு) [தளர்கண் முன்னுறநடப்ப
ரெந்தையி னருங்குண முகந்தினி துரைத்தே யின்னிசை யிசைத்

அண்டபகி ரண்டமுழு துண்டவிறை வந்தா னக்கனய னுக்கரிய
விக்கிரமன் வந்தான்) [தானுக வுற்றவ னடைந்தான்
முண்டகமின் மார்பினிடை கொண்டபரன் வந்தான் முற்றுமுயிர்
பண்டைமறை நாவினிலுங் கண்டறிய கில்லாப் பராதீன மற்றிலகு
புராதன னெழுந்தா) [பல நற்சின நவின்றன கறங்க
னெண்டிசையு மண்டிசைகொள் கொண்டல்வணன் வந்தா னென்று

ஆடக மணிக்குழைகள் பாடலை தரப்பொன் னாத்தவொ ணரிப்பரி
புரத்தொலி கறங்க) [மேன்மையி னடப்ப
பாடக வடித்துணையி னுடக நடித்தே பான்மொழியர் சிற்சிலர்கண்
மாடக முடித்ததிரை நாடிய முழக்கோ மாறரிய கோடையிடி
யேறதுகொலென்றே) [கறங்க
நீடக மயிர்ப்புறவே கோடணிய கள்ள நிகழ்த்தரிய பல்லிய மிகுத்தன

இன்னன வளங்களய றன்னின நடப்ப வெங்கிலு நிறைந்துறையு
மங்கள முகுந்தன்) [கொங்கை யபிராணி
பன்னக முடித்தலய னின்னலொழி யெம்மான் பங்கய வரும்பனைய

மன்னவன் முதற்சுரர்க டன்னடி வணங்க வந்தருள் புரிந்தவ
னெழுந்தனன் விரைந்தே) [ரந்தா நிறைந்தான்
தன்னைநிகராயசுட ரென்னவொளி பொங்கிச் சந்தமுறு மாறனெதி

வாரண மளித்தருளு நாரணனிவ் வாறு வானக மிசைப்பொலிய
வானகு மகிழ்ப்பூந்) [துன்னுவினை தீர்ப்பான்
தாரணியு மார்பனிசை தாரணி யுயர்ந்தோன் றன்னடி வணங்குமவர்
சீரணிய பொற்கமல வேரணிய கண்க டிறந்துவகை நீர்மடை திறந்
தொழுக நீல்வா) [முகிழ்த்தன னுவந்தே
னேரணவு குஞ்சிமிசை யாரமலரங்கை நிகழ்த்தரிய வன்பொடு

வேறு

செங்கவி னுறுபைங் கமலம்வீற் றிருக்குந் திருமக ணாயக னெம்மான்
சங்குடன் பதும விரேகைகள் பரந்து தாமரை மலரொடு மிகவிப்
பொங்குமெய் யுளவன் பொடுதொழு மவர்கள் பொருந்துவெம்
[பவப்பிணி மருந்தா
யங்கண்மாஞால மகலிரு விசும்பு மளந்தபொற் றிருவடித் துணையும்

வேறு

